REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 3 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 157 | Wednesday 03, July, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதில் நிச்சயமற்ற தன்மை முடிவு

**நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க**

இலங்கையில் கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதில் இருந்த அனைத்து நிச்சயமற்ற தன்மைகளும் தற்போது முடிவுக்கு வந்துவிட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் இருப்பதாகவும், ஆனால் இலங்கையில் உள்ள சில 06

# கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சிலர் உண்மைக்குப் புறம்பான பிரசாரம்



## கடனைத் திருப்பிச் செலுத்த 2028 வரையான சலுகைக் காலத்தால் நாட்டுக்கு 500 மில்.டொலர் மீதம்

பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் பல்வேறு நபர்கள் கடன் மறுசீரமைப்பு மற்றும் அது தொடர்பான விடயங்கள் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டுக்கான சரியான கொள்கையுடன் அரசாங்கம் முன்னோக்கிச் செல்லும் போது, விமர்சனம் செய்வோர் அதிகாரத்துக்காக நாளாந்தம் வெவ்வேறு கதைகளை உருவாக்கி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டில் வெற்றிபெற்ற நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில், இலங்கை முன்னணியில் இருப்பதாகவும், இது நாட்டுக்கு கிடைத்த தனித்துவமான வெற்றி என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (02) பாராளுமன்றத்தில் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அந்த உரையின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நற்செய்தியை எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்லும் வகையில், அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை வெற்றிபெறச் செய்து நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலான செயற்பாட்டில் கட்சி, நிற பேதமின்றி இணைந்து கொள்ளுமாறு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவருக்கும் ஜனாதிபதி மீண்டும் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி 02 ஆம் பக்கம்

- வட்டி வீதங்கள் கணிசமான அளவில் குறைப்பு
- கொள்கையுடன் அரசாங்கம் முன்னோக்கி செல்லும் போது, அதிகாரத்துக்கு வருவதற்காக விமர்சிப்போர் நாளாந்தம் வெவ்வேறு கதைகள்.
- எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய் வரிசைகளிலும் காத்திருக்கும் நாட்கள் முடிந்துவிட்டன என்பது மகிழ்ச்சியான செய்தி அல்லவா?
- கடன் மறுசீரமைப்பில் வெற்றி பெற்ற நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் இலங்கை முன்னணியில்.
- இந்த வேலைத்திட்டத்தில் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், யார் ஆட்சிக்கு வந்தாலும் பின்னோக்கிச் செல்ல முடியாது.
- அரசியல் அதிகாரத்துக்காக அன்றி, நாட்டுக்காகவே நான் முடிவுகளை எடுக்கிறேன்.

## பதவிக்காலம் முடிவதற்குள் தமிழருக்கு தீர்வு வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் 03 மாதங்களே உள்ளன. இது முடிவதற்குள் தமிழ்த் தேசிய பிரச்சினையை ஜனாதிபதி தீர்த்து வைக்க வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பந்தனின் ஆயுட் காலத்திலேயே தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்று ஜனாதிபதி சபையில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் 06

## இன்று பி.ப. 2 முதல் மாலை 4 வரை
## இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு பாராளுமன்றில் இறுதி அஞ்சலி

**சகல எம்.பிக்களுக்கும் அழைப்பு**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தனின் பூதவுடலுக்கு இன்று (03) பாராளுமன்ற வளாகத்தில் இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கேட்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

ஆர். இரா.சம்பந்தனின் பூதவுடல் இன்று பிற்பகல் 2.00 மணி 06

## சம்பந்தனின் பூதவுடலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சம்பந்தனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். ஜனாதிபதியுடன் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று (02) கொழும்பிலுள்ள தனியார் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தியபின் குடும்பத்தாருக்கும் ஆறுதல் தெரிவித்தனர். 06



## 03 வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு
## மற்றுமொரு உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பு

## தயாசிறியை SLFP பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்க இடைக்கால தடை



பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும், கட்சி உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதற்கு கட்சி எடுத்துள்ள தீர்மானத்தை இடைநிறுத்த இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (02) பிறப்பித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் பிரதிச் 06

## மன்னார் மடு தேவாலய பகுதியில் வீடமைப்புக்கு இந்தியா நிதி உதவி



மன்னாரில் மடு தேவாலய பகுதியில் குறைந்த செலவில் வீடமைப்பு திட்டம் தொடர்பான நடைமுறைகளை முறைப்படுத்துவதற்காக இந்தியா மற்றும் இலங்கைக்கிடையே இராஜதந்திர கடிதங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன. இவ் வீட்டு திட்டத்துக்கு 100 மில்லியன் ரூபாவை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் நகர 06

## லிற்றோ சமையல் எரிவாயு விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

லிற்றோ சமையல் எரிவாயு விலைகள் நேற்று செவ்வாய்க்கிழமை



**புதிய விலை:**
12.5 கிலோ – ரூ. 3,690,
05 கிலோ – ரூ. 1,482,
2.5 கிலோ – ரூ. 694

(02) நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக லிற்றோ 06

## SLFP லிருந்து தூக்கி எறியப்பட்டதால் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

**எனது மகன் அரசியல் களத்தில் இறங்குவார்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தாம், தூக்கி எறியப்பட்டுள்ளதாகவும், இனிமேல் நாட்டில் எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லையென்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 06

## கெஹெலிய தாக்கல் செய்த மனு மீதான தீர்மானம் ஆக. 01 இல்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வது மற்றும் அவரை பிணையில் விடுவிப்பதற்கான கோரிக்கை பற்றிய தீர்மானம் ஓகஸ்ட் முதலாம் திகதி அறிவிக்கப்படுமென, மேன்முறையீட்டு 06

## சமூக வலைத்தளங்களில் பொலிஸ் இலச்சினையுடன் போலிக் கடிதம்



போலியாக தயாரிக்கப்பட்ட கடிதமொன்று சமூக வலைத்தளங்களில் பரவி வருவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பௌத்த தர்ம சக்கரத்துடன் நீல நிறத்தில் பொலிஸ் சின்னம், இறப்பர் முத்திரை மற்றும் மஞ்சள் 06

## யாழ். பண்ணைக் கடலில்
## முரல் மீன் தாக்குதலில் இளைஞன் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**



யாழ். பண்ணை கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர், 06

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# இதுவரை நாம் சரியான பாதையில் பயணம் செய்ததால் குறுகிய காலத்தில் முன்னேற்றத்தை அடைய முடிந்தது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட உரை

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த இரண்டு வருடங்களாக தாம், அரசியலில் ஈடுபட வில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, எப்பொழுதும் நாட்டுக்காகவே தீர்மானங்களை எடுத்து வருவதாகவும், அரசியல் அதிகாரத்திற்காகவோ அல்லது பிரபல்யத்திற்காகவோ முடிவுகள் எடுப்பதில்லை எனவும் வலியுறுத்தினார்.

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான சவாலான பயணம் தொடங்கிய நாள் முதல், நான் அவ்வப்போது பாராளுமன்றத்தில் இது தொடர்பிலான விடயங்களை முன்வைத்தேன்.

முதலில் நாங்கள் பின்பற்றி வரும் திட்டங்களை பாராளுமன்றத்தில் விளக்கினோம். அதன் பிறகு நாங்கள் செய்த முன்னேற்றம் குறித்து விளக்கினோம்.

2022ஆம் ஆண்டு கடன் செலுத்த முடியாத நாட்டிற்கு, மீண்டும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சவாலான பயணத்தில் இன்னுமொரு முக்கியமான மைல்கல்லை எட்டுவதற்கு எம்மால் முடிந்தது.

கடந்த ஜூன் 26 இல், எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் மீண்டும் கடனைச் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முடிந்தது.

அமைச்சரவையினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள், எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இணக்கப்பாடுகளிலும், ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டனர். அன்றிரவு இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக நாட்டு மக்களுக்கு இதுகுறித்து அறிவித்தேன்.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் சவால்மிக்க பயணத்தின் ஆரம்ப நாள் முதல் நான் இதுகுறித்து அவ்வப்போது பாராளுமன்றத்தில் தகவல்களை முன்வைத்தேன். முதலில் நாம் பின்பற்றும் திட்டங்கள் குறித்து பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்தினோம். அதன் பின்னர் நாம் பெற்றுக்கொண்ட முன்னேற்றங்கள் குறித்து தகவல்களை முன்வைத்தோம்.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்ட பின்னர், எமது நான்கு அம்சக் கொள்கைகளை நான் பாராளுமன்றத்தில் முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,
2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுனர்களான லாஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,
3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,
4. இத்திட்டத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

அதிலிருந்து நாம் கடினமான, கஷ்டமான பயணத்தை ஆரம்பித்தோம். அந்தப் பயணமே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை நாம் அறிந்திருந்தோம். படிப்படியாக நாம் முன்னேறிச் சென்றோம். 2023_ 2024 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அந்த வேலைத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தினோம்.

2023 மார்ச் மாதத்தில் ஐ.எம்.எப். நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாடுகளை எட்டினோம். அதன் முதல் தவணையை 2023ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி பெற்றுக்கொண்டோம். நாம் அடைந்திருந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்த பின்னர், இரண்டாம் தவணையை 2023ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதியும், மூன்றாம் தவணையை 2024 ஜூன் 12ஆம் திகதியும் பெற்றுக்கொண்டோம்.

ஐ.எம்.எப். வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், கடன் மறுசீரமைப்பிற்கான பேச்சுவார்த்தைகளை நாம் ஆரம்பித்தோம். இந்தப் பணிகளுக்குத் தேவையான நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக லஸார்ட் (Lazard) மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் (Clifford Chance) சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பை தொடர்ந்து பெற்றோம்.

எமது வெளிநாட்டுக் கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.



இதில் 10.6 பில்லியன் டொலர் இருதரப்பு கடன்,11.7 பில்லியன் டொலர்கள் பல்தரப்பு கடன்,14.7 பில்லியன் டொலர் வணிகக் கடன்,12.5 பில்லியன் டொலர் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை. கடனை வெட்டிவிடுதல், கடன் சலுகை காலம், கடனை மீளச் செலுத்தும் கால அவகாசத்தை நீடித்தல் உள்ளடங்களான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதடனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றத்திலும், வெளியிலும் பல தரப்பினர், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவற்றில் சில விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. சில விடயங்களில் பாதி உண்மையே இருந்தது. அதனால் கடன் மறுசீரமைப்பு குறித்த விடயங்களில் சர்வதேச நடைமுறைகளையும், உண்மைகளையும் நான் இந்தத் தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கடன்கள் என்றால் என்ன? வெளிநாடுகள் கடன்களை வழங்க எங்கிருந்து பணத்தைப் பெறப்படுகின்றன? அந்தந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தையும், சேமிப்புக்களையுமே எமக்குக் கடனாக வழங்குகின்றனர். ஆனால் எமது நாட்டில் எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்யாமல் கடன் சலுகைகளைப் பெற வேண்டும் என்று யோசனை முன்வைக்கின்றனர். அவ்வாறு நடக்காது. இது நடைமுறைச் சாத்தியமற்றது. சர்வதேச நடைமுறைகளுக்கமைய அவ்வாறு செய்ய முடியாது. மக்களின் வரிப் பணத்தைப் போலவே, அவர்களின் சேமிப்புக்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும்போது, எங்களுக்கும் சில அர்ப்பணிப்புக்களைச் செய்ய நேரிடும். நாம் இதற்காக அர்ப்பணிப்புச் செய்யாவிட்டால், அந்நாட்டு மக்கள் எங்களுக்காக அர்ப்பணிப்புச் செய்ய முன்வர மாட்டார்கள்.

அதுமட்டுமன்றி, கடன் மறுசீரமைப்பு என்பது மிகக் கடினமான பணி. இந்தப் பணி கடினமானது மற்றும் வேதனையானது என்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். கடன் வழங்குநர்களுக்கும், கடனாளிகளுக்கும், நாட்டு மக்களுக்கும், மத்தியஸ்தர்களுக்கும், இந்தப் பணி கடினமானது. உத்தியோகபூர்வ இரு தரப்பு கடன் வழங்குநர்கள், அடிப்படை கடன் தொகையைக் குறைக்கமாட்டார்கள். எமக்கு சலுகைகளை மட்டுமே பெற முடியும். கடன் செலுத்தும் காலத்தை நீடித்துக் கொள்வது, கடன் சலுகைக் காலம், வட்டி வீதத்தைக் குறைப்பது ஆகிய விடயங்களில் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனினும், இந்த யதார்த்தைப் புரிந்துகொள்ளாமல், சிலர் அடிப்படைக் கடன் தொகையைக் குறைப்பது குறித்து இலங்கை அரசாங்கம் கோரிக்கை முன்வைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர். இன்னும் சிலர் தாம் அதிகாரத்திற்கு வந்தபின்னர் அடிப்படைக் கடன் தொகையில் 50 வீதத்தைக் குறைத்துக் கொள்வதற்கு கடன் வழங்கியுள்ள நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகக் கூறுகின்றனர். இவ்வாறான பணியைச் செய்வதற்கு இரு தரப்பினரும் இணக்கம் காண்பது அவசியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் சொல்வதை மட்டும் கடன் வழங்குநர்கள் செய்யமாட்டார்கள் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேச பொருளாதார வழிமுறைகள் குறித்து இவர்களுக்கு எந்தப் புரிதலும் இல்லை என்பதே இவ்வாறான கருத்துக்களின் மூலம் தெரிகிறது.

> **நாட்டை மீளக்கட்டியெழுப்பும் சவாலான முயற்சியில் கட்சி, நிற வேறுபாடின்றி இணையுமாறு நாட்டை நேசிப்பவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்**

கடன் மறுசீரமைப்பை எவ்வாறு முன்னெடுப்பது என்பது குறித்த இறுதித் தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் கடன் வழங்குநருக்கோ, கடன் பெறுநருக்கோ இல்லை. இதுகுறித்த தீர்மானத்தை ஐ.எம்.எப் நிறுவனமே எடுக்கும். நாட்டில் கடன் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குத் தேவையான மறுசீரமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் அந்த நிறுவனமே தீர்மானிக்கும். அந்தந்த நாடுகளின் பொருளாதார பலம் குறித்து சுயாதீன மதிப்பீட்டின் பின்னர் அந்தத் தீர்மானத்தை எடுப்பார்கள்.

எமது நாட்டில் கடன் ஸ்திரத்தன்மை இல்லை என்று ஐ.எம்.எப். நிறுவனம் 2022ஆம் ஆண்டு நாம் கஷ்டத்தில் விழுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே எங்களுக்கு அறிவித்திருந்தது. அதேபோல் ஐ.எம்.எப். நிறுவனம் பின்பற்றும் நடைமுறை நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. குறைந்த வருமானம் பெறும் நாடுக் தொடர்பில் ஒரு நடைமுறையைப் பின்பற்றுகின்றனர். நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்தொடர்பில் வேறொரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. இதுகுறித்து ஒரு உதாரணத்தை முன்வைக்கிறேன். இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலில் வருகிறது.

நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்காக அறிமுகப்படுத்தியுள்ள புதிய கடன் ஸ்திரத்தன்மை விசேட வரையறைகளைப் பயன்படுத்தி கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கைக்காக அவர்கள் முன்வைத்த செயல்திட்டத்திற்கமைய 2032 ஆண்டு அரச கடன் தொகை, மொத்த தேசிய உற்பத்தியில் 95 வீதத்தையும் விட குறைத்திட வேண்டும். குறைந்த வருமானம் பெறும் நாடான கானாவிற்கு இதற்கு மாறான வேலைத் திட்டத்தையே முன்வைத்திருந்தனர்.

இந்த வேலைத் திட்டத்திற்கமைய 2028ஆம் ஆண்டில் அவர்களின் அரச கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 55 வீதத்தைவிட குறைவானதாக இருக்க வேண்டும். கானாவும் இலங்கையைப் போன்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அந்நாட்டு ஜனாதிபதியும் நானும் இதுகுறித்து அடிக்கடி பேசிவந்துள்ளோம். ஆனால் கானா என்பது குறைந்த வருமானம் பெறும் நாடாகும். எனினும், எமது இரு நாடுகளுக்கும் பொதுவான சில விடயங்களும் இருந்தன. சில விடயங்கள் மாறுபட்டிருந்தன. ஆனால் இரு நாடுகளுக்கும் இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளது.

> **இந்த வேலைத்திட்டத்தில் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும், யார் ஆட்சிக்கு வந்தாலும் பின்னோக்கிச் செல்ல முடியாது**

இந்தப் பின்னணியில், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் பரிஸ் கழகம், இந்தியா மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது. எனினும், இதில் எந்தவொரு தரப்பினருக்கும் சிறப்பிடம் கொடுப்பதற்கு எமக்கு அனுமதியிருக்கவில்லை. இந்த இரு தரப்பினரையும் சமமாக நடத்தும் பொது நிபந்தனைகளை தயாரிப்பதே எமக்கிருந்து பாரிய சவாலாகும்.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பூகோள அரசியல் முன்னேற்றங்களுக்கு மத்தியிலேயே நாம் இந்த இந்த சிக்கலான சவாலை சந்தித்தோம். இதனால் எமது இலக்குகளை நோக்கிப் பயணிப்பது இலகுவானதாக அமையவில்லை. பொம்மலாட்டத்தையும் முகக் கவச நடனத்தையும் ஒன்றாக ஆடுவதைப் போல இது மிகவும் சிக்கலான பணியாக இருந்தது. இது செய்ய முடியாத பணியாகும். இருந்தாலும் நாம் செய்து முடித்தோம். எனினும், இந்த அனைத்து கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் ஐ.எம்.எப். வேலைத் திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வெளிநாட்டு இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்தது.

இந்த குறுகிய காலத்திற்குள் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் பட்டியலில் நாம் முன்னணி வகிக்கிறோம். இது மிகப் பெரிய வெற்றியாகும். இது நற்செய்தியாகும்.

கடனை முழுமையாக செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், 2043ஆம் ஆண்டு வரை அவகாசம் கிடைத்துள்ளது.

பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர வேண்டும்.அந்நியச் செலாவணியை அதிகரித்துகொள்ள வேண்டும். அரச அடிப்படை நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் கடனை மீளச் செலுத்தும் இயலுமையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இவற்றின் ஊடாக எதிர்காலத்தில் வலுவான நிலையில் இருந்து கடன் செலுத்துவதற்கான வாய்ப்பு கிட்டும்.

முன்னதாக இரண்டு ஒப்பந்தங்களை மட்டும் நிதி செயற்குழுவில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தற்போது தனியார் பிணைமுறி கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. ஆனால், பிரான்சில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தேர்தல் ஒன்று நடப்பதால் இதனை சில நாட்களுக்கு பிற்போடுமாறு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கோரியுள்ளனர். இதற்கு நான் இணக்கம் தெரிவித்துள்ளேன். எனினும், இதனால் எமக்கு பாதிப்பு ஏற்படாது. கானாவும், இலங்கையும் இவற்றில் கையெழுத்திட்டுள்ளன. இதுபற்றிய தெளிவுபடுத்தல்களுக்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்க வேண்டும். அதேபோல் பிரான்சின் புதிய அரசாங்கத்துடன் பேச வேண்டிய இன்னும் பல விடயங்கள் இருக்கக் கூடும்.

பின்னர் இதுகுறித்து ஆழமாகவும், விரிவாகவும் ஆராயுமாறு நிதி தொடர்பான குழுவிடம் கேட்டுக் கொள்கிறேன்.

நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுடன் இது குறித்து பேசியிருக்கிறேன். இந்த தகவல்கள் அனைத்தையும் சேர்த்துக் கொண்டு இதுகுறித்து ஆழமான, விரிவாக ஆராயுமாறு கேட்டுக் கொள்கிறேன். இது எமது எதிர்காலம் தொடர்பானது. எனவே அனைவரும் இதுகுறித்து ஆராய வேண்டும்.

இதுவரையில் நாம் சரியான பாதையில் பயணித்ததால் குறுகிய காலத்தில் இவ்வாறான முன்னேற்றத்தை அடைய முடிந்தது. தற்போது நாம் அடைந்துள்ள சாத்தியமான பெறுபேறுகளினால் நாட்டிற்கு கிடைக்கும் பலன்கள் குறித்தும் பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கடன் செலுத்தும் இயலுமை இல்லை என 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு வெளிநாடும் எமக்கு கடன் வழங்க முன்வரவில்லை. அவ்வாறான பின்னணியில் அவர்களால் சட்டபூர்வமாக கடன் வழங்கவும் முடியாது. இந்தக் காலப்பகுதியில் நட்பு நாடுகள் என்ற வகையில், இந்தியாவும், பங்களாதேசும் குறுகிய கால கடன் உதவிகளை வழங்கின.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் பல வழிகளில் சலுகைக் கடன்களைப் பெற்றுத் தந்தன. அதுதவிர வேறெந்த நாட்டிற்கும் நீண்ட கால கடன்களை வழங்க முடியாத நிலை இருந்தது. சில அரசியல் குழுக்கள் எமது வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகளைப் பரப்பி வருகின்றன.

அநுரகுமார திஸாநாயக்க எம்.பியின் ஆதரவாளர்களின் பதிவொன்றைப் பார்த்தேன்.

'நற்செய்தி. கிழவன் நாட்டைப் பொறுப்பேற்கும் போது வெளிநாட்டுக் கடன் 71 பில்லியன். தற்போது 100 பில்லியன் டொலர்'

அநுரகுமார திஸாநாயக்க அவர்களுடன் நான் வாதப்பிரதிவாதங்கள் செய்திருக்கிறேன். முட்டி மோதியுள்ளேன். எனினும், அவரை இவ்வாறான கீழ்த்தரமாக விமர்சிக்கவில்லை. எனினும், அவரின் சில ஆதரவாளர்கள் அவரையும் சீரழிக்க முயற்சிக்கின்றனர். இந்தப் பதிவை மேற்கோள்காட்டியே அது தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்துகிறேன்.

எமது மொத்த வெளிநாட்டுக் கடன் 37 பில்லியன் டொலர்களாகும். ஆனால், இது தொடர்பில் பதிவிட்ட நபர் 71 பில்லியன் டொலர்கள் என பொய்யான தகவலை குறிப்பிட்டுள்ளார். அதேபோல் கடந்த இரண்டு வருடங்களில் 100 பில்லியன் டொலர்கள் வரை கடன்களைப் பெற்றுக் கொண்டதாகவும் பதிவிட்டுள்ளார். ஆனால், கடனை திரும்பிச் செலுத்த முடியாது என அறிவிக்கப்பட்ட பின்னர் எந்தவொரு நாடும் எமக்கு கடன் வழங்கவில்லை என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எந்தவொரு நாட்டிற்கும் எமக்கு கடன் வழங்குவதற்கான சட்டபூர்வமான அனுமதி இருக்கவில்லை. இவ்வாறான பொய்களை சமூகமயப்படுத்துவதால் இவர்கள் எதனை எதிர்பார்க்கின்றனர்?

எந்தவொரு நாடும் எமக்கு கடன் வழங்கவில்லையெனில், நாம் எவ்வாறு கடன் பெற முடியும்? நான் இங்கிலாந்து மத்திய வங்கியைக் கொள்ளையிடுவதா என்ற கேள்வியை இவர்களிடம் கேட்க விரும்புகிறேன். பதிவிட்ட அந்த நபர், என்னைவிட மத்திய வங்கியைக் கொள்ளையிட்டதில் அனுபவம் பெற்றிருக்கிறார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் இரு தரப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு மீண்டும் உருவாகியுள்ளது. எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள், பரிஸ் கழகம், சீன எக்ஸிம் வங்கி ஆகிய தரப்பினரிடம் இருந்து மீண்டும் கடன் பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

அதேபோல், வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை மீள ஆரம்பிக்கவும் முடியும்.

கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது நாடு என பெயரிடப்பட்டதாலும் அந்தந்த நாடுகள் நிதி வழங்கியதை இடைநிறுத்தியதாலும் எமது அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன. விசேடமாக கட்டுமானப் பணிகள் அனைத்தையும் மீள ஆரம்பிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. இது கட்டுமானத்துறையில் மிகப் பெரிய பாய்ச்சலாகும். அதனால் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு கிட்டும். தற்போது கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளையும் நிறைவுசெய்ய முடியும். வெளிநாட்டு வேலைத் திட்டங்கள் இடைநடுவில் நின்றுபோனதால், எமது பொருளாதார வளர்ச்சி குறைந்தது. ஆனால் தற்போது நாம் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளோம். மீண்டும் உலக நாடுகளின் நிதியுதவியுடன் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் போது அபிவிருத்திகளை மேலும் துரிதப்படுத்த முடியும்.

வெளிநாட்டு கடன்கள் தொடர்பில் சமூகத்தில் பரப்பப்படும் பொய்கள் தொடர்பாக சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இலங்கையைப் போன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றினால் தனியாக இயங்க முடியாது. தனியாக இயங்கும் வகையில் வருமானத்தை நாம் ஈட்டவும் இல்லை.

அதனால், நாம் கடன்களையும், நிவாரணங்களையும் பெற்றுக் கொள்ள நேரிடும். ஆனால் நாளாந்தம் உணவுத் தேவைக்காகவும், சம்பளம் வழங்கவும் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது. சுதந்திரத்தின் பின் எமது நாடு செய்த பெரும் பிழை இதுவாகும்.

சம்பளத்தை அதிகரிக்க கடன்களைப் பயன்படுத்தினோம். அரச தொழில் வழங்க கடன்களைப் பயன்படுத்தினோம். இலவசமாக உணவுகளை வழங்க கடன்களைப் பயன்படுத்தினோம். உணவு, எரிபொருள், மின்சாரம் போன்றவற்றை குறைந்த செலவில் வழங்குவதற்காகவும் கடன்களைப் பயன்படுத்தினோம். அரச சேவைகளின் நட்டத்தை ஈடுசெய்ய கடன்களைப் பயன்படுத்தினோம்.

இவை எதனையும் செய்யாமல் எம்மால் அஸ்வெசும நிவாரணம் வழங்க முடிந்தது. பயனாளிகளை அதிகரிக்க முடிந்தது. தலா 10 கிலோ அரிசியை இரண்டு மாதங்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தது. வீட்டுரிமையை வழங்க முடிந்தது. காணி உறுதிகளை வழங்க முடிந்தது. வெளிநாட்டு கடன் பெறாமல் இவை அனைத்தையும் நாம் செய்திருக்கிறோம்.

சில அரசியல் குழுக்கள், ஆட்சிக்கு வந்தவுடன் சம்பளத்தை அதிகரிப்போம் என்று கூறுகின்றனர். வரியைக் குறைப்போம், சலுகைகளை வழங்குவோம் என்று ஆயிரக் கணக்கான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். ஆனால் அதற்கான பணத்தை எப்படி திரட்டப்போகிறார்கள் என்பது தொடர்பில் ஒருவார்த்தைக் கூட பேசுவதில்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)

> **நாட்டுக்கு சரியான கொள்கையுடன் அரசாங்கம் முன்னோக்கி செல்லும் போது, அதிகாரத்திற்கு வருவதற்காக விமர்சிப்போர் நாளாந்தம் வெவ்வேறு கதைகளைக் கூறுகின்றனர்**

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜுலை 3 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.35
ளுஹர் - 12.16
அஸர் - 03.43
மஃரிப் - 06.31
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆனி 19
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# போஷாக்கு குறைபாடு, வேலையின்மை வறுமையை நிவர்த்திக்கவே அஸ்வெசும, உறுமய

## பொருளாதாரம் சரிவடைந்து மக்கள் சிரமப்படும் வேளையில், பிரதமர் பதவியை ஏற்காமல், ஓடுவது நற்செய்தியா? துயரச் செய்தியா?

போஷாக்கு குறைப்பாடு, வறுமை, வேலையின்மை உள்ளிட்ட பிரச்சினைகளை நிவர்த்திக்கவே இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான தொழிற்சாலைகள் மற்றும் அஸ்வெசும, உறுமய போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

போஷாக்கு குறைபாடு, வறுமை, வேலையின்மை என்பன நாட்டுக்கு நற்செய்தியா? துயர் செய்தியா? என்று பாராளுமன்றத்தில் நேற்று (02) எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.



நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்து மக்கள் சிரமப்படும் வேளையில், பிரதமர் பதவியை ஏற்காமல், பயந்து ஓடுவது நற்செய்தியா? துயர் செய்தியா? என்று பதில் கேள்வி கேட்ட ஜனாதிபதி மேலும் கூறுகையில்,

போஷாக்கு குறைபாட்டினால் பிள்ளைகள் பாதிக்கப்படுவது நல்லதா கெட்டதா என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இது கெட்டதாகும். அதனால்தான், அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்தினோம். குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கு பத்து கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

வறுமை நல்லதா கெட்டதா என்று கேட்கிறார்கள்.

வறுமை கெட்டது!

அதனால்தான் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இரண்டரை லட்சம் பேருக்கு அந்த வீடுகளின் உரிமை வழங்கப்படுகிறது. வேறு என்ன வழங்க வேண்டும்?

வேலையின்மை நல்லதா கெட்டதா என்றும் கேள்வி எழுப்பினார்.

வேலையின்மை நல்லத்தல்ல என்பதாலேயே புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறோம். புதிய முதலீடுகளையும் கொண்டு வருகிறோம்.

அதேபோல் நான், இன்னும் ஒரு விடயத்தை கேட்க விரும்புகிறேன். நாட்டின் பொருளாதாரம் சரிந்து மக்கள் சிரமப்படும் போது, பிரதமர் பதவியை ஏற்காமல் பயந்து ஓடுவது நல்லதா? கெட்டதா?

கட்டுமான ஒப்பந் ததாரர்களுக்கு ஏற்கனவே 200 பில்லியன் ரூபாய் நிலுவைத் தொகை செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தி உங்களுக்கு வருத்தம் அளிக்கிறதா? 06

## இரா.சம்பந்தனின் மறைவால் பாராளுமன்றில் வெற்றிடம்

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் காலமானதால் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (02) உத்தியோகபூர்வமாக பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அவரது மறைவுக்காக சபையோர் வெளியிட்ட துயரை குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இரங்கல் தீர்மானம் எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அஞ்சலி செலுத்தும் முகமாக பாராளுமன்றத்தின் பிரதான வாயிலுக்கு அடுத்துள்ள விழா மண்டபத்தில் இன்று (03) பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அவரது உடல் அஞ்சலிக்காக வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

## மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலைகள் நிர்ணயம்

### முறைமைக்கான வர்த்தமானி வெளியீடு

மருந்து வகைகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பான முறைமையை அறிமுகப்படுத்தும் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த மாதம் (28) சுகாதார அமைச்சர் டொக்டர் கலாநிதி ரமேஷ் பத்திரனவினால் வெளியிடப்பட்டிருந்தது.

ஒரு குறிப்பிட்ட மருந்தின் அளவு, ஆற்றல் தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்துதல் என்பன விலை நிர்ணய முறையின் நோக்கமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு வழிகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த விலை நிர்ணய முறையில், சர்வதேச மற்றும் உள்நாட்டில் பயன்படுத்தப்படும் விலை, தகவல்கள் மற்றும் ஆதாரங்களை பயன்படுத்த வேண்டாமென வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அமைச்சர் பிறப்பித்த உத்தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் உயர்நீதிமன்ற தீர்மானம் அறிவிப்பு

### சில சரத்துக்களுக்கு விசேட பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட 'அரச நிதி முகாமைத்துவம்' சட்டமூலத்தின் சில சரத்துக்கள் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடனும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமும் நிறைவேற்றப்பட வேண்டும் என, உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார்.

குறித்த சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 121(1)வது சரத்தின் பிரகாரம் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட 'அரச நிதி முகாமைத்துவம்' சட்டமூலத்தில் சில சரத்துக்கள் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடனும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலமும் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதன்படி, "நீதித்துறை சேவை உறுப்பினர்கள்" என்ற வார்த்தைகளுக்கு கொடுக்கப்பட்ட விளக்கம் அரசியலமைப்பின் 3வது பிரிவுடன் வாசிக்கப்பட்ட 4(சீ), உறுப்பு 12(1) மற்றும் பிரிவு 108 ஆகியவற்றுடன் முரண்படுகிறது.

இவை பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை மூலமாகவும் சர்வஜன வாக்கெடுப்பு மூலமும் நிறைவேற்றப்பட வேண்டும்.

எனினும் உயர் நீதிமன்றத் தீர்ப்பின் சுருக்கத்தில் பரிந்துரைக்கப்பட்டபடி, பிரிவு 71 இல் "நீதிச் சேவை உறுப்பினர்கள்" என்ற வார்த்தைகளுக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. 06

## அதிகார பகிர்வுக்காக சம்பந்தன் பயணித்த தூரத்தில் இன்னும் சிறியளவே எஞ்சியுள்ளது

### இத்தூரத்தை நாம் அடைந்தே தீருவோம் - ஜனாதிபதி

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மோதலின்றி அதிகாரத்தை பகிர்வதற்கான செயற்பாடுகளில் இரா.சம்பந்தன் பயணித்த தூரத்தை அடைவதற்கு இன்னும் குறுகிய தூரமே இருப்பதாகவும் அந்த தூரத்தை நாம் அடைவோம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு தொடர்பில் அனுதாபம் தெரிவித்து உரையாற்றுகையிலே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் .

இது தொடர்பில் மேலும் தெரிவித்த ஜனாதிபதி,

பாராளுமன்றத்தில் எம்மோடு பணியாற்றிய சக நண்பர் இரா. சம்பந்தன் காலமாகிவிட்டார். நாட்டின் இக்கட்டான நிலைமைகளில் நாங்கள் ஒன்றாக பணியாற்றியுள்ளோம். அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முக்கிய உறுப்பினராக இருந்ததுடன், நாட்டின் இறையாண்மைக்காக பாடுபட்டதையும் குறிப்பிட வேண்டும்.

"இந்த நாட்டை நான் பிரிப்பேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?" என்று அவர் ஒருமுறை என்னிடம் கேட்டார். சம்பந்தன் அரசியலுக்கு வந்த போது, நான் சிறுவனாக இருந்தேன். இங்குள்ளவர்கள் பலர் பிறந்தும் கூட இருக்க முடியாது.

அதிகாரம் எவ்வாறு பகிரப்பட வேண்டும். நாம் அதற்காக சண்டையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே அவர் காணப்பட்டார். இதற்காக அதிகளவில் அவர் பாடுபட்டார். அந்தப் பயணத்தில் குறுகிய தூரமே இருந்தது. தற்போது அவர் இல்லாவிட்டாலும் அந்த தூரத்தை நாம் அடைவோம்.

## சம்பந்தனின் வெற்றிடத்துக்கு குகதாசன் நியமிக்கப்படுவார்

### சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவிப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் மறைவையடுத்து பாராளுமன்றத்தில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார். இதையடுத்து தேர்தல் சட்ட விதிகளின் படி இரா.சம்பந்தன் வெற்றிடத்துக்கு எஸ் குகதாசன் தெரிவாகவுள்ளார்.

அடுத்த சில தினங்களில் தேர்தல் ஆணையத்தின் வர்த்தமானியில் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும். எதிர்வரும் (09 ) செவ்வாய்க்கிழமை மீண்டும் பாராளுமன்றம் கூடும் போது, அவரது பதவி பிரமாணம் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற குழுத்தலைவராக இரா. சம்பந்தனை மீண்டும் தெரிவு செய்திருந்தனர்.

அன்னாரின் அறைவையடுத்து மீண்டும் 10 எம்பிக்களும் ஒருவரை பாராளுமன்ற குழுத்தலைவராக தெரிவு செய்யவேண்டும். ஆனால் அவர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவராக கருதப்படமாட்டாது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவர் தெரிவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே வரவேண்டும் என்ற விதி இல்லை. கட்சியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒருவரையும் கட்சிகள் விரும்பினால் தெரிவுசெய்யலாம்.

ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் தெரிவு இப்போதைக்கு அவசியம். அடுத்த பொதுத்தேர்தல் இடம்பெறும் வரை அப்படி ஒரு தலைவர் தெரிவு அவசியம் இல்லை என்பதே எனது கருத்து.

சிலர் பாராளுமன்ற குழுத்தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவராக ஒப்பீடு செய்வது தவறான புரிதலெனவும் பா.அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானில் தொழில் வாய்ப்புகள் பரீட்சைக்கான திகதிகள் அறிவிப்பு

ஜப்பான் தொழில்வாய்ப்புகளுக்காக ஜப்பான் அரசாங்கம் நடத்தும் (SSW) திறன் பரீட்சைகளுக்கான பரீட்சை திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE) இதுபற்றி அறிவித்துள்ளது.

அடிப்படை மொழி பரீட்சை, பராமரிப்பு பணியாளர், உணவு சேவை, விவசாயம், கட்டுமானம் மற்றும் தங்குமிடத் தொழில் துறைகளுக்கான பரீட்சைகள் ஜூலை மாதம் நடத்தப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 05 இல் அமைந்துள்ள அவுஸ்திரேலிய வர்த்தக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (ACBT) நிறுவனத்தில் இப்பரீட்சை குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறவுள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு

## மற்றுமொரு உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பு

### 02 உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச்சாத்து அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் மேலும் ஒரு உடன்படிக்கை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,



நிகழ்ச்சி நிரலை இன்று அல்லது நாளை தயாரிப்பது தொடர்பிலும் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை தொடர்பாகவும் ஜனாதிபதி தனது விஷேட உரையில் சபையில் தெளிவுபடுத்தினார். 06

## சாத்வீகத்தில் சம்பந்தன் ஐயாவுக்கு இருந்த நம்பிக்கைகளை மதிக்கிறேன்

அஹிம்சை முறையில் வென்றெடுக்க சம்பந்தன் ஐயா, அரும்பாடுபட்டதாக தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா அனுதாபம் தெரிவித்துள்ளார்.தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தனின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபத்தில் தெரிவித்துள்ளதாவது:

உரிமை அரசியலை வென்றெடுப்பதற்கான செயற்பாடுகள், சமூக மோதல்களாக மாறுவதை அமரர் சம்பந்தன் விரும்பவில்லை. பலாத்கார முறைகள் தமிழ் தேசியத்துக்கு சாபக்கேடாகவே அமையும் என்ற நிதானம் அவரிடமிருந்தது.



இதனால்தான், அவரது தலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சரியாக வழி நடத்தப்பட்டது. மறைந்த தலைவர் அஷ்ரபும் அடிக்கடி சம்பந்தனுடன் பேச்சுக்களை நடத்தியதும் இந்த நம்பிக்கையினாலேயே. சில நிர்ப்பந்தங்களுக்கு இணங்க நேரிட்டபோதும், வன்முறை வழியில் சம்பந்தன் ஐயாவுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. 06

## உத்தரபிரதேசத்தில் நெரிசலில் அகப்பட்டு 87 பேர் மரணம்!

இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் நடைபெற்ற ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 87 பேர் உயிரிழந்தனர்.

உத்தரபிரதேசம் மாநிலம், ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள சிக்கந்தரா ராவ் நகரில், ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்தது. அப்போது, கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட மொத்தம் 87 பேர் உயிரிழந்தனர்.



சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிசார், உயிரிழந்தவர்களின் உடலை மீட்டனர். உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் 100 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கூட்ட நெரிசலில் சிக்கி இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு உ.பி முதல்வர் யோகி ஆதித்ய நாத் இரங்கல் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்கள் விரைவில் குணம் அடைய, தேவையான சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

## லங்கா IOC நிரப்பு நிலையங்களில் OCT.100 பெற்றோல் விற்பனை

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் (IOC) நேற்று முதல் (02) நிறுவனத்தின் பல எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் Octane 100 பெற்றோலை விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒக்டேன் 100 பெற்றோலை விற்பனை செய்யும் உலகில் எட்டாவது நாடாக இலங்கை மாறுமெனவும் இந்த பெற்றோல் ஒரு லீற்றர் 793 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுமெனவும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒக்டேன் 100 பெற்றோல் நவீன வாகனங்களுக்கு மிகவும் பொருத்தமானது. இந்த எரிபொருளைப் பயன்படுத்துவது சீரான ஓட்டத்தையும் கூடிய கிலோமீட்டரை கடக்கவும் உதவுமென (அதிக மைலேஜையும்) தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 19ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 26

### குறள் தரும் சிந்தனை



நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல; அவர் தீமை செய்திருந்தால் அதை மட்டும் அக்கணமே மறந்து விடுவது நல்லது.

## போலியான செய்திகளை பரப்பி அற்ப இலாபம் பெறும் முயற்சி!

இலங்கை கடந்த வாரம் வெளிநாடு கடன் வழங்குனர்களுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாடொன்று குறுகிய காலப்பகுதியில் இவ்வாறான முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருப்பது வரலாற்று சாதனையாகும். இந்த அடைவு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அன்றைய இரவே நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

பொருளாதார வீழ்ச்சிக்குள்ளாகி இருந்த நாட்டின் தலைமையை ஏற்றது முதல் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக வெளிப்படைத்தன்மையுடன் வேலைத்திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார். அந்த வகையில் நாடு அடைந்து கொள்ளும் ஒவ்வொரு அடைவுகள் குறித்தும் அவர் நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்துகின்றார்.

அப்படி இருந்தும் அவரது வேலைத்திட்டங்களில் காழ்ப்புணர்வு கொண்ட சில அரசியல் குழுக்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் போலிச் செய்திகளைப் பரப்புகின்றன. அவற்றில், 'ஜனாதிபதி நாட்டை பொறுப்பெடுக்கும் போது வெளிநாட்டு கடன் 71 பில்லியன் டொலர்களாக இருந்தது. அது தற்போது 100 பில்லியன் டொலர்களாகியுள்ளது' என்பதும் ஒன்றாகும். இது முற்றிலும் அற்ப அரசியல் இலாபம் தேடும் நோக்கில் பரப்பப்படும் செய்தியாகும்.

2022 இன் ஆரம்பப்பகுதியில் இந்நாடு பொருளாதார வீழ்ச்சிக்குள்ளானது. அதனால் அதேயாண்டு ஏப்ரல் மாதம் கடன் செலுத்தும் இயலுமை இல்லை என இந்நாட்டினால் அறிவிக்கப்பட்டது. அதனால் எந்தவொரு வெளிநாடும் இந்நாட்டுக்கு கடன் வழங்க முன்வரவில்லை. இவ்வறிவிப்பு இருக்கும் போது சட்டபூர்வமாக கடன் வழங்கவும் முடியாது. என்றாலும் நட்பு நாடுகள் என்ற வகையில் இந்தியாவும், பங்களாதேசமும் இக்காலப்பகுதியில் குறுகியகால கடன் உதவிகளை வழங்கின. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் பல வழிகளில் சலுகைக்கடன்களைப் பெற்றுத் தந்தன. அவை தவிர வேறெந்த நாட்டிற்கும் நீண்ட கால கடன்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

நிலைமை இவ்வாறிருக்கையில், வங்குரோத்து நிலைக்குள்ளாகி இருந்த நாட்டை பொறுப்பெடுத்த பின்னர் ஜனாதிபதி, கடன் பெற்றுள்ளதாகவும் அது இந்நாட்டின் கடன் தொகையை அதிகரிக்கச் செய்துள்ளதாகவும் குறிப்பிடுவது முற்றிலும் தவறான செய்தியாகும். இந்நாட்டின் உண்மையான வெளிநாட்டு கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 10.6 பில்லியன் டொலர் இரு தரப்பு கடன், 11.7 பில்லியன் டொலர்கள் பல்தரப்பு கடன், 14.7 பில்லியன் டொலர்கள் வணிகக்கடன், 12.5 பில்லியன் டொலர் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை என்பனவாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் மத்தியில் இந்தியா, ஜப்பான், பிரான்ஸ், இணைத் தலைமைத்துவம் அளிக்கும் இலங்கைக்கு கடன் வழங்குநர் குழுவினருடனும் சீன எக்ஸிம் வங்கியுடனும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஐ.எம்.எப். வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்துள்ளது.

இதன் பயனாக 2028 வரை அடிப்படைக் கடனை மீளச்செலுத்துவதற்கு காலஅவகாசம் கிடைக்கப் பெற்றுள்ளது. கடனுக்கான வட்டி வீதத்தை 2.1 வீதத்துக்கு தக்க வைத்துக்கொள்ளவும் முடியும். கடனை திருப்பி செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. கடன் சேவைக்காலத்தை நீடித்துக் கொள்வதோடு, வட்டியாக செலுத்த வேண்டிய 5 பில்லியன் டொலர்களை சேமித்துக் கொள்ளவும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

தற்போது 10 பில்லியன் டொலர்கள் உள்நாட்டு இரு தரப்புக்கடன் மறுசீரமைப்புப் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நாயண நிதியத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் பயனாக நாடு பாரிய பிரதிபலன்களை அடைந்து கொண்டுள்ளது. 70 சதவீதத்திற்கும் மேலாகச் சென்ற பணவீக்கம் கடந்த மாத இறுதியாகும் போது 1.7 வீதம் வரை குறைவடைந்துள்ளது.

தொடர்ச்சியாக 6 காலாண்டுகள் ஆட்டம் கண்ட இந்நாட்டு பொருளாதாரம், வளர ஆரம்பித்துள்ளது. அந்நிய செலாவணிக் கையிருப்பு 5410 மில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. ரூபா வலுவடைந்துள்ளது. பணத்தை அச்சிடாமல், வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையை நிவர்த்தி செய்ய முடிந்துள்ளது.

ஆகவே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகள் பெற்றுக்கொடுத்துள்ள கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து போலிச் செய்திகளை பரப்பி அற்ப இலாபம் பெற முயற்சிக்கலாகாது.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் நம்பிக்கை கிடைத்திருப்பது எதிர்காலத்துக்கான நற்செய்தி

இருதரப்பு கடனாளர்களுடன் இலங்கை நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு அண்மையில் பிரான்சின் பரிஸில் நடைபெற்ற 2024 பரிஸ் கலந்துரையாடலில் இலங்கை மற்றும் உத்தியோகபூர்வ கடன் உரிமையாளர் குழு வெற்றிகரமாக இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

கல்வியாளர்கள், பிரபல வங்கியாளர்கள், வர்த்தக சபைகள் மற்றும் இறக்குமதி, ஏற்றுமதி தொடர்பான மொத்த வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் இந்த ஒப்பந்தம் இலங்கைக்கு எவ்வாறான நன்மைகள் மற்றும் தீமைகளை ஏற்படுத்தும் என்பது குறித்து நாங்கள் கேட்டறிந்தோம். அவர்கள் எங்களுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் இதோ:

## 'வங்கியாளர்கள் பெற்ற மிகப்பெரிய ஆறுதல்களில் ஒன்று'

**சுஜீவ ராஜபக்ஷ**
பட்டயக் கணக்காளர்
(தலைவர்–மக்கள் வங்கி)



"இலங்கையின் வங்கியாளர்களாக நாம் சர்வதேச வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்யும் போது அண்மைய காலத்தில் அவர்கள் எமக்கு பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்கள். பல நிபந்தனைகளுக்கு உட்பட்டே நாம் அவர்களுடன் எங்களுடைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

ஒரு நாடாக நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு விரிவான கடன் வசதியைப் பெற்ற பிறகு, மார்ச் 2023 முதல் நமது நாடு மீண்டும் சில சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றது. இது சமீபத்தில் மற்றொரு சுற்று மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இருதரப்பு கடனாளர்களுடனான கடனை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தம் இதுவாகும். இதனை நிறைவேற்ற ஒரு நாடாக நாம் நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. நாம் எதிர்பார்த்தது நிறைவேறியது மகிழ்ச்சியே. இந்த இருதரப்புக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு நாம் சில சலுகைகளைப் பெறுவது முக்கியம். இங்கே, இருதரப்பு கடன் வழங்குபவர்களும் இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்படிக்கைக்கு வந்துள்ளார்கள், இது பல அம்சங்களில் மதிப்புமிக்கது.

வங்கியாளர்கள் என்ற முறையில், சர்வதேச வங்கிகள் மற்றும் அனைத்து நிறுவனங்களுடன் கையாள்வதில் காணப்பட்ட சில கட்டுப்பாடுகளை நீக்கியது வங்கியாளர்களுக்கு மிகப்பெரிய ஆறுதல். ஒரு வங்கியாக உலகம் பூராவும் உள்ள 900 இற்கும் அதிகமான வங்கிகளுடன் நாங்கள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றோம்.

எங்களால் சிறிது காலம் கடன் பத்திரங்களை கூட வெளியிட முடியவில்லை. ஆனால் இன்று அந்த துரதிர்ஷ்டமான நிலைமையிலிருந்து முற்றாக மீண்டுள்ளோம்.

எங்கள் வங்கியான மக்கள் வங்கியின் சார்பாக நான் மகிழ்ச்சியுடன் சொல்லக்கூடிய ஒரு விடயம் என்னிடம் உள்ளது. அதாவது, 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், எங்களிடம் திறக்கப்பட்ட ஒவ்வொரு வெளிநாட்டு கடன் பத்திரங்கள் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளையும் நாங்கள் பூர்த்தி செய்து விட்டோம்.

மக்கள் வங்கியுடன், தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு கடன் பத்திரம் மற்றும் உத்தரவாதக் கடிதங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் இறக்குமதிஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு பெரும் பங்களிப்பைச் செய்து வருகிறோம்.

இந்த வெளிநாட்டு இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பது அந்த நடவடிக்கைகளை தற்போது இருப்பதை விட திறமையாக மேற்கொள்ள உதவும்.

## பொருளாதார சிக்கல்களில் இருந்து மீள்வதற்கு IMF பலத்தைத் தருகிறது

**தம்மிக்க பெர்னாண்டோ**
(தலைவர்–ஏற்றுமதி செயலாக்க வலய உற்பத்தியாளர்கள் சங்கம்)



"நம் நாட்டில், முக்கியமாக ஏற்றுமதி செயலாக்க வலயங்களில், தொழில்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீட்டில் இயங்குகின்றன. இவை நாட்டிற்கு மகத்தான பொருளாதார நன்மைகளைக் கொண்டு வருகின்றன.

எமது கைத்தொழிலாளர்கள் வெளிநாட்டு வர்த்தகத்துடன் நேரடியாக தொடர்புடைய ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். இலங்கைக்குத் தேவையான அந்நிய செலாவணியைக் கொண்டுவருவதே எங்களின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இலக்கு. இந்த இலக்கை அடைய நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

நமது நாடு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்தது. அது ஒரு நாடு என்ற வகையில் நாம் பெற்ற உள்நாட்டு வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை.

இந்த நெருக்கடியால், நாடு பொருளாதாரப் படுகுழியில் விழுந்தது. இந்தப் படுகுழியில் இருந்து மீள எமக்குத் தீர்வுகள் தேவைப்பட்டன. அப்போது, ஐ.எம்.எப். செல்வோம் என ஒரு குழுவும் மற்றொரு குழு செல்ல வேண்டாம் என்றும் கூறியது. ஆனால், குறுகிய காலத்தில், நாட்டு மக்கள் அனுபவித்த சமூக, பொருளாதார சிரமங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. அத்தியாவசிய இறக்குமதிக்கு தேவையான அந்நிய செலாவணியை இழந்தோம். இதன்போது, நாடு வங்குரோத்தானதாக அறிவிக்கப்பட்டது. இத்தகைய பின்னணியில்தான் தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது.

மார்ச் 2023 இல் இலங்கைக்கு கடன் வசதி கிடைத்தது. 48 மாதங்களில் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நீடிக்கப்பட்ட கடன் வசதி. ஒருபுறம், இந்த கடன் வசதியைப் பெறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அது ஒரு வகையான வெற்றி. இதன் மூலம் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தற்காலிகமாக உதவியது. இந்தக் கடன் வசதி நாட்டுக்கு உரிய முறையில் வழங்கப்பட வேண்டுமாயின், அரசாங்கத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் சுமையை மீளச் செலுத்துவதற்கான சூழல் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்.

அதன்படி, உள்நாட்டு கடன் முதலில் மேம்படுத்தப்பட்டது. இரண்டாவதாக, இருதரப்பு மற்றும் பலதரப்பு வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடங்கப்பட்டது. இன்றைய நிலையில் அந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆனால் ஒருமித்த கருத்து என்னவென்று எங்களுக்குத் தெரியாது. அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இருதரப்பு கடன் மறுசீரமைப்பு இங்கு முக்கியமானது. இன்னும் முக்கியமான அம்சம் என்னவெனில், சர்வதேச இறையாண்மைப் பத்திரக் கடனாளர்களுடன் எதிர்கால ஒப்பந்தங்கள் செய்யப்படும் என்பதுதான்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நாம் செலுத்த வேண்டிய கடன் தொகை 100 பில்லியன் டொலர்கள். அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்த என்னென்ன சலுகைகள் கிடைக்கும் என்பதைச் சரியாகச் சொல்வது இன்னும் கடினம். இவற்றின் அடிப்படையில் தொடர்ந்து கடன் வாங்கி கடனை அடைத்து வருகிறோம். கடனை அடைக்க வேண்டிய அளவு அதிகரிப்பதால், மனஅழுத்தம் ஏற்படுகிறது. அந்த அழுத்தத்தைக் குறைக்க வேண்டுமானால், கடனைச் செலுத்தக்கூடிய, நமக்கென ஒரு வலுவான பொருளாதார அமைப்பை உருவாக்க வேண்டும். நமது ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அத்துடன் அரசாங்கத்திற்கான வருவாயை அதிகரிப்பதுடன், அரசாங்கத்தின் செலவினங்களை அதிகபட்ச செயல்திறன் மற்றும் திறமையுடன் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்".

## புதிய கைத்தொழில்களை உருவாக்க IMF பாரிய சக்தியாகும்

**கலாநிதி பிரபாத் வீரசிங்க**
(சிரேஷ்ட விரிவுரையாளர்–பொறியியல் பீடம்–ருஹுணு பல்கலைக்கழகம்)

"உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெறப்பட்ட கடனுக்கான தவணை மற்றும் வட்டியை உரிய நேரத்தில் செலுத்திய பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட நாடு இலங்கை. ஆனால் 2022 இற்குப் பிறகு எங்களால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டியிருந்தது.

இந்நிலையில், சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களிடம் கடன் வசதி பெறுவது சிரமமாக இருந்தது. அவர்கள் எங்களை அவ்வளவாக வரவேற்கவில்லை. அவ்வாறான சூழ்நிலையில், IMF கடன் வசதி கிடைத்தது நல்லது.



இதன் மூலம் பல நன்மைகளைப் பெறுகிறோம். இதன் மூலம், அரசு என்ற ரீதியிலும், அரசு தவிர தனியார் துறையாகவும் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு ஓரளவு அங்கீகாரம் கிடைக்கும்.

நம் நாட்டில் புதிய தயாரிப்புகள், புதிய கண்டுபிடிப்புகள் குறித்து ஆராய்ச்சி செய்யும் பல விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் உள்ளனர். அவர்கள் தங்கள் சொந்த நிதியில் புதிய கண்டுபிடிப்புகளையும் ஆய்வுகளையும் செய்கிறார்கள். அதன் மூலம் காப்புரிமை பெறப்படுகிறது. பல்வேறு தயாரிப்புகளை உருவாக்கக்கூடிய கண்டுபிடிப்புகள் ஆய்வு மட்டத்தில் உள்ளன. இவற்றை வணிக, புதிய தயாரிப்புகளாக சந்தைக்குக் கொண்டு வர தொழில்மயமாக்கல் மற்றும் உற்பத்தி நிறுவனத்தை உருவாக்க நிதி இல்லை. அதனால் அவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை வீட்டில் வைத்துக் கொண்டு கவலைப்படுகிறார்கள்.

தற்போது எமக்குக் கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரத்தின் மூலம் இவர்கள் எதிர்காலத்தில் உலக வர்த்தக கடன் நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற முடியும். அரசாங்கமும் கடன் வாங்கலாம். தேவைப்பட்டால், தனியார் துறையினரும் கடன் வசதிகளைப் பெறலாம். இந்த நேரத்தில் நம் நாட்டுக்குத் தேவை அந்நிய செலாவணி.

இலங்கை அதிக அந்நிய செலாவணியைக் பெறக்கூடிய ஒரு சிறப்புத் துறையானது நமது நாட்டில் உள்ள பௌதீக வளங்களின் வலையமைப்பாகும். இல்மனைட்டுகள், பெட்ரோலியம் துணைப் பொருட்கள் போன்றவை. இவற்றை நாட்டின் பொருளாதாரத்திற்கு பயன்தரக்கூடிய வகையில் பயன்படுத்த நிதி தேவை. IMF கடன் வசதி மூலம் இந்த நிதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் இப்போது எங்களுக்கு உள்ளன.

அடுத்த தசாப்தத்தில் ஆற்றல் சார்ந்த பொருளாதாரம் உருவாகும். சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய எரிசக்தி ஆதாரங்களை நாட வேண்டும் மற்றும் நமது செலவினங்களைக் குறைக்க வேண்டும். இவ்வகையில், குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிசக்தியில் முதலீடு செய்வதற்கும், அது தொடர்பான புதிய தொழில்களை உருவாக்குவதற்கும் IMF கடன் வசதிகள் மூலம் பலம் பெற்றுள்ளோம்".

## நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு IMF கடன் வசதி கிடைத்தது பெரும் பலமாகும்

**ஜி. இளமநாதன்**
(தலைவர்–அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களின் மற்றும் வர்த்தகர்களின் சங்கம்)

இரண்டு, இரண்டரை வருடங்களுக்கு முன்பு ஒரு நாடாக நாம் பல துன்பங்களை அனுபவித்தோம். அத்தியாவசிய பொருட்கள், மின்சாரம், உணவு இல்லாமல் தவித்து வந்தோம். வெளிநாடுகளில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய தேவையான டொலர்கள் கிடைக்காமையால் அவதிப்பட நேரிட்டது.

டொலர் கிடைக்காமல் தவித்ததைப் போன்று டொலருக்கு பணம் செலுத்தும் இலங்கை ரூபாவின் அதிகரிப்பால் நாமும் தவித்தோம். ஒரு அமெரிக்க டொலரின் மதிப்பு 350_400 இலங்கை ரூபாய் வரை உயர்ந்தது.

இவ்வாறான நிலையில், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலை பெருமளவு அதிகரித்தது. நாட்டில் பணவீக்கம் நூற்றுக்கு 70 சதவீதமாக அதிகரித்தது. இக்கட்டான காலங்களை கடந்து வந்த எங்களுக்கு அதிலிருந்து மீள்வதற்கு IMF கடன் வசதிகள் கிடைத்தது பெரிய பலமேயாகும். இந்த வசதியைப் பெற நாங்கள் விவாதித்தோம். விமர்சிக்கப்பட்டோம். குறுக்கீடு செய்யப்பட்டது.

இது போன்ற தடைகள் ஏதுமின்றி ஒரு நாடாக முன்னேறிச் செல்வதற்கு இந்த தருணத்தில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றே சொல்ல வேண்டியுள்ளது" என்றார்.

# அமைச்சரவை முடிவுகள்

**1. மஹபாகே பொலிஸ் நிலையத்திற்கு காணித் துண்டொன்றை வழங்கல்**

குறித்த பொலிஸ் நிலையத்திற்குத் தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வத்தளை பிரதேச செயலகம் முன்னர் அமைந்துள்ள காணியில் 40 பேர்ச் சர்ஸ் காணித்துண்டை ஒதுக்கி வழங்குவதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான சுவிட்சர்லாந்து இராஜாங்க செயலகத்திற்கும் இடையிலான உலகளாவிய துணி மற்றும் ஆடைக்கைத் தொழில்வேலைத்திட்டம்தொடர்பானகருத்திட்ட ஒப்பந்தம்**

இலங்கையில் துணி மற்றும் ஆடைக் கைத்தொழில் துறைக்கான உலகளாவிய துணி மற்றும் ஆடைக்கைத்தொழில் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான சுவிட்சர்லாந்து இராஜாங்க செயலகம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும் இடையில் கருத்திட்ட ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கையில் பேண்தகு மற்றும் வினைத்திறனான இலத்திரனியல் வழிச்செலுத்தல் முறைமை (Electronic Navigation System) தொடர்பான கருத்திட்டம்**

பசுமை சுற்றாடல் நிதியத்தின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் வேலைத் திட்டம் இலங்கையில் பேண்தகு மற்றும் வினைத்திறனான இலத்திரனியல் வழிச் செலுத்தல் முறைமை தொடர்பான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 1.09 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனமாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாற்றுவதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இசிப்பத்தன கல்லூரியின் விளையாட்டு செயற்பாடுகளுக்காக ஹென்றி பெட்ரிஸ் (Henry Pedris Ground )விளையாட்டு மைதானத்தை ஒப்படைத்தல்**

பல்வேறு திறமைகளை வெளிப்படுத்துகின்ற பல விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ள இசிப்பத்தன கல்லூரிக்கு விளையாட்டுப் பயிற்சிகளுக்காக நிரந்தர விளையாட்டு மைதானம் இன்மையால், விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை விருத்தி செய்வதில் தடைகள் காணப்படுகின்றன. அதற்கமைய, ஹென்றி பெட்ரிஸ் (Henry Pedris Ground) விளையாட்டு மைதானத்தை அப்பெயரிலேயே பேணிக்கொண்டு, குறித்த விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்கு ஒப்படைப்பதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. உத்தரவாத மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்திக் கொள்வனவுக் கட்டணத்தைத் திருத்தம் செய்தல்**

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் கீழும்



குறித்த சட்டத்தில் பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களுக்கமைய, 10 மெகாவாற்று அல்லது அதற்குக் குறைவான கொள்ளளவு கொண்ட மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டங்களுக்குரிய தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட, உத்தரவாதமளிக்கப்பட்ட சந்தை விலையை விடவும் உயர்ந்த விலைக் கட்டண (Feed in Tariff) முறையின் கீழ் உத்தரவாத மின்சாரக் கொள்வனவு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறித்த குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக் கணிப்பீடு சமன்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கும், உத்தேசக் கட்டணத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. தேசிய தரநியம சபையை (National Quality Board) தாபித்தல்**

தேசிய தரநியம சபையை தாபிக்கின்ற முன்மொழிவை நடைமுறைப்படுத்துவதற்காக பங்காள நிரல் அமைச்சுக்கள் மற்றும் தேசிய தரநியம நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய செயற்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் குறித்த வர்த்தகங்களுக்கான உத்தேச விடுவிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்வரும் ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. குற்றவியல் வழக்குக் கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

ஏதேனுமொரு குற்றவாளி அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்ட குற்றத்திற்காக குற்றவாளியாகத் தீர்ப்பளிப்பதற்கு முன்னர், குறித்த குற்றவாளி சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியை அவருடைய தண்டனைக் காலத்தின் பகுதியாகக் கருதுவதற்கு நீதிபதிகளுக்கு இயலுமை கிட்டும் வகையிலான ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கோவை திருத்தச் சட்டம் 2024.05.31 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆயினும், குறித்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களுக்கு மேற்குறித்த திருத்தச் சட்டம் ஏற்புடையதற்றதாக இருப்பதால், அவர்கள் தொடர்பான குற்றத்தீர்ப்பளிக்கும் வரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்பகுதியை கருத்தில் எடுப்பதற்காக பொறிமுறையொன்று தேவையெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவ்வாறான குற்றவாளிகளுக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் அரசியலமைப்பின் 34 ஆவது உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக விசேட ஏற்பாடுகள் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**08. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

ஓய்வூதியத்திற்கான உரித்தற்றவர்கள் தனியார் மற்றும் பகுதி அரச துறைகளில் பணிபுரிகின்ற ஊழியர்களின் சமூகப் பாதுகாப்புக்காக 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது.

சமகால சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்புடைய வகையில் சட்டத்தின் மூலம் உள்ளடக்கப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், ஊழியர்களுக்கு தரப்பண்பானதும் வினைத்திறனானதுமான சேவையை வழங்குவதற்காக சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையைக் கட்டியெழுப்புவதற்காக நீடித்த மூலோபாயம்**

இலங்கையில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல், புதிய தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் பொருளாதார விருத்திக்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் நேரடிப் பங்களிப்பு வழங்குகின்றனர். கடந்தகாலங்களில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளால் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால், குறித்த தொழில் முயற்சியாளர்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக முதலீட்டு மற்றும் நடவடிக்கை மூலதன ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டிய தேவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு பல மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறித்த நிதியொதுக்கீட்டில் 02 பில்லியன் ரூபாய்களைப் பயன்படுத்தி, சுழற்சிக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், குறித்த கடன் திட்டத்தை 2024.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த தகவல்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

**10. வலுசக்தித் துறையில் மறுசீரமைப்பு மற்றும் நிதி நிலைபேற்றுத்தன்மை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியைப் பெற்றுக் கொள்ளல்**

வலுசக்தித் துறையில் மறுசீரமைப்பு மற்றும் நிதி நிலைபேற்றுத்தன்மை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டம் 03 உப நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டுள்ளதுடன்,

ஒவ்வொரு உப நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீதம் 300 மில்லியன் டொலர்கள் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார (தனியார்) கம்பனி போன்ற நிறுவனங்களின் நிறுவனக் கட்டமைப்பு மறுசீரமைப்புக்களை அமுல்படுத்துவதற்காக உத்தேச உப நிகழ்ச்சித்திட்டம் 01 இற்கான நிதியிடலுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுக் கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 'புலம்பெயர் வசந்தம்' நிகழ்ச்சித்திட்டம்**

நிதி மற்றும் பொருளாதாரப் பின்னடைவுகளின் போது புலம்பெயர் தொழிலாளர்கள் வழங்கிய அளப்பரிய ஒத்துழைப்புக்களைப் பாராட்டுமுகமாக 'புலம்பெயர் வசந்தம்' எனும் பெயரிலான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. ஐக்கிய அமெரிக்காவுடன் கையொப்பமிட்ட ஒத்துழைப்பு உடன்படிக்கை இலக்கம் 383128 இன் மூன்றாவது திருத்தம்**

'ஜனநாயக ரீதியான, சுபீட்சமான மற்றும் இடர்விளைவுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய திறன் கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்' நிதியிடலுக்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அரசு மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசும் 2022.08.31 ஆம் திகதி ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றை மேற்கொண்டுள்ளதுடன், அதற்கமைய 9.069 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் குறித்த நிதிப்பெறுமதி 28.299 மில்லியன் டொலர்களாக 02 சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய,'ஜனநாயக ரீதியான, சுபீட்சமான மற்றும் இடர்விளைவுகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய திறன் கொண்ட இலங்கைக்கான வேலைத்திட்டம்' இன் கீழ் நிதிவசதியை 52.835 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்து ஒத்துழைப்பு உடன்படிக்கை திருத்தம் செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. இலங்கையின் இளம் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் உழைப்புப் படையை உந்துவிப்பதற்காக 'வேலைக் கலாசாரம்' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

இளைஞர்களிடையே உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரித்து இலங்கை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக திட்டமிடப்பட்டுள்ள 'வேலைக் கலாசாரம்' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கருத்திட்ட யோசனையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் 2024 யூன் மாதம் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இளைஞர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக இளம் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உழைப்புப் படையை ஊக்குவிக்கின்ற 'வேலைக் கலாசாரம்' எனும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# குருநாகல் மாவட்ட "உறுமய" காணி உறுதி வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்

**புத்தளம் தினகரன் நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உருவான காணியற்றவர்களுக்கு "உறுமய" காணி உறுதி வழங்கும் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் தலைமையில் குருநாகல் மாவட்ட செயலகத்தில் (01) நடைபெற்றது.



குருநாகல் மாவட்ட பயனாளிகளுக்கான காணி உறுதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 05ம் திகதி, குருநாகல் நகரில் அமைந்துள்ள வடமேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட ஆளுநர் நஸீர் அஹமட்,

"உறுமய" காணி உறுதி வழங்கும் செயற்பாடுகளை விரைவுபடுத்துவது தொடர்பில் இதற்கு முன்னரும் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தோம். அதன் அடிப்படையில் இந்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பிரதேச செயலகங்கள் தோறும் விசேட பயிலுனர்களையும் நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தோம். ஏனெனில் "உறுமய" செயற்திட்டம் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்தப்படவேண்டிய ஒரு திட்டமாகும்.

தற்போதைக்கு எமது துரித செயற்பாடுகளின் காரணமாக குருநாகல் மாவட்டத்தில் சுமார் ஆயிரத்து இருநூறு பயனாளிகள் "உறுமய" காணி உறுதி வழங்கும் நிகழ்வின் கீழ் தங்கள் காணிகளுக்கான உறுதிகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.மாவட்டத்தில்உள்ள ஏனைய பயனாளிகளுக்கும் இதன் கீழ் காணி உறுதிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். ஜனாதிபதியின் பொருளாதார மீட்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகவே இந்த "உறுமய" காணி உறுதிகள் வழங்கப்படுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு இருந்த நிலையில் இவ்வாறான எந்தவொரு செயற்திட்டமும் சாத்தியப்பட்டு இருக்காது. ஆனாலும் ஜனாதிபதியின் தூரநோக்கான செயற்திட்டத்தின் ஊடாக அது சாத்தியப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# அரசியலை கண்ணியமாக முன்னெடுத்தவர் சம்பந்தன்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அனுதாபம்



இலங்கைத் தமிழர்களின் பெருந்தலைவர் ஆர். சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த வருத்தமடைவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது 'எக்ஸ்' தளத்தில் அனுதாபம் பதிவிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கான இனப்பிரச்சினை விடயத்தில் கண்ணியமாகவும், சமத்துவத்துடனும், நீதியாகவும் தனது அரசியலை முன்னெடுத்துச் சென்ற தலைவர் அமரர் சம்பந்தன் எனவும் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பல தசாப்தங்களாக அமரர் சம்பந்தனுடனான தனது பல சந்திப்புகள் மற்றும் உரையாடல்களை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவதாகவும், அவரை இழந்து வாடும் குடும்பத்தினர் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் தனது இரங்கல்களைத் தெரிவிப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வீதியை கடந்த காட்டு யானையால் அச்சம்...

# ஆட்டோவுடன் வான் மோதி விபத்து; சாரதி உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் புத்தளம் பிரதான வீதியில் 7ஆம் கட்டை பகுதியில் முச்சக்கர வண்டியும் வானொன்றும் மோதி விபத்திற்குள்ளானதில் முச்சக்கர வண்டியின் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.அநுராதபுரத்திலிருந்து புத்தளம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியின் சாரதி வீதியைக் கடந்த காட்டு யானையைக் கண்டு பீதியடைந்து தனது வாகனத்தை திருப்ப முற்பட்ட போது புத்தளத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த வானுடன் முச்சக்கர வண்டி மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.



குறித்த விபத்தில் உயிரிழந்தவர் இராஜாங்கனைப் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். கடந்த காலங்களில் குறித்த வீதியில் இது போன்ற பல விபத்துகள் இடம் பெற்று பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

# காட்டு யானை தாக்கி 50 வயது பெண் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஹபரண பொலிஸ் பகுதியில் காட்டு யானை தாக்கி 50 வயதுடைய பெண் ஒருவர் கடந்த (01) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது வீட்டுக்கு அருகில் வைத்து கடந்த (30) காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ள நிலையில் ஹபரண வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக ஹபரண பொலிஸார் தெரிவித்தனர்.

# தமிழர்களின் நலன்களுக்காக இறுதிவரை ஓய்வின்றி பாடுபட்டவர் அமரர் சம்பந்தன்

## விடுதலைச் சிறுத்தைகள் தொல். திருமாவளவன் இரங்கல்

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களின் மறைவு அதிர்ச்சியளிக்கிறது என்று தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

"1956 ஆம் ஆண்டு தனது 23 ஆவது வயதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து, தனது 91ஆவது வயதுவரை ஓய்வின்றித் தமிழர் நலன்களுக்காகப் பாடுபட்டவர் அமரர் சம்பந்தன். அவரது மறைவு தமிழ்த் தேசிய அரசியலில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அவருக்கு எமது அஞ்சலியையும், அவரை இழந்து வாடும் தமிழ் மக்களுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



சுதந்திரத்திற்குப் பிறகான ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு ஆளுமையாக இரா.சம்பந்தன் இருந்தார். தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் பணியில் உறுதியாக இருந்தார்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக உள்நாட்டில் மட்டுமின்றி, சர்வதேச ரீதியில் பல்வேறு தலைவர்களைச் சந்தித்து அழுத்தங்களைக் கொடுப்பதிலும், தமிழர் நலன்களுக்கு ஆதரவு திரட்டுவதிலும் அவர் சோர்ந்ததே இல்லை. இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினையை அவரளவுக்கு ஆழமாகப் புரிந்துகொண்ட, அவரைப்போல செறிவாக எடுத்துக்கூறும் ஆற்றல்கொண்ட ஒரு தலைவர் இன்று இலங்கையில் இல்லை. அவரது மறைவு பெரியதொரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அமரர் இரா. சம்பந்தனுக்கு ஸ்ரீதரன் MP இறுதி அஞ்சலி



மறைந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனின் பூதவுடலுக்கு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் நேற்று பொரளை ரேமன் மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலி செலுத்தினார். அமரர் இரா சம்பந்தனின் புதல்வி எஸ். கிருஷாந்தினி மற்றும் இரத்தினபுரி ஐதே.க.அமைப்பாளர் ஆனந்தகுமாரும் இதன்போது உடனிருந்தனர்.

## சமூக வலைத்தளங்களில்...

நிறத்துடனான பின்னணியில் " CENTRAL OFFICE FOR THE FIGHT AGAINST CRIME RELATED INFORMATION AND COMMUNICATION_ TECHNOLOGY "என்ற தொனிப்பொருளில் 2024 ஜூலை 01 என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனில் விடுக்கப்பட்டதாக விடயம் மறைக்கப்பட்ட முறையில் இந்த கடிதம் தயாரிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதம் மற்றும் அதன் உள்ளடக்கம் என்பவை முற்றிலும் போலியாக தயாரிக்கப்பட்ட கடிதம் என்றும் , இலங்கை பொலிஸினாலோ அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினாலோ இவ்வாறானதொரு கடிதம் வெளியிடப்படவில்லை என பொலிஸ் தலைமையகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது. இதில் ஏமாற வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட போலி கடிதம் மற்றும் அந்த கடிதத்தை இணையத்தில் வெளியிட்டமை தொடர்பில், குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

(03.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
தாய் வழி ஆதரவு உண்டு. பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

**ரிஷபம் :**
உடன் பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். அலுவலகப் பணிகள் துரிதமாக முடியும்.

**மிதுனம்:**
குடும்ப ஒற்றுமை பலப்படும். கூட்டு முயற்சிகளில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:**
உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கான மாறுதல்கள் கிடைக்கும். கணவன் மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது.

**சிம்மம்:**
மருத்துவச் செலவுகள் கூடும். வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டும். என்று விரும்புபவர்கள் அங்கு சென்று வேலை கிடைக்காமல் திரும்ப நேரிடும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் உயர் பதவி மட்டுமல்ல சம்பள உயர்வும் கிடைப்பதற்கான அறிகுறிகள் உண்டு. கொடுத்த கடன் வசூல் ஆகும்.

**துலாம்:**
செய்தொழிலில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும்.

**விருச்சிகம்:**
நல்ல சம்பவங்கள் இல்லம் தேடி வரும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**
பயணங்கள் பலன் தருவதாக அமையும் தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து மகிழ்விக்கும் உத்தியோகத்தை பொறுத்தவரை மேல் அதிகாரிகள் உங்களுக்கு நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பர்.

**மகரம்:**
கல்யாண கனவுகள் நனவாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும். உத்தியோக முயற்சி கைகூடும். பூர்விக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும்.

**கும்பம்:**
நம்பிக்கைக்கு உரியவர்கள் நல்லது நடக்க வழி காட்டுவர். மாமன் மைத்துனர் வழியில் மங்கல நிகழ்சிகள் நடைபெறும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:**
கட்டிய வீட்டை பழுது பார்ப்பது பற்றி சிந்திப்பீர்கள். கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்கள் வாங்கி மகிழவும் உகந்த நேரம் இது.

## திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீடு!

*காரைதீவு குறூப் நிருபர் சகா*

கல்முனை சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த பிரபல கவிஞர் வைரமுத்து கணேசன் எழுதிய "திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாறு" நூல் வெளியீட்டு விழா (30) ஞாயிற்றுக்கிழமை உகந்தமலை முருகன் ஆலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது .

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய தலைவருமான கலாநிதி கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வீ.ரி. சகாதேவராஜா, திருமலை ஆசிரியை திருமதி கி.குமுதினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

அங்கே முதல் பிரதி அதைத் தொடர்ந்து இணைப்பிரதிகள் பக்தர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.



## கடன் நிலைபேற்றுத்தன்மையை...

தரப்பினர் தமது அரசியல் இலக்குகளுக்கு அதனை நம்பிக்கையுடன் பார்க்க மறுத்துவிட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க,

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான கடன் மறுசீரமைப்பு தொடர்பான நற்செய்தி தற்போது கிடைத்துள்ளது. கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களாக இருதரப்பு கடன் வழங்குநர் குழு மற்றும் பெரிஸ் கழகத்தின் நாடுகளுடன் உடன்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அதே தினம் சீனா எக்சிம் வங்கியுடன் உடன்பாடு எட்டப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு, கடன் மறுசீரமைப்பு தொடர்பான இரண்டு அத்தியாவசிய விடயங்களை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம். மேலும், இலங்கையில் இந்தக் கடனை மறுசீரமைப்பது குறித்து சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் உள்ளது. ஆனால் இந்த நாட்டில் உள்ள சில தரப்பினர் அரசியல் நோக்கங்களுக்காக கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நற்செய்தியாகப் பார்க்க மறுக்கின்றன.

இது, ஒரு நாடு என்ற வகையில் மிகவும் வருந்தத்தக்க விடயம் என்பதைக் கூற வேண்டும். இது தொடர்பான புரிதல் இல்லாத காரணத்தால்தான் நாம் செய்த பணிகள் குறித்து சில தரப்பினர் இவ்வாறு கூறுகிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தோம். ஆனால், அந்த கருத்துகள் குறுகிய அரசியல் நோக்கங்களால் கூறப்பட்டவை என்பது இப்போது தெளிவாகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, அப்போது எதிர்க்கட்சிகள் நடந்து கொண்ட விதத்தின் மூலம் அது தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனவே அரசியலையும் பொருளாதாரத்தையும் கலந்து நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைப்பவர்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்பது குறித்து மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். கானா, ஈக்வடார் ( Ecuador) ஆர்ஜென்டினா போன்ற நாடுகளின் நிலைமை குறித்து சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

ஆனால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கும் நடுத்தர வருமான நாடுகளுக்கும் இடையிலான கடன் மறுசீரமைப்பில் உள்ள வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நடுத்தர வருமானம் கொண்ட நாடான நம் நாட்டில் கடன் மறுசீரமைப்பு என்பது குறைந்த வருமானம் கொண்ட நாட்டின் கடன் மறுசீரமைப்பை விட சிக்கலானது.

ஆனால் நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த கடன் மறுசீரமைப்பில் இலங்கை முன்னணியில் உள்ளது. மேலும், கடன் மறுசீரமைப்பின் 03 முக்கிய விடயங்களை செயற்பாட்டின் ஊடாக நிரூபிக்க நாம் தயாராக உள்ளோம். அதன்படி, எங்களின் கடன் வழங்குநர்கள் கடனை செலுத்த 2024 முதல் 2027 வரை அவகாசம் அளித்துள்ளனர். அந்தக் காலப்பகுதியில் எமக்குக் கிடைக்கும் சுமார் 05 பில்லியன் டொலர்களின் நன்மையை, நாட்டு மக்களின் நலனுக்காக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2032ஆம் ஆண்டுக்குள், அரச கடன் தொகை மொத்தத் தேசிய உற்பத்தியில் 95% வரைக் குறைக்கப்பட வேண்டும். 2027 மற்றும் 2032 காலக்கட்டத்தில் மொத்த நிதித் தேவை 13% வரைக் குறைக்கப்பட வேண்டும். 20272032 காலகட்டத்தில் வெளிநாட்டுக் கடன் சேவையும் 4.5% வரைக் குறைக்கப்பட வேண்டும்.

இந்த 03 இலக்குகளை நிறைவு செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட கடன் மறுசீரமைப்புக்கு நாம் இப்போது உடன்பட்டுள்ளோம். அதன்படி, இந்த நாட்டிற்கான கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்காக நிலவிய அனைத்து நிச்சயமற்ற தன்மையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் இலங்கையில் பணவீக்கம் 70% இலிருந்து 1.7% வரை குறைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் திறைசேரி உண்டியல் ஏலத்தில், ஓராண்டு திறைசேரி உண்டியல்களின் வட்டி விகிதம் 10% ஐ எட்டியுள்ளது" என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

## பதவிக்காலம் முடிவதற்குள்...

03 மாதங்கள் உள்ளன. குறிப்பாக இந்த வருடம் ஒக்டோபர் முடிவதற்கு முன்னர் இப்பிரச்சினையை ஜனாதிபதி தீர்த்து வைக்க வேண்டுமென்றும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழரசுக்கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் மறைவு தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுதாபம் தெரிவித்து உரையாற்றிய பின்னர் சுமந்திரன் எம்பி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

சுமந்திரன் எம்.பி. தெரிவிக்கையில்;

சம்பந்தனின் மறைவு தொடர்பாக அனுதாபம் வெளியிட்டமைக்கு ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜனாதிபதி தமது உரையின் போது தாமும் சம்பந்தனும் ஒன்றாக பாராளுமன்றத்துக்கு வந்தமை தொடர்பில் குறிப்பிட்டார். சம்பந்தனின் ஆயுட்காலத்திலேயே தமிழ்த் தேசியப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், துரதிஷ்டவசமாக அவர் மறைந்து விட்டாரெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எனவே, மீண்டும் மீண்டும் நாம், வலியுறுத்துவது என்னவெனில் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னர், இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

இதை விநயமாக இந்த சபையில் கேட்டுக் கொள்கிறேன்.நாட்டு மக்கள் அனைவரும் திருப்தியடையும் வகையில் இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தயாசிறியை SLFP பொதுச்செயலாளர்...

செயலாளர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரை பிரதிவாதிகளாக்கி, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேக்கர இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை பரிசீலித்த கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி அனுர விக்கிரமசிங்க, இந்த தடையுத்தரவை பிறப்பித்துள்ளார். வழக்கு விசாரணை நிறைவடைந்து இறுதித் தீர்மானம் வழங்கப்படும் வரை, இந்த தடை உத்தரவு அமுலில் இருக்குமெனவும் இந்த உத்தரவின்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகமாக தயாசிறி ஜயசேக்கர செயற்படுவதற்கு எவ்வித தடையுமில்லை எனவும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

## லிற்றோ சமையல் எரிவாயு விலை...

நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

இவ்விலை குறைப்பின்படி12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்பட்டு, புதிய விலை 3,690 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

05 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை 1,482 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2.3 கிலோ லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 18 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன் புதிய விலை 694 ரூபாவாக இன்று முதல் விற்பனை செய்யப்படுமென்றும் நிறுவனம் அறிவித்துள்ளது.

## SLFP லிருந்து தூக்கி எறியப்பட்டதால்...

இருப்பினும் தாம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக முழுமையாக செயல்படப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேபோன்றே ,எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பொதுத் தேர்தலிலோ தாம், போட்டியிடப் போவதில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் தனது மகன் தம்மசிறிசேன எதிர்வரும் காலங்களில் அரசியலுக்கு வரவுள்ளார்.

இதற்கமைவாக பொலன்னறுவை தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் களத்தில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

## கெஹலிய தாக்கல் செய்த மனு...

நீதிமன்றம் அறிவித்துள்ளது. தரமற்ற தடுப்பூசி மருந்து கொள்வனவு தொடர்பிலான விசாரணை முடியும் வரை, தம்மை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை அறிவித்துள்ளது.

## முரல் மீன் தாக்குதலில்...

முரல்மீன் தாக்கி உயிரிழந்தார். குருநகர் பகுதியை சேர்ந்த மைக்கல் டினோஜன் (வயது 29) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை கடலில் திங்கள் இரவு மீன் பிடித்துக்கொண்டிருந்த போது முரல் மீன் ஒன்று இளைஞனின் கழுத்துப் பகுதியை தாக்கியது. இதில்

இளம் குடும்பஸ்தர் உயிரிழந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதான வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அமரர் சம்பந்தனின் உடலுக்கு ஜனாதிபதி...

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், எஸ். இராசமாணிக்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மன்னார் மடு தேவாலய பகுதியில்...

அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டப்ளியூ.எஸ். சத்தியானந்தா ஆகியோர் நேற்று (02) இந்த ஆவணங்களில் கையெழுத்திட்டனர். இந்தத் திட்டத்திற்கு 400 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

## மற்றுமொரு உடன்படிக்கைக்கான...

(03ஆம் பக்கத் தொடர்)

அது தொடர்பில் மீண்டும் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

அந்த வகையில் இரண்டு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் பட்டுள்ளதுடன் மற்றுமொரு உடன்படிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த பேச்சுவார்த்தை நிறைவு பெற்றதும் இணக்கப்பாட்டுடன் அது சம்பந்தப்பட்ட பிரிவின் தகவல்களோடு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது கேள்வியின்போது;

கடன் மறு சீரமைப்பு தொடர்பில் இரண்டு உடன்படிக்கைகள் மாத்திரமே கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. அவ்வாறானால் மேலும் ஒரு உடன்படிக்கை காச்சாத்திடப்படாத நிலையிலேயே அது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிழலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவ்வாறு செயற்பட்டுள்ளமை முறைகேடானதென்றும் அவர் தெரிவித்தார்.

## போஷாக்கு குறைபாடு...

(03ஆம் பக்கத் தொடர்)

மீண்டும் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் போது கண்டி அதிவேகப் நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வோம். அது வருத்தமளிக்கும் செய்தியா? அது தொடர்பான அறிக்கைகளை கபீர் ஹசீம், ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

இப்போது தனியார் பிணைமுறி வழங்குநர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது. Clifford Chance நிறுவனம் இது பற்றிய தகவல்களை இப்போதைக்கு வெளியிட வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து ஏனைய தரப்புக்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் தெரிய வரும் என்பதாலேயே அவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனால் மூன்று ஒப்பந்தங்களையும் ஒரே நேரத்தில் சமர்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையைப் போன்றே கானாவும் இவ்வாறான ஒப்பந்தங்களில் கைசாத்திட்டுள்ளது. ஆனாலும் கானா அந்த விடயங்களை இன்று வரையில் வெளியிடவில்லை.

குறிப்பாக, இந்த விடயங்கள் அனைத்தும் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரச நிதி தொடர்பான செயற்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன. குழுவில் இருப்போர் அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்பிப்பர். ஹர்ஷ டி சில்வாவைக் கண்டு உங்களுக்கு பொறாமை ஏற்படுகிறதா? அதனை செய்வதை நீங்கள் விரும்பவில்லையா? இப்போது இவ்வாறு பேசுவதன் அர்த்தம் என்ன? ஹர்ஷ டி சில்வாவின் குழு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தக் குழு எந்த மாதிரியான அறிக்கையைத் தயாரிக்கும் என்பது எமக்குத் தெரியாது. அந்த அறிக்கை சாதகமாக வருமா, எதிராகத் தயாரிக்கப்படுமா என்பதும் எமக்குத் தெரியாது.

இப்போது விவாதிப்பதை விடுத்து அறிக்கையின் படி செயல்படுவோம். கலாநிதி ஹர்ஷ டி சில்வா பற்றி கேள்வி எழுந்தால் அது குறித்த விவாதமொன்று தேவைப்படுமா? இல்லாவிட்டால், நாலக கொடஹேவாவை எதிர்க்கட்சியின் ஆலோசகராக நியமித்து ஒரு தடவை வீழ்ந்த குழியில், மறுமுறை விழ முயற்சிக்கிறார்களாக என்ற கேள்விக்குறியும் உள்ளது. '' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## அரச நிதி முகாமைத்துவ...

(03ஆம் பக்கத் தொடர்)

மற்றும் பிரிவு 3(2)(பி) நீக்கப்பட வேண்டும் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்பின் சுருக்கத்தில் முன்மொழியப்பட்ட புதிய துணைப்பிரிவு சேர்க்கப்பட்டால், அந்த முரண்பாடுகள் நீங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "அரசுக்குச் சொந்தமான நிறுவனம்" என்ற வார்த்தைகளுக்கு வழங்கப்பட்ட விளக்கத்தில், அரசியலமைப்பின் 12(1) மற்றும் 148 வது பிரிவுக்கு முரணாக உள்ளது. இதன் சுருக்கத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் இருந்தாலும் கூட, பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மேலும் சில சரத்துக்களை நிறைவேற்றவும் விசேட பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமானதென உயர் நீதிமன்றத் தீர்ப்பு கூறுவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்தார்.

## சாத்வீகத்தில் சம்பந்தன்...

(03ஆம் பக்கத் தொடர்)

தமிழ்,முஸ்லிம் சமூகங்களின் புரிந்துணர்வுகளை தூரப்படுத்தும் சக்திகளை அவர் தெளிவாக அடையாளம் கண்டவர்.இரு சமூகங்களதும் சாத்வீகப் பயணங்கள்தான், பொதுவான எதிரிகளைத் தோற்கடிக்கும். இதை மையமாகக் கொண்டே மறைந்த தலைவர் சம்பந்தன் ஐயாவின் அரசியற் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

இக்கட்டான கட்டங்களில் நிதானமாக செயற்படும் அவரது பக்குவமே, இன்றைய அரசியல் தலைமைகளுக்குத் தேவை.

## இரா. சம்பந்தனின் பூதவுடலுக்கு...

முதல் 4.00 மணி வரை பாராளுமன்ற வளாகத்தின் முன் மண்டபத்தில் அமைந்துள்ள விழா மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

மறைந்த ஆர். சம்பந்தனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு பாராளுமன்ற பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

# மறைந்த இரா. சம்பந்தனுக்கு அரசியல் பிரமுகர்கள் இறுதி அஞ்சலி



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ



அங்கஜன் இராமநாதன் எம்.பி



**தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான மறைந்த இரா. சம்பந்தனின் பூதவுடல், நேற்று செவ்வாய்க்கிழமை (02) பொதுமக்கள் அஞ்சலிக்காக பொரளை ரேமன் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. அன்னாரின் மகள் எஸ்.கிரிஷாந்தினி, மகன் எஸ்.ரமேஷ் செந்தூரன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்திய போது,..**

**படம் : கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்**



ஆளுநர் செந்தில் தொண்டமான்



குமரகுருபரன்

# நெல்அறுவடையின் அளவை எதிர்வரும் ஆறு போகங்களில் இரட்டிப்பாக்கும் திட்டம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள இலக்கை அடைவதற்கு நடவடிக்கைகள்

## விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப பக்கேஜ் அறிமுகம்

தற்பொழுது கிடைத்து வரும் நெல்அறுவடையின் அளவை எதிர்வரும் ஆறு போகங்களில் இரட்டிப்பாக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள இலக்கை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி தெரிவித்தார்.

இதற்காக தொழில்நுட்பப் பொதி (பக்கேஜ்) ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பாரம்பரிய விவசாயத் தொழிலுக்கு அப்பால் அதிகரித்து வரும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை விவசாய அமைச்சு வெற்றிகரமாக நிர்வகித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (01) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சின் செயலாளர் மேலும் கூறியதாவது:

"பாரம்பரிய விவசாயத்திற்கு அப்பால் சென்று வளர்ந்து வரும் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வது விவசாய அமைச்சின் பொறுப்பாகும். தற்போது இதனை வெற்றிகரமாக நிர்வகித்து வருகிறோம். குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் ஆறு போகங்களில் நெற்பயிர் அறுவடையின் அளவை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற இலக்கை அடையத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப பக்கேஜ் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் கைவிடப்பட்ட வயல் நிலங்கள் உட்பட அனைத்து நெல்வயல்களும் நெற்பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

பயிரிடப்பட்ட நிலத்தை ஏனைய பயிர்களுக்கு பயன்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது நெற்செய்கையின் வெற்றிகரமான பெறுபேறுகள் எட்டப்பட்டுள்ளதுடன் 800,000 மெற்றிக் தொன் அரிசி அறுவடை கிடைத்துள்ளது.

பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைக்கு அப்பால் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கையாக விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்திற்கு 2500 மில்லியன் ரூபா வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி 26 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பல்வேறு விவசாய நடவடிக்கைகளுக்கு வட்டியில்லா கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில், இளைஞர் விவசாய தொழில்முனைவோர் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இதனால் விவசாயம், பெருந்தோட்டக் கைத்தொழில், கால்நடை மற்றும் மீன்பிடித் தொழில் ஆகிய துறைகளில் இளைஞர்களின் தொழில் முனைவோர் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதோடு, புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாட்டினால் இளைஞர் சமூகத்தை இந்தத் துறைக்கு ஈர்க்கும் முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன.

தற்போது விவசாயத் துறையை உள்ளூர் எல்லைக்கு அப்பால் வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்டு விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஸ்ட்ரோபரி, மாம்பழம், அன்னாசி போன்றவற்றை ஏற்றுமதி செய்யும் போக்கு அதிகரித்துள்ளது.

இது தவிர, விளைச்சல் ஏற்ற இறக்கங்கள் மற்றும் பயிர் இழப்புகளை மையமாக வைத்து தம்புள்ளையில் குளிரூட்டி நிலையமும் நிறுவப்படவுள்ளது. தகுந்த பயிர்கள் பற்றி விவசாயிகளை அறிவூட்டி வருகிறோம். எமது அமைச்சின் கீழ் இயங்கும் பொருளாதார நிலையங்களின் முகாமைத்துவத்தினால் பயிர் சேதத்தை சுமார் 50% வரை குறைக்க முடிந்துள்ளது"'

விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கமனி ரணதுங்க உரையாற்றுகையில்,

"இலங்கையில் நுகர்வுக்குத் தேவையான அரிசி, பழங்கள் மற்றும் மரக்கறிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பொதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த பெரும்போகத்தில் இருந்து நெல்விளைச்சலை அதிகரிக்க, 60,000 ஹெக்டெயார் நிலங்களில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளுக்கு தொழில்நுட்பப் பொதியை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடித் திட்டங்கள் தொடங்கப்படும்.

பரசூட் முறையில் நெற்செய்கையை மேற்கொள்வதுடன் ஒரு ஹெக்டெயாருக்கு 07 மெற்றிக் டொன் நெல் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் இலக்கை எட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்துள்ள சோள உற்பத்தியை அதிகரிக்க முறையான உரங்கள் மற்றும் விவசாய இரசாயன நடைமுறைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காய்கறி விளைச்சலைப் பொறுத்தவரை, சில பருவங்களில் அதிகப்படியான உற்பத்தியையும், சில பருவங்களில் பயிர் உற்பத்தியில் பற்றாக்குறையையும் தவிர்க்கும் வகையில், அதிகப்படியான உற்பத்தியின் போது களஞ்சிய வசதிகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, குளிர்பதனக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த அனைத்து விவசாயத் திட்டங்கள் மூலம் விவசாயியை தொழில்முயற்சியாளராக உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்" என்று தெரிவித்தார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவலஉரையாற்றுகையில் "337 கால்நடை வைத்தியப் பணிமனைகள் மூலம், 16 கால்நடை ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்நாட்டின் கால்நடைத் துறையின் முன்னேற்றத்திற்காக தங்களைத் தீவிரமாக அர்ப்பணித்துள்ளன. முக்கியமாக கோழி மற்றும் பால் பண்ணைகளின் வளர்ச்சிக்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஆறு மாகாணங்களில் 150 பண்ணைகளில் கால்நடை முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், புற்தரைகளை மேம்படுத்தவும், தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஒரு திணைக்களமாக நாம் பங்களித்து வருகின்றோம்" என்றார்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் (சேவைகள்) சுமித் சந்தன உரையாற்றுகையில் "இரண்டு வருடங்களுக்கு முன்னர் உர நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைத்து, நாட்டின் தேவைக்கு உரங்களை கொண்டு வருவதற்கு விவசாய திணைக்களம் உழைத்துள்ளது. விவசாயிகளுக்கு போதுமான அளவு யூரியா உள்ளிட்ட இரசாயன உரங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் தனியார் விற்பனையாளர்களிடம் இருந்தும் உரங்களை கொள்வனவு செய்யும் வகையில் சந்தையில் உரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், நிதி மானியம் மற்றும் உரங்களை இலவசமாக வழங்கும் செயல்முறையின் காரணமாக, விளைச்சலில் வெளிப்படையான அதிகரிப்பைக் காண முடிந்தது. கடந்த பெரும் போகத்தில் விவசாயிகளுக்கு மானியமாக 11 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த போகத்திற்காக விவசாயிகளுக்கு 5.6 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளை வலுப்படுத்த GeoGoviya செயலியைப் பயன்படுத்தி விவசாயிகளின் அனைத்துத் தரவுகளையும் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக விவசாயிகளின் தேவைகள் ஆராயப்பட்டு, உடனடியாக சேவைகளை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயத் திணைக்களம் மூலம் இதுவரை 19 பசுமைக் குடில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன" என்றார்.



மேலதிகச் செயலாளர் (விவசாயத் தொழில்நுட்பம்) ஷிரோமணி எதிரிமான்ன உரையாற்றுகையில், "எம்மால் தயாரிக்கப்பட்ட விவசாயக் கொள்கை தற்போது நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அடுத்த பத்து ஆண்டுகளில் 10 பிரிவுகளின் கீழ் விவசாய உற்பத்தியை மேற்கொள்வதற்கான திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், துறைசார் நிறுவனங்களின் தரவு கட்டமைப்புகளை இணைத்து ஒரு தரவுக் கட்டமைப்பை உருவாக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட உள்ளது. இது செயல்திறன் மற்றும் முடிவெடுப்பதை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், விதைகள் சட்டம், விலங்குகள் சட்டம், தாவர பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் விவசாய அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# கிழக்கின் குரல்



## வீரமுனை வரவேற்பு கோபுரம் அமைப்பதில் சிக்கல்; தீர்வை பெற்றுக் கொடுக்க ஆளுநர் நடவடிக்கை

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

வீரமுனை வரவேற்பு கோபுரம் அமைப்பது தொடர்பில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஆராய்வதற்காக அண்மையில் சம்மாந்துறைக்கு விஜயம் செய்த ஆளுநர் அவ்விடத்தைப் பார்வையிட்டு கோபுரம் அமைக்கப்படும் இடத்திற்கும் வீரமுனை கோவிலுக்கும் உள்ள நில அளவை அவதானித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இந்த கோபுரம் அமைப்பதால் எவ்வித சமூக பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். அதற்கமைய சம்மாந்துறை பிரதேச சபை செயலக காரியாலயத்தில் கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, த.கலையரசன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, நீர்ப்பாசனம், நீர் வழங்கல், கிராமிய வீடமைப்பு, கிராமிய மின்சாரம், கட்டட நிர்மாண அமைச்சுக்களின் செயலாளர் எம்.கோபால இரத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வீரமுனை வரவேற்பு கோபுரம் அமைப்பதில் தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கு மதம் சார்ந்த பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் செயற்பட வேண்டும் என்றும் 40 நாட்களுக்குள் இதற்கான சரியான தீர்வை பெற்று தருவதாகவும் உறுதியளித்தார்.

மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் எப்போதும் பிரிந்து செயற்படக் கூடாது, அனைவரும் சகோதரர்கள் போன்று பழக வேண்டுமெனவும் ஆளுநர் தெரிவித்தார்.



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க

## சம்பந்தன் ஐயா தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



சிறுபான்மைச் சமூகத்தின் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க தனது வாழ்நாளை அர்ப்பணித்த தலைவர் இரா. சம்பந்தன் ஐயா என பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தனது இரங்கல் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் வேரூன்றியுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுக்க தனது வாழ்நாள் பூராகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வந்த மூத்த தலைவர் ஒருவரை இழந்திருப்பது சர்வதேச ரீதியில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு சவால்களுக்கு மத்தியில், இனப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனும் முனைப்புடன் செயற்பட்டுவந்த ஒருவரை இழந்திருப்பது பாரிய திருப்புமுனையாக எதிர்காலத்தில் மாற வாய்ப்புள்ளதாகவே பார்க்க வேண்டியுள்ளது.

தனது 91ஆவது வயதில் பல்வேறு வரலாற்றுப் பாடங்களை நம் மத்தியில் விட்டுச் சென்றுள்ள மூத்த அரசியல் ஆளுமை, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் பிரிவுத் துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும், திருகோணமலை மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

## மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகளை அவதானிக்க நீதி அமைச்சின் விசேட குழுவினர் கிழக்கு விஜயம்



(பாலமுனை கிழக்கு தினகரன், ஒலுவில் விசேட நிருபர்கள்)

நீதி அமைச்சின் ஆலோசனை வழிகாட்டலுக்கமைவாக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு மற்றும் பயனுறுதி மிக்க வகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினர் கிழக்கு மாகாணத்துக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருக்கின்றனர்.

மத்தியஸ்த சபைகளின் செயற்பாடுகளை அவதானிக்கும் முகமாக இவ்விஜயம் அமைந்திருந்தது.

அதற்கமைய இக்குழுவினர் அட்டாளைச்சேனை பிரதேச மத்தியஸ்த சபைக்கு விஜயம் செய்தனர்.

அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் மத்தியஸ்த சபை கலந்துரையாடல்களை அவதானித்தபின்னர் மத்தியஸ்த குழுவினருடன் விசேட கலந்துரையாடலொன்றும் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபையின் தவிசாளர் ஐ.எல். ஹாசிம் ஸாலிஹ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.ஆசாத், பயனுறுதிமிக்க வகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளிக்கும் திட்டத்தின் தலைவர் ஜெகஸ் காஸ்ரன், சிரேஷ்ட திட்ட முகாமையாளர் டொக்டர். பாரா ஆல்டன்பேக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடியில் 100 பேருக்கு ஒரே மேடையில் கௌரவம்

### தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை

வாரவலம் ஊடக வலையமைப்பின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காத்தான்குடி பிரதேசத்தில் பல்வேறு துறைகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் 100 துறைசார் பணியாளர்கள் ஒரே மேடையில் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாரவலம் ஊடக வலையமைப்பின் தலைவரும் வாரவலம் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான கவிமாமணி ரீ. எல். ஜவ்பர்கான் தலைமையில் எதிர்வரும் 12ஆம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

துறைசார் பணியாளர்கள் நூறு பேரை கௌரவிக்கும் இந்நிகழ்வில் கௌரவம் பெறுவோர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய 'வேர்கள்' எனும் சிறப்பு மலரும் வாரவலம் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு வெளியீடும் வெளியிடப்படவுள்ளதாக வாரவலம் ஊடக வலையமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் கௌரவ அதிதிகளாக முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம். எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எம்.எஸ்.எஸ் அமீர் அலி உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கனகசிங்கம் உட்பட பலர் சிறப்பு அதிதிகளாக இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வாரவலம் செய்தி பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்பு மலரின் முதன்மை பிரதியை பிரபல தொழிலதிபரும் முபாறக்ஸ் டெக்ஸ் குறூப் பிரைவேட் லிமிடெட் தலைவருமான கலாநிதி எம்.எஸ்.எம் முபாரக் பெற்றுக் கொள்வதுடன் சிறப்பு பிரதியை தொழிலதிபரும் சன்சைன் குறூப் பிரைவேட் லிமிடெட் நிறுவன தலைவருமான எஸ். நந்தகுமாரன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.






முனைத்தீவு மக்களை கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில் புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் என்.ரவிகுமாரும் கலந்துகொண்டார்.

## இரத்ததான முகாம்

(துறைநீலாவணை நிருபர்)



கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 141 ஆவது ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாமொன்று பாடசாலை அதிபர் செ. கலையரசனின் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை, கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இரத்ததான முகாமில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கினர்.

திருகோணமலை மாவட்ட

## ஐக்கிய ஊடக ஒன்றியத்தின் மூன்றாவது வருட பூர்த்தி விழா



(கிண்ணியா மத்திய நிருபர்)

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடக ஒன்றியத்தின் மூன்றாவது வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று மூதூர் கங்கை கடற்கரை ஹோட்டலில், அதன் தலைவர் அமதுரு அமரஜீவ தலைமையில் விசேட நிகழ்வொன்று நடைபெற்றது.

இவ்வைபவத்தில், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜி. திசாநாயக்க பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக குறிஞ்சாகேணி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம்.எம். அஜித் மற்றும் அகம் நிறுவனத்தின் பணிப்பாளர் லாகுவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு அரசியல், சமூக பிரச்சினைகளை தீர்ப்பதில் ஊடக ஒன்றியமானது முன்னின்று செயற்படுவதாகவும், தைரியமாக விமர்சனங்களை முன்வைப்பதுடன் நடுநிலையாக செயற்படும் ஊடகவியலாளர்களை கொண்ட அமைப்பாக செயற்பட்டு வருவதாக அதிதிகள் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துகொண்டனர்.

இந்நிகழ்வில், ஊடகவியலாளர்களுக்கு புதிய ட சேர்ட் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, ஊடக உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மாந்துறையில்

## அரச திணைக்களங்களுக்கு காணி கையளித்தல்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

சம்மாந்துறை தமிழ் பிரிவு 02 கிராம சேவகர் பிரிவில் சம்மாந்துறை காதி நீதிமன்றம் அமைந்துள்ள காணி நீதி அமைச்சுக்கு ஒப்படைக்கும் ஆவணம் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முகம்மது ஹனீபா மாஜிஸ்ரேட் நீதிமன்ற பதிவாளர் திருமதி. ஆரியவதியிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. இதில் காணி உத்தியோகத்தர் ரீ.கே எம். சவாஹிர் கலந்துகொண்டார்.



## நிந்தவூர் அல் அஷ்றக் மாணவர்கள் கௌரவிப்பு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்ற 62 மாணவர்கள் உயர்தரபிரிவு மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரால் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## காரைதீவில் T20 கடினபந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி



(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழகம் தனது 37 ஆவது ஆண்டை சிறப்பிக்கும் முகமாக காரைதீவைச்சேர்ந்த மறைந்த முன்னாள் பிரதேசசபை தவிசாளர் இ.விநாயகமூர்த்தி ஞாபகார்த்தமாக மாபெரும் T20 கடினபந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியை 2024 (சேர்மன் கிண்ணம்) சிறப்பாக நடாத்தி வருகின்றது.

இப்போட்டி கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முன்னணி ஆறு தமிழ் கழகங்களை இணைத்து விபுலானந்தா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. காரைதீவு விளையாட்டுக்கழகம், காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகம்,கல்லாறு சென்ரல் விளையாட்டு கழகம் மற்றும் கிரான் கருணா ஐக்கிய விளையாட்டு கழகம் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

# வடக்கின் உதயம்

## ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா எதிர்வரும் (05/07) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி (22/7) திங்கட்கிழமை வரையான 18 தினங்கள் இடம்பெறவுள்ளன.

21ஆம் திகதி ஸ்ரீபழநி வேல் பவனி நிகழ்வும் 22ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைரவசாந்தி நிகழ்வும் இடம்பெறவுள்ளன. அலங்கார உற்சவப் பெருவிழாவானது சிவஸ்ரீ ச.பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட யூபிலி விழாவை முன்னிட்டு முத்திரை வெளியீடு

(தலைமன்னார் விஷேட நிருபர்)



மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள யாத்திரிகர் ஸ்தலமான மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்ட யூபிலி ஆண்டை முன்னிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆடி பெருவிழாவின் நவநாட்களில் இறுதிநாளான திங்கட்கிழமை (01) காலை 10 மணியளவில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நினைவு தபால் உறையும் 25 ரூபா பெறுமதியான தபால் முத்திரையும் வெளியீடு செய்யப்பட்டன.

இத் தபால் முத்திரை, மருதமடு ஆலய முன்றலில் தபால் மா அதிபதி எஸ்.ஆர்.டபிள்யூ.எம்.ஆர்.பி.றுவான் சத்குமார, மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் கையளித்து வெளியீடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வின்போது கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் சத்துறி பிந்தோ, செயற்பாடு பிரதி தபால் மா அதிபதி டீ.ஏ.ராஜித கே. றனசிங்க, வட மாகாண பிரதி தபால் மா அதிபதி திருமதி மதிவதனி வசந்தகுமார், மன்னார் அஞ்சல் அத்தியட்சகர் நாமல் குமார உட்பட அநுராதபுரம் ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை மற்றும் மடு பரிபாலகர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் மன்னார், யாழ் குரு முதல்வர்கள், மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ஆகியோருடன் அருட்பணியாளர்கள் அருட்சகோதரிகள். அருட்சகோதாரர்கள், விழாவுக்காக வருகை தந்திருந்த பெருந்தொகையான பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாண தமிழ்ச்சங்க புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்திற்குப் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அண்மையில் (30.06.2024) யாழ். நகரில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் பெருந்தலைவராக பேராசிரியர் அ. சண்முகதாசும் தலைவராக பேராசிரியர் தி. வேல்நம்பியும் செயலாளராக செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் பொருளாளராக லோ. துஷிகரனும் உபதலைவர்களாக அருட்பணி ஜெரோம் செல்வநாயகம், சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், பேராசிரியர் சி. செல்வரஞ்சிதம், பா. பாலகணேசன் ஆகியோரும் உப செயலாளர்களாக கு.பாலசண்முகன், முனைவர் கி. அருட்செல்வி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இருபத்தொரு உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இதேவேளை தமிழ்ச்சங்கத்திற்கான அலுவலகமாக கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் உள்ள அறிவாலயத்தை (விரிவுரையாளர் சர்வேஸ்வரா இல்லம்) பயன்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இரா.சம்பந்தன் அவர்களின் இழப்பானது அரசியலில் பாரிய இடைவெளியை தோற்றுவித்துள்ளது

### கே.காதர் மஸ்தான் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள் தனது தொண்ணூற்றோராவது அகவையில் காலமான செய்தியறிந்து துயருற்றேன்.

நீண்ட நெடிய அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட அவர் இலங்கைத் தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். பல்வேறுபட்ட சோதனையான காலங்களிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக உறுதுணையாக நின்றார். ஒரு காலகட்டத்தில் இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவராகவும் விளங்கினார். தலைவர் அமிர்தலிங்கத்திற்கு பின் அந்த ஆசனத்தை அலங்கரித்த ஒரே தமிழ்த் தலைவர் அமரர் சம்பந்தன் அவர்களே.

திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த அவர் அம்மாவட்டத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்திகளை மேற்கொண்டார். தனது வாழ்நாளில் அரிய சேவைகள் பல செய்த அன்னார் இலங்கை அரசியல் வரலாற்றில் தனக்கென பொன்னான வரலாறொன்றை ஆழப்பதித்துச் செல்கின்றார்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## அரச ஊழியர்களை மருந்தகத்தினுள் வைத்து பூட்டிய உரிமையாளர் கைது

(யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் மருந்தகமொன்றை சோதனையிடச் சென்ற இரு அரச உத்தியோகத்தர்களை பூட்டி வைத்த கடை உரிமையாளர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் உள்ள மருந்தகமொன்றிலேயே குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுகாதார அமைச்சகத்தின் உணவு கட்டுப்பாடு நிர்வாக பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர் மருந்தகத்தின் அனுமதி தொடர்பாக மருந்தகமொன்றை சோதனையிட சென்றனர். சோதனையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கும் போது அதிகாரிகளை கடை உரிமையாளர் மருந்தகத்திற்குள் வைத்து பூட்டி அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், மருந்தகத்தினுள் வைத்து பூட்டப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களை மீட்டதுடன், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரை கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடத்தும் பொலிஸார், விசாரணைகளுக்கு பின்னர், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மீன் தாக்கியதில் மீனவர் மரணம்

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணம் குரு நகர் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற மீனவர் முரல் மீன் குத்தியதால் நேற்றிரவு மரணமடைந்துள்ளார். உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய மைக்கேல் கொலின் டினோ யாழ்ப்பாணம் குருநகர் 5 மாடி கட்டடப் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிய வருகின்றது.

நேற்றிரவு இடம்பெற்ற இச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சக தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணிக்க தமிழரசு கட்சி முன்வர வேண்டும்

### அமரர் சம்பந்தனுக்கான அஞ்சலி இதுவே என்கிறார் சித்தார்த்தன் எம்.பி

(பருத்தித்துறை விசேட நிருபர்)



தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்களின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த சம்பந்தன் அவர்கள், தந்தை செல்வா முதல் இன்றைய தலைமுறையினர் வரை அனைத்துக் காலங்களிலும் கைகோர்த்துப் பயணித்த ஒரு தலைவராக திகழ்ந்தவர் என்று ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி அனுதாபம் தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்களால் நடத்தப்பட்ட அறவழிப் போராட்டங்கள் பலவற்றிலும் அமரர் சம்பந்தன் முன்னின்று போராடியிருந்தார். 1961 ஆம் ஆண்டில் எனது தந்தையார் உள்ளிட்ட பல தமிழரசுக்கட்சித் தலைவர்களின் பங்குபற்றுதலுடன், தந்தை செல்வா அவர்களின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயே சம்பந்தன் அவர்களுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு முதல் முதலாக எனக்குக் கிடைத்தது. எனது தந்தையாருடன் அவருக்கிருந்த பலமான நட்புறவு காரணமாக எனக்கும் அவருக்குமான உறவு அன்றைய நாள் தொட்டு சிறப்பானதாகவே அமைந்திருந்தது.

1985 ஆம் ஆண்டு பூட்டான் தேசத்து திம்பு நகரில் தமிழ் அமைப்புகளுக்கும்அரசுக்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சுவார்த்தையின் போது, இராஜதந்திர ரீதியிலான பேச்சுக்களில் வெளிப்படுத்த வேண்டிய ஆளுமை நிறைந்த அணுகுமுறைகள் பற்றி அவரிடம் இருந்து பல்வேறு ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.தான் வரிந்து கொண்ட கொள்கைக்காக, எதிரிகளும் நிராகரிக்க முடியாத வகையில், ஆணித்தரமாக ஆளுமை நிறைந்த வகையில் வாதங்களை முன்வைப்பதற்கு அவர் என்றும் தயக்கம் காட்டியதில்லை.

அவரது நீண்டகால வாழ்வின் அடிப்படையான அரசியல் அபிலாசைகள், கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில், அதற்கான பயணத்தில் சக தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணிக்க அவர் வழிநடத்திய தமிழரசுக் கட்சி இன்று தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு முன்வருவதே அவருக்கான ஆழமான அஞ்சலியாக இருக்க முடியும்' என்று சித்தார்த்தன் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழில் உணவகத்திற்கு சீல்வைத்து 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றிற்கு சீல் வைக்க உத்தரவிட்ட நீதிமன்று, உணவகத்திற்கு 90 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன் போது, பொது சுகாதார பரிசோதகர்களால் கடந்த முறை அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து, திருத்த வேலைகளை செய்யாதமை, தொடர்ந்து சுகாதார சீர்கெட்டுடன் உணவகத்தினை நடாத்திச் சென்றமை உள்ளிட்டவற்றை கண்டறிந்த பொது சுகாதார பரிசோதகர்கள் உணவக உரிமையாளருக்கு எதிராக யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

குறித்த வழக்கு நேற்றைய தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, திருத்த வேலைகள் முடிவடையும் வரையில் உணவகத்தை சீல் வைத்து மூட உத்தரவிட்ட மன்று, 90 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்தது

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சேதம் விளைவித்த இருவர் கைது

(சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் உடைமைக்கு சேதம் விளைவித்த இருவர் (01/07) திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வைத்தியசாலையில் இருந்த நண்பரை பார்வையிடச் சென்ற இருவரே வைத்தியசாலையில் இருந்த கண்ணாடியை உடைத்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோடிங் கற்கை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் மாபெரும் நிகழ்வு



சாவகச்சேரி விசேட நிருபர்

My Dream Academy மற்றும் DP Education IT Campus ஆகியன இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுத்துள்ள coding கற்கை நெறி கற்கைகளை கற்கும் மாணவர்களுக்கான தரச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு (30.06.2024) யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் இடம்பெற்றது.

DP EDUCATION நிறுவன ஸ்தாபகரும், தலைவருமான, பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, My dream academy நிறுவுனரும், பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்கேற்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3000 மாணவர்கள் தமக்கான திறமைச்சான்றிதழ்களை பெற்றுக் கொண்டார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்விப்பாரம்பரியத்தின் புதிய அத்தியாய தொடக்கமாக இந்நிகழ்வு அமைவதோடு, தகவல் தொழில்நுட்ப கல்வியை முற்றிலும் இலவசமாக எமது இளையோருக்கு கொடுப்பதன் ஊடாக, தொழில்நுட்ப புரட்சியொன்றை எம்மண்ணில் ஏற்படுத்துவதே My Dream Academy இன் நோக்கமாக உள்ளது. அத்துடன் நாடுமுழுவதும் மில்லியன் கணக்கான கோடிங் மென்பொருள் வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில் DP Education இப்பணிகளை முன்னெடுத்து வருகிறது.

நாடுமுழுவதும் DP Education நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் IT campus செயற்றிட்டங்கள், யாழ் மாவட்டத்தில் என் கனவு யாழ் அறக்கட்டளையின் my dream academy உடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, நல்லூர், புத்தூர், வல்வெட்டி, நெல்லியடி, தெல்லிப்பழை, சுன்னாகம், வட்டுக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

## இ.போ.ச சாரதி மீது தாக்குதல்

(சாவகச்சேரி விசேட நிருபர்

யாழில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற இ.போ.ச பேருந்தின் சாரதி மீது மாங்குளம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை காலை இரும்புக் கம்பியால் தாக்குதல் நடத்தப்பட்டதில் சாரதி படுகாயமடைந்துள்ளார். மாங்குளம் சந்தியில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த சமயத்தில் தனியார் பேருந்துத் தரப்பினர் மேற்படி தாக்குதலை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் காயமடைந்த இ.போ.ச சாரதி மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

## தமிழ் தேசியம் விலை போகாமல் பாதுகாத்த பெருந்தலைவர் சம்பந்தன்

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்

(மன்னார் குறூப் நிருபர்)



தமிழ் தேசிய அரசியலை கெடுபிடிகளுக்குள்ளிருந்து பாதுகாத்து, சர்வதே சமயப்படுத்திய மிகச்சிறந்த மிதவாத தலைவர் சம்பந்தன் ஐயா என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் ஐயாவின் மறைவையிட்டு அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"விடுதலை அரசியலில் சிறுபான்மைச் சமூகங்களை சம பார்வையுடன் நோக்கிய தலைவர் சம்பந்தன் ஐயா. நீண்ட அரசியல் வரலாற்றனுபவமுள்ள இவர், தமிழ் தேசிய அரசியலை மிக சாதுர்யமாக வழிநடத்தினார். ஜனநாயகத்தின் மீது அவருக்கிருந்த நம்பிக்கையால், கெடுபிடியான காலங்களில் கூட தமிழ்த்தேசிய அரசியல் விலை போகாமல் பாதுகாக்கப்பட்டது. தொண்ணூறு வயதைக் கடந்திருந்தாலும் தீர்வைப் பெற வேண்டும் என்ற திடகாத்திரம் அவருக்கிருந்தது.

ஒரே வாழிடத்தில் ஒரே மொழி பேசுவோராக வாழ்ந்த சிறுபான்மைச் சமூகங்களை, சம பார்வையில் நோக்கிய பெருந்தகையும் இவர்தான். தமிழ், முஸ்லிம் முரண்பாடுகள் ஒரு மொழித் தேசியத்தை (தமிழ்) சிதைக்கக் கூடாது என்பதற்காக முஸ்லிம் தலைமைகளுடன் நல்லுறவை பேணி வந்தார்.

இன்று வரைக்கும் தீர்க்கப்படாதுள்ள தமிழ், முஸ்லிம் அபிப்பிராய பேதங்களைப் போக்குவதற்கு சம்பந்தன் போன்ற தலைமைகளே அவசியம்.

காலம் சென்ற சம்பந்தன் ஐயாவின் கடந்தகால வரலாறுகளிலிருந்து ஒற்றுமைக்கான பல படிப்பினைகளை நான் காண்கிறேன். அவரது வழி காட்டல்களில் சமாதானத்துக்கான கதவுகள் திறந்தே இருந்தன. உரிமை அரசியல் விலை போகக் கூடாது என்பதற்காக தனக்கு வந்த அரிய பல வாய்ப்புக்களையும் அவர் தியாகம் செய்திருந்தார்.

அன்னாரின் இழப்பால் துயருறும் சகலருக்கும் ஆண்டவனின் அருட்கடாட்சம் கிடைக்கட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார் .

## யாழ். வலய கல்வி பணிப்பாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி மாகாண ஆளுநர் அலுவலகம் முன் போராட்டம்

(யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையில் இருந்த சைவக்கடவுள்களின் திருவுருவப்படங்களை அகற்றிய கல்விப் பணிப்பாளரை உடனடியாக யாழ் கல்வி வலயத்தில் இருந்து வெளியேற்றுமாறு கோரி யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை சிவசேனையின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சுவாமி படங்கள் அகற்றப்பட்டமை அலுவலகத்தில் கடமையில் இருந்த இந்து சமய உத்தியோகஸ்தர்களிடையே கடும் அதிருப்தி நிலை காணப்பட்டதுடன் சர்ச்சைகளையும் ஏற்படுத்தின.

அது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்திய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், சுவாமி படங்களை மீள உரிய இடங்களில் வைக்குமாறு உத்தரவிட்டார். இந் நிலையிலையே சிவசேனை அமைப்பினர் வலய கல்வி பணிப்பாளரை யாழ்.கல்வி வலயத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும் என கோரி போராட்டத்தினை முன்னெடுத்தனர். கடமையாற்ற வந்த உடனேயே இவர் நடந்து கொண்டதிலிருந்து, இப்படிப்பட்ட மதவாத சிந்தனை உடைய இவரினால் நேர்மையானதொரு சேவையினை யாழ் கல்விப் புலத்திற்கு வழங்க முடியாது என்பது தெளிவாகவே புலப்படுகிறது. இவரினால் இந்து மாணவர்கள், இந்து ஆசிரியர்கள், இந்து பாடசாலைகள் என்று பலதரப்பும் பல வகையினில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படும் வாய்ப்பும் அதிகளவிலேயே உள்ளது. அவரது மதவாத மனநிலை சார்ந்து தீவிர விசாரணை



முன்னெடுக்கப்பட்டு, இடமாற்றத்தோடு கூடிய தகுந்த தண்டனையும் வழங்கப்படவேண்டும். இந்துக்கடவுள்களினை அவமதித்ததனால் உலக இந்து மக்களிடம் முறையாக ஊடகங்கள் வாயிலாக பொது மன்னிப்பும் கேட்கவேண்டும் என சிவசேனையினர் கோரியுள்ளனர்.

# மின்னுற்பத்திக்கு இலங்கை டீசலில் தங்கியிருப்பது ஏமாற்றம் தருகின்றது

## இந்த நிலைமைக்குக் காரணம் அரசியல்வாதிகள் அல்ல, அதிகாரிகள் தான் – அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் அனில் சர்தானா

நமது விசேட செய்தியாளர்

இலங்கையின் எரிசக்தி நிலைமையானது மிகவும் ஏமாற்றமளிக்கிறது, ஏனெனில் நாடு இன்னமும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் அல்லாமல் டீசல் போன்ற புதைபடிவ எரிபொருளில் அதிகம் சார்ந்துள்ளது என்று இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை மின் பிறப்பாக்கும் நிறுவனமான அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் அனில் சர்தானா கூறினார். இந்த நிலைமைக்குக் காரணம் அரசியல்வாதிகள் அல்ல, அதிகாரிகள் தான் என்றும் அவர் கூறினார்.

இலங்கையானது நீர், காற்று, கடல் மற்றும் சூரிய சக்தி போன்ற இயற்கை ஆற்றல் மூலங்களால் நிரம்பிய ஒரு நாடாகும், புதைபடிவ எரிபொருட்கள் இல்லாமல் அந்த சக்தி மூலங்கள் முழு நாட்டுக்கும் 100% மின்சாரம் வழங்கப் போதுமானது.

"சில அதிகாரிகள் தடை போடுவதாலேயே இந்தத் துறைகளில் முதலீடு செய்ய முயற்சிக்கும் முதலீட்டாளர்கள் பல சவால்களையும், சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர். அந்த அதிகாரிகளின் தவற்றை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே நாங்கள் இலங்கையின் எரிசக்தித் துறையில் நுழைந்தோம்"

மன்னார் மற்றும் பூநகரியில் உள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களில் தாங்களும் இந்த தடைகளை எதிர்கொள்வதாகவும், இவ்வாறான அதிகாரிகளின் எதிர்மறை எண்ணம்தான், நாட்டுக்கு பொருளாதார பலன்களை பெற்றுக்கொடுக்காமல் காலதாமதம் செய்வதாகவும், நாடு 100% புதுப்பிக்கத்தக்க சக்தியில் இயங்குவதற்கு இடமளிக்காமல் தடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



நாட்டுக்கு சக்தியைப் பெற புதைபடிவ எரிபொருட்களை நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானதால், ஏறக்குறைய 60 ஆண்டுகளாக நுகர்வோர் அதிக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது இலங்கையில் போட்டித் தன்மை மிக்க ஏலச் செயற்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளதாகவும், குறைந்த தொகைக்கு காற்றாலை மின்சாரத்தை வழங்குவதற்கான விலைமனுவைச் சமர்ப்பிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். அவ்வாறு சமர்ப்பிக்கும் பட்சத்தில், அதானி குழுமம் அந்த குறைந்த ஏலத்துக்கு வழிவிட்டு நாட்டை விட்டு வெளியேற தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

புதிய சக்தி மூலமும் இயற்கை எரிசக்தியின் புதிய ஆதாரமுமான, பச்சை ஐதரசனைப் பிரித்தெடுக்கும் முறைகளில் இலங்கையும் முதலீடு செய்ய முயற்சிக்க வேண்டும் என்றும் சர்தானா கூறினார். இந்தியாவில் 2029-30 ஆம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற எரிபொருள் உற்பத்திப் பங்களிப்பு மொத்த மின் உற்பத்தியில் 44.7% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிக காற்றாலை ஆற்றலைக் கொண்டிருப்பதனால் உண்டாகும் நன்மைக்கு மேலதிகமாக, பூநகரியையும் மன்னாரையும் தேர்ந்தெடுக்கக் காரணம், அப்பகுதிகளிலுள்ள வறுமைக் கோட்டின் கீழுள்ள மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவேண்டும் என்பதுதான்" என்றும் அவர் கூறினார்.

"இக்காற்றாலைகள் மூலம் அப்பகுதி இளைஞர், யுவதிகள் அதிக வேலைவாய்ப்பைப் பெறுவதோடு, எமது சமூக சேவை முயற்சியின் பயனாக, அப்பகுதி மக்களின் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு, உட்கட்டமைப்பும் மேம்படுத்தப்படும்" என்றார். டெல்லி பல்கலைக்கழகத்தில் மின்னியல்துறை பட்டதாரியான இவர், மின் பிறப்பாக்கும் இயந்திரங்கள், சக்திப் பிறப்பாக்கம், சக்தி விநியோகம் மற்றும் தொலைத்தொட்பு என்பனவற்றின் உட்கட்டமைப்பு தொடர்பில் பரந்த அனுபவம் கொண்டவர்.

உலகின் பல பகுதிகளிலும், பங்களாதேஷிலும் உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் முதலீடு செய்துள்ளதோடு 748 மெகாவாட் மின்சாரம் வழங்கத் தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

"சில அதிகாரிகள் தடை போடுவதாலேயே இந்தத் துறைகளில் முதலீடு செய்ய முயற்சிக்கும் முதலீட்டாளர்கள் பல சவால்களையும், சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர். அந்த அதிகாரிகளின் தவறை அவர்களுக்கு உணர்த்துவதற்காகவே நாங்கள் இலங்கையின் எரிசக்தித் துறையில் நுழைந்தோம்"

**புதிய சக்தி மூலமும் இயற்கை எரிசக்தியின் புதிய ஆதாரமுமான, பச்சை ஐதரசனைப் பிரித்தெடுக்கும் முறைகளில் இலங்கையும் முதலீடு செய்ய முயற்சிக்க வேண்டும்**






## புற்றுநோயாளர்களான உயர்தர மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் பெட்னா நிறுவனம்

கடந்த இருபது ஆண்டுகளாக பாரம்பரிய தேயிலை உற்பத்திப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்துவரும் பெட்னா நிறுவனம், புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு புலமைப் பரிசில் மூலம் கைகொடுக்க முன்வந்துள்ளது. இதை நடைமுறைப்படுத்துவதற்கான இரு தரப்பு ஒப்பந்தம் கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி கொழும்பு கங்காராமவில் நடைபெற்ற எளிய நிகழ்வில் பெட்னா நிறுவனத்துக்கும் மொரட்டுவை நியூ ஹொரைசன் அரிமா சங்கத்துக்கும் இடையில் கைச்சாத்தானது. சமகி செவன புற்றுநோய் நிலைய நிர்வாகி வண.பிதா ஜூட் நிக்கலாங்ஸ முன்னிலையில் பெட்னா சார்பாக அதன் நிர்வாக பணிப்பாளர் சமெந்த சோமதுங்கவும் அரிமா சங்கத்தின் நிர்வாகி வஜிர திலகுமாரவும் இப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

இத் திட்டத்தின் கீழ் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள உயர்தர மாணவர்களுக்கு இரண்டுவருட காலத்துக்கு மாதம் ஐயாயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும். தற்போது 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்தொகை படிப்படியாக அதிகரிக்கப்படவுள்ளது. இலங்கையில் புற்றுநோய் நோயாளர்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவதோடு குறைந்த வயதுடையோர் மத்தியிலும் இது அதிகரித்து வருகிறது. வருடாந்தம் முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் இலங்கையில் புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். மாணவ பருவத்தில் இந்நோயால் பாதிக்கப்படும் போது அவர்கள் பலவிதமான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். எனவே மாணவர்களுக்கு உதவுவது அவசியம் என்பதால் தாம் இத்தீர்மானத்துக்கு வந்ததாக இங்கு உரையாற்றிய பெட்னாவின் நிறுவனத் தலைவர் சோமதுங்க தெரிவித்தார்.




இந்நிறுவனம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரித்த புற்றுநோய்க்கான மருந்து தற்போது 'வேர்நோலக்' என்ற பெயரில் விற்பனையாகி வருகிறது. இம் மருந்து விற்பனையின் மூலம் கிடைக்கும் இலாபம் மாணவர் உதவித் தொகை திட்டத்துக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

## Star Garments குழுமத்தின் புத்தாக்க நிலையத்துக்கு வெள்ளி விருது

முதன் முறையாக முன்னெடுக்கப்பட்டிருந்த நிலைபேறான தொழிற்துறை அபிவிருத்திக்கான பசுமை தொழிற்துறை செயற்பாடுகளுக்கான சர்வதேச அமர்வின் போது, Star Garments குழுமம் ("Star") கட்டுநாயக்கவில் கொண்டுள்ள தனது புத்தாக்க நிலையத்துக்காக "தொழிற்துறையில் வலுச் சிக்கனம்" எனும் பிரிவில் வெள்ளி விருதை சுவீகரித்திருந்தது.



உலகின் முதலாவது 'Passive house factory building' ஆக அமைந்திருப்பதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் காணப்படும் முதலாவது 'Passive House Design' ஆகவும் இது அமைந்துள்ளது. பிந்திய LEED V4 இன் கீழ் சான்றளிக்கப்பட்ட முதலாவது LEED Platinum building ஆகவும் இது அமைந்துள்ளது.

இந்த நிகழ்வு தொழிற்துறை அபிவிருத்தி சபை (IDB) மற்றும் தொழிற்துறை அமைச்சு ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2024 ஜூன் 20, 21 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

தொழிற்துறை என்பது பெருமளவில் வலு நுகரும் வாடிக்கையாளராக அமைந்துள்ளது. தனது பழைய தொழிற்சாலையை புதுப்பிக்கும் போது passive house கொள்கைகளை பயன்படுத்தி, அதன் வலுச் சிக்கனம் மற்றும் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பது தொடர்பில் புத்தாக்கமான வழிமுறையை Star Garments பின்பற்றியிருந்தது.

சிறையிலிருந்து

## நீதிமன்றம் சென்ற போது தப்பிய இரு கைதிகள் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



குருவிட்ட சிறைச்சாலையிலிருந்து துல்ஹிரிய மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு கொண்டு செல்லப்பட்ட போது தப்பிச் சென்ற இரண்டு சிறைக்கைதிகளும் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கட்டுப்பாட்டிலிருந்த இவர்களில் ஒருவர், மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று வீடொன்றில் மாறுவேடத்தில் மறைந்திருந்த போது கைது செய்யப்பட்டதாகவும், மற்றைய கைதி கேகாலையில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர்.

இச்சிறைக்கைதிகள் இருவரும் மோட்டார் சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, குருவிட்ட சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்நிலையில் மீண்டும் வழக்கு விசாரணைக்கு குருவிட்ட சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது நேற்று முன்தினம் இவர்கள் தப்பிச் சென்ற சம்பவம் இடம்பெற்றதாகவும், பொலிஸார் கூறினர்.

கைவிலங்குடன் தப்பிச் சென்ற கைதி ஒருவர் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை திருடி 65 கிலோ மீற்றர் தூரம் தப்பிச் சென்று மொரகஹஹேன பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மாறு வேடம் பூண்டு மறைந்திருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## நுவரெலியாவில் ஆலோசனை சேவை நிலையம் திறந்துவைப்பு

மஸ்கெலியா நிருபர்

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலோசனை சேவை நிலையம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) USAID பிரதி பணிப்பாளர் மைக்கல் ஹெய்ன்ஸ் மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

USAID இன் SCORE திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆலோசனை சேவை நிலையம், பாலின அடிப்படையிலான வன்முறைகளை தடுப்பதற்கான நுவரெலியா மாவட்ட குழு மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் இணைந்து நடத்தப்படுகிறது.

இதன் மூலம் நுவரெலியா மாவட்ட மக்கள் போதைப் பொருள் தடுப்பு, உளவியல், குழந்தைகள் பாதுகாப்பு, பெண்கள், நன்நடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு, வெளிநாட்டு சேவைகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் போன்றவற்றில் ஆலோசனை பெற்றுக்கொள்ள முடியும்.

USAID இன் பிரதி பணிப்பாளர் டெனிஸ் வெஸ்னர், SCORE செயற்றிட்டத்தின் தலைவர் ஜெயதேவன் கார்த்திகேயன், நுவரெலியா மேலதிக மாவட்ட செயலாளர் தினிகா கவிசேகர, நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், மகளிர் அமைப்பு பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.






அரசாங்க தகவல் திணைக்களத்தின் விளையாட்டுக்கழகத்துக்கு ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க நேற்று முன்தினம் அமைச்சில் வைத்து கையளித்து வைத்தார். (படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## முன்பிள்ளை பருவ உளவிருத்தி செயலமர்வு

அக்குறணை குறூப் நிருபர்

முன்பிள்ளை பருவ உளவிருத்தி தொடர்பான செயலமர்வு, மாத்தளை செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றதுடன், இச்செயலமர்வில் பிரதம அதிதியாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சருமான ரோஹண திஸாநாயக்க கலந்து கொண்டார்.

முன்பிள்ளை பருவ ஆசிரியைகள் உட்பட பலர் செயலமர்வில் கலந்து கொண்டு நன்மையடைந்தனர்.

இச்செயலமர்வில் அவர் உரையாற்றிய போது தெரிவித்தாவது,

"குழந்தை பருவத்தை பொறுத்தவரை பிள்ளை முற்பருவம் மிக முக்கியமானது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது போல அது பிற்காலத்தில் நிலையாக இருக்கும். எனவே சரியான வழிகாட்டல்கள் இந்த வயதினருக்கு வழங்கப்பட வேண்டும்" என்றார்.



செயலமர்வில் பங்குகொண்டவர்களுக்கு பல்வேறு வழிகாட்டல் தொகுதிகளும் கையளிக்கப்பட்டன.

## மத்திய மாகாண இஸ்லாமிய தின விழா இம்மாதம் 4 இல்!

மாத்தளை சுழற்சி நிருபர்

அக்குறணை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நாளை (4) பிற்பகல் 1.30 மணிக்கு மத்திய மாகாண இஸ்லாமிய தின விழா நடைபெறவுள்ளது.

மத்திய மாகாண கல்வி திணைக்களத்தினது முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மத்திய மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம்.உனைஸ் தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது.

இதில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிரி பியதாச பிரதம அதிதியாகவும் மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.ஸாருதீன், முன்னாள் மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சி.டி.ஜி.மாயாதுன்ன ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கடந்த 2023ஆம் ஆண்டு மத்திய மாகாணத்தில் மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மீலாத் நபி தின போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ் வழங்கி, பதக்கம் அணிவித்து இதன்போது கௌரவிக்கப்படவுள்ளனர்.

அதேசமயம் மத்திய மாகாணத்தில் ஓய்வு பெறவுள்ள மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள் பலரும் விழாவில் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளதாக, விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு பீதி; சோதனை

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக பொலிஸ் அவசர அழைப்பு பிரிவினருக்கு (119) கிடைத்த தகவலுக்கமைய நீதிமன்ற வளாகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட சோதனை மேற்கொள்ளப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி, நீதிமன்றத்திலிருந்த மக்களை வெளியேற்றி இச்சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர்.

நேற்றையதினம் முற்பகல் 10.00 மணியளவில் இந்த தொலைபேசி அழைப்பு கிடைத்ததாகவும் இதனை அடுத்து உடனடியாக விசேட அதிரடிப்படையினரின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவ்வேளையில் நீதிமன்ற வளாகத்தில் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர்.

# வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூகத்தில் பரப்பப்படும் பொய்கள்!

(02ஆம் பக்கத் தொடர்)

ஆனால் நான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பின்னர் பல அரசாங்கங்கள் செய்த தவறுகளை நிறுத்தினேன்.

அடுத்ததாக வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பின் காரணமாக, எமக்குக் கிடைத்த பலன்கள் குறித்து தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

2022ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த மொத்தத் தேசிய உற்பத்தியில் 9.2 வீதத்தை செலவிட வேண்டியிருந்தது. 2027 முதல் 2032ஆம் ஆண்டு வரையில் அந்தத் தொகையை 4.5 வீதமாக குறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. 2022ஆம் ஆண்டில் மொத்த நிதித் தேவை மொத்த தேசிய உற்பத்தியில் 34.4 வீதமாக இருந்தது. 2027ஆம் ஆண்டு முதல் 2032ஆம் ஆண்டு வரையில் இதனை 13 சதவீதமாக பேண வேண்டும். அதனால், அரச சேவைகளுக்காக பெருமளவு நிதியை ஒதுக்குவதற்கான வாய்ப்பு கிட்டும்.

அதேபோல் உள்நாட்டு வட்டி வீதத்தை மேலும் குறைக்க வாய்ப்பு கிட்டும்.

பாதாளத்தில் விழுந்து கிடந்த எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு ஆதரவளிக்குமாறு கட்சி, பேதமின்றி ஒத்துழைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தேன்.

நீண்டகாலமாக அரசியலில் எனக்கெதிராக செயல்பட்டவர்கள் கூட, நாட்டின் நலனுக்காக இந்தப் பணியில் என்னுடன் நேரடியாகவே கைக்கோர்த்துக் கொண்டனர். இன்னும் சிலர் அமைதியாக ஒத்துழைப்பு வழங்குகின்றனர். மற்றும் சிலர் தொடர்ச்சியாக இடையூறு செய்தனர். தொடர்ந்து விமர்சித்து வந்தனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது உடனடியாக ஐ.எம்.எப்.ஐ நாட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாக இருந்தது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி கூட்டிய சர்வகட்சி மாநாட்டை எதிர்க்கட்சியின் சில தரப்பினர் புறக்கணித்த போதும், தனியொரு எம்.பி.யாக அதில் பங்கேற்றேன். எனது நிலைப்பாட்டை தெளிவாக அறிவித்தேன். ஐ.எம்.எப். உதவிகளைப் பெறுவது மட்டுமே எமக்கான ஒரே வழியாகும் என்பதைக் கூறியிருந்தேன்.

அதிலிருந்து பல மாதங்களின் பின்னர் விழுந்து கிடந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப யாரும் முன்வராத சந்தர்ப்பத்தில் நான் இதனை ஏற்றுக்கொண்டேன். அந்த பாரதூரமான சவாலை எனது நாட்டுக்காகவே ஏற்றுக் கொண்டேன். இலங்கை அன்னையை ஆபத்தான தொங்கு பாலத்திலிருந்து எவ்வாறாவது மீட்டு வருவேன் என சபதமெடுத்து இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். அனைத்து மக்களும் இந்த வேலைத் திட்டத்திற்கு ஆதரவளித்தனர். அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன்.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் ஐ.எம்.எப் உடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம். எம்மை விமர்சித்தவர்கள் ஒருபோதும் ஐ.எம்.எப். பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காது என்று கூறினர். ஆனால் இந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தோம். அப்போது எம்மை விமர்சித்தவர்கள் தடத்தை மாற்றிக் கொண்டனர். ஐ.எம்.எப். ஒத்துழைப்புடன் முன்னேறிய எந்தவொரு நாடும் இல்லை என்று கூறினார்கள். தாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஐ.எம்.எப் இணக்கப்பாடுகளை புறக்கணிப்பதாக கூறுகின்றனர். ஆனால் நாம் வெற்றிகரமாக முன்நோக்கிச் சென்றோம். விமர்சகர்கள் மீண்டும் தடத்தை மாற்றிக் கொண்டனர்.

ஐ.எம்.எப். நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என்று சிலர் சில அறிக்கைகளை மேற்கோள்காட்டி கூறிவந்தனர். எமது வேலைத் திட்டம் சாத்தியமற்றது என்றும் கூறினர். முதலாவது தவணை கிடைத்தாலும், இரண்டாவது தவணைக் கிடைக்காது என்று கூறினர். ஆனால் எமக்கு இரண்டாவது தவணையும் கிடைத்துவிட்டது.

> பிற்போக்கு சிந்தனைக் கொண்டவர்களும் சமூகத்தில் இருக்கின்றனர். நாட்டிற்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுமாறு நான் அவர்களிடம் கோருகிறேன்



> சில அரசியல் குழுக்கள், ஆட்சிக்கு வந்தவுடன் சம்பளத்தை அதிகரிப்போம் என்று கூறுகின்றன. 'வரியைக் குறைப்போம், சலுகைகளை வழங்குவோம்' என்று ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளை வழங்குகிறார்கள். ஆனால் அதற்கான பணத்தை எப்படி திரட்டப் போகிறார்கள் என்பது தொடர்பில் ஒருவார்த்தைக் கூட பேசுவதில்லை!

அப்போது மறுபடியும் விமர்சித்தவர்கள் தடத்தை மாற்றினர். ஐ.எம்.எப். நிபந்தனைகளில் சிலவற்றை பூர்த்தி செய்ய முடியாமல் போனதாக சில மதிப்பீட்டு நிறுவனங்கள் கூறியிருந்தன. அதனால் மூன்றாம் தவணையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறினர். முழு நாட்டையும் அச்சத்தில் ஆழ்த்த முயற்சித்தனர். எனினும், மூன்றாவது தவணையையும் நாம் பெற்றுக்கொண்டோம். விமர்சகர்கள் மீண்டும் தமது தடத்தை மாற்றிக் கொண்டனர். மூன்று தவணைகளைப் பெற்றாலும் கடன் மறுசீரமைப்பு ஒருபோதும் வெற்றியளிக்காது என்று கூறினர். அதுமட்டுமன்றி, மறுசீரமைக்கு இணக்கம் தெரிவிக்க வேண்டாம் என கடன் வழங்கிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சித்தனர். ஆனால் கடன் மறுசீரமைப்புப் பணிகளை நாம் வெற்றிகரமாக நிறைவுசெய்தோம். அப்போது மீண்டும் தடத்தை மாற்றிக் கொண்டார்கள்.

இப்போது கடன் தரப்படுத்தல்களில் இலங்கையின் நிலை மேம்படாமல் இருப்பதால் மறுசீரமைப்பில் பயனில்லை என்கின்றனர். அதனால் நாம் இப்போதும் வங்குரோத்து நாடு என்றும் கூறுகின்றனர். அதுபற்றியும் சில விடயங்களைக் கூற விரும்புகிறேன்.

2019ஆம் ஆண்டில் நாம் சர்வதேச தரப்படுத்தல்களில் B நிலையில் இருந்தோம். 2020ஆம் ஆண்டில் இலங்கை C தரத்திற்கு பின்தள்ளப்பட்டது.கடன் செலுத்த முடியாது என்று அறிவிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே இது நடந்தது. அதனால், தரப்படுத்தல்களுக்காக வேறுபல காரணங்களும் கருத்தில் கொள்ளப்படும் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

இப்போது நாம் பல வெற்றிகளைக் கண்டுள்ளோம். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம். வெளிநாட்டு இரு தரப்பு கடன் மறுசீரமைப்பை நிறைவுசெய்துள்ளோம். வணிகக் கடன்களை மறுசீரமைக்கும் பணிகளை விரைவில் பூர்த்தி செய்ய முடியும். அவற்றையும் விரைவில் நிறைவுசெய்ய முடியும். இதனால், எமது பொருளாதார குறிகாட்டிகள் உயர்வடையும். எமது பொருளாதாரக் குறிகாட்டிகளை மையப்படுத்திய உரிய நேரத்தில் கடன் தரப்படுத்தல்களை மேம்படுத்த சர்வதேச நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கும். அப்போதுதான் எமது விமர்சகர்கள் மீண்டும் தமது தடத்தை மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்.

அரசாங்கத்திற்கும் விமர்சகர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல் அரசாங்கத்திற்கும் வெட்டிப் பேச்சாளர்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல் வாய்ச் சவடால் பேர்வழிகளுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது. நாம் நாட்டிற்காக சரியான கொள்கையுடன், சரியான பாதையில் பயணிக்கிறோம். அவர்கள் அதிகாரத்திற்காக நாளொன்றுக்கு ஒவ்வொன்றைக் கூறுகின்றனர்.

இதுகுறித்து கவனமாக அவதானிக்கும் தரப்பினரும் பாராளுமன்றத்தில் உள்ளனர். பல அரசியல் கட்சிகளையும் சார்ந்தவர்கள் இந்த விடயங்கள் குறித்து சுயாதீனமாகவும், கட்சி சாராமலும் கண்காணித்து வருகின்றனர். அவர்கள் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கட்சிக்காக அல்லது ஒரு தனிநபருக்காக செயல்படுவதா? அல்லது நாட்டிற்காக செயல்படுவதா? என்பது குறித்து கவனம் செலுத்துகின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலை என்ன? அந்த நிலைமையை மறந்துவிட முடியுமா?

பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, சமூக, அரசியல் ரீதியாகவும் அந்த நிலைமை மாறி கடன் மறுசீரமைப்பு தொடர்பான நற்செய்தி வந்தபோது பலர் அதிருப்தியடைந்ததைக் காண முடிந்தது. மண்ணெண்ணெய் பட்ட சாரைப் பாம்பைப் போல நடந்துகொண்டனர். சமூக வலைத்தள மொழியில் கூறுவதாயின், உடம்பில் கம்பளி பூச்சு ஊர்ந்து செல்வது போல் இருந்தது. ஏன் அது?

ஐ.எம்.எப் வேலைத் திட்டம் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது நற்செய்தியா? துயரச் செய்தியா?

எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசைகளில் பல நாட்கள் இனி மேல் காத்திருக்க வேண்டியிருக்காது என்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

30 வீதத்திற்கும் மேலாக இருந்த வங்கி வட்டி வீதம் 9 வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

70 சதவீதத்திற்கும் மேலாகச் சென்ற பண வீக்கம் கடந்த மாத இறுதியில் 1.7 வரை குறைந்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

தொடர்ச்சியாக 6 காலாண்டுகள் ஆட்டம் கண்ட எமது பொருளாதாரம், வளர ஆரம்பித்தது நற்செய்தியா? துயரச் செய்தியா?

2022ஆம் ஆண்டு மே மாதமளவில் அதளபாதளத்தில் வீழ்ந்து, வற்றிப் போயிருந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு 5410 மில்லியன் டொலர்கள் வரை அதிகரித்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

ரூபா வலுவடைந்திருப்பது நற்செய்தியா? துயரச் செய்தியா?

அடிப்படை வைப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

பணத்தை அச்சிடாமல், வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை நிவர்த்தி செய்வது நற்செய்தியா? துயரச் செய்தியா?

வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கலுக்கான நடைமுறைக் கணக்கில் உபரி ஏற்பட்டது நற்செய்தியா? துயரச் செய்தியா?

காலிமுகத்திடல் மைதானத்தில் அடி வாங்காமல் செல்ல, சுதந்திரம் இல்லாதிருந்த கட்சித் தலைவர்களுக்கு, நாட்டின் தெற்கில் இருந்து வடக்கு வரை சென்று வர முடிந்துள்ளமை நற்செய்தியா? துயரச் செய்தியா?

பாராளுமன்றத்திற்கு வருவது மட்டுமன்றி வீடுகளில் கூட இருக்க முடியாமல் இருந்த நாட்டில் எந்த சந்தேகமும் அச்சமும் இன்றி வாழக்கூடிய நிலை உருவானது நற்செய்தியா? துயரச் செய்தியா?

நாடு நல்ல நிலையை அடைவது நற்செய்தியா? துயரச் செய்தியா?

இங்கிருந்து முன்னேறிச் செல்வதற்கு எமக்கிருக்கும் ஒரே வழி இதுவாகும். நற்செய்தியை எதிர்காலம் வரை கொண்டுசெல்வதற்கான ஒரே வழியும் இதுவாகும்.

கடந்த காலத்தில் நாம் பெற்ற வெற்றிகள் ஊடாக அது மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொங்கு பாலத்தின் கஷ்டமான பயணத்தில் தொடர்ந்து செல்ல வேண்டியுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் திரும்பிவர முடியாது. மீண்டும் வேறு வழியில் திரும்பிச் செல்ல முற்பட்டால், ஓரிரு மாதங்களுக்குள் மீண்டும் வரியுகத்திற்குச் செல்ல நேரிடும். மிகப் பெரிய ஆபத்திற்குள் நாடு தள்ளப்படும். 25 30 வருடங்களுக்கு மீட்டெடுக்க முடியாத நிலைக்குள் நாடு தள்ளப்படும்.

ஹுனுவட்டயே கதையில் வரும் குருஷா, குழந்தையைத் தூக்கிக் கொண்டு தொங்கு பாலத்தைக் கடக்கத் தீர்மானித்தார். அந்த நேரத்தில் மாற்று வழிகள் இருக்கவில்லை. அப்போது குருஷாவின் அருகில் இருந்த ஒருவர், ''சாகப் போகிறாரா? அடிவாரம் தெரிகிறதா? பாதாள உலகத்தைப் போல் இருக்கிறது.'' என்று கேட்டார்.

ஆனால் குருஷா, சவால்மிகு தீர்மானத்தை எடுத்தார். அவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு எப்படியாவது தொங்கு பாலத்தைக் கடந்தார். ஆனால் குருஷா தொங்கு பாலத்தில் இருந்து விழுந்துவிடுவார் என்று பலர் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் இறுதியில் அவர், குழந்தையுடன் வெற்றிகரமாக பாலத்தைக் கடந்தார்.

''அவர் விழுவார் என்று பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் கோபத்தோடு கூறினார். இவ்வாறு பிற்போக்கு சிந்தனைக் கொண்டவர்களும் சமூகத்தில் இருக்கின்றனர். நாட்டிற்காகவும், நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுமாறு நான் அவர்களிடம் கோருகிறேன்.

விழும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் நாம் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்பவது குறித்து சிந்திப்போம். அதற்காக பாடுபடுவோம்.

நான் விரும்பும், விரும்பாத, என்னை மதிக்கும், மதிக்காத இந்த சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களிடமும் நாட்டைப் பற்றி சிந்தியுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். அரசியல் அதிகாரத்திற்காகவோ, அரசியல் பிரசித்தத்திற்காகவோ நான் தீர்மானங்களை எடுப்பதில்லை. நாட்டிற்காகவும், இளைஞர்களின் எதிர்காலத்திற்காகவுமே நான் தீர்மானங்களை எடுக்கிறேன். கடந்த இரண்டு வருடங்கள் நான் அரசியல் செய்யவில்லை. அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காக தீர்மானங்களை எடுக்கவில்லை.

இந்த பாராளுமன்றத்தில் என்னைப் போன்று நாட்டை நேசிக்கும் பலர் உள்ளனர். தமது தனிப்பட்ட தேவைகளைவிடவும், நாட்டின் நலன் குறித்து சிந்திக்கும் பலர் உள்ளனர். அவர்கள் அனைவரிடமும் நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியுடன் இணைந்துகொள்ளுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்த நற்பணியில் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம் என்று மீண்டும் அழைக்கிறேன்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# ஜூனியர் சுப்பர் சிங்கர் குரல் தேர்வு எதிர்வரும் 6ஆம் திகதி யாழ் திருமறைக் கலாமன்றத்தில்




C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்படும். வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் இந்தப் போட்டி முதலில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக் காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமறைக்கலாமன்றத்தில் எதிர்வரும் 2024 ஜுலை 06ஆம், 07ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்திலும் சாவகச்சேரி நகராட்சி மண்டபத்திலும் எதிர்வரும் 2024 ஜுலை 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் மூன்றாவது குரல் தேர்வு மன்னார், நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஜுலை 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் அடுத்த குரல் தேர்வு பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் எதிர்வரும் 2024 ஜுலை 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று கிளிநொச்சி, பரந்தன் ஆர்ஜே மஹாலில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 03 ஆம், 04ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று முல்லைத்தீவு, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 10 ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று வவுனியா, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறும். பிரிட்டிஷ் கவுன்சில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஆர்ஜே மஹால், யாழ் பீச் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்ட்டின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் அச்சு ஊடக அனுசரணை வழங்குவதுடன் "சமூகம்", சமூக ஊடக வலைத்தளம் அனுசரணை வழங்கவுள்ளது.



# நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை காப்பாற்றியவர் ஜனாதிபதி ரணில்

## மாத்தறை பொதுக்கூட்டத்தில் அமைச்சர் பிரசன்ன

*(வெலிகம தினகரன் நிருபர்)*

நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பாற்றும் சவாலை அப்போது ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு வருடங்களுக்கு முன்னர் நாட்டுக்காக பாரிய பங்காற்றியுள்ளார் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மாத்தறையில் இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அரசியலில் சில மாற்றங்கள் இடம்பெற்றன. அந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பை எவரும் முன்வராத சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் அப்போது ஏற்றுக் கொண்டார். அதன் பயனை நீங்கள் அனைவரும் அனுபவித்திருப்பீர்கள். இந்த நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டு, சரியான பொருளாதார திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்தினார்.



பொருளாதார பிரச்சினை இன்னும் முற்று முழுதாக தீர்க்கப்படவில்லை. இதிலிருந்து நாட்டை காப்பாற்ற வேண்டுமாயின், அனுபவமுடைய சவால்களை ஏற்கக் கூடிய தலைவர் ஒருவர் தேவை. அந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்றார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ; எமது நாட்டுக்கு வேறு மாற்று வழியில்லை.

ஒரே மாற்று வழி ரணில் விக்கிரமசிங்கவே. கடலில் புயலில் சிக்கிய இலங்கை எனும் கப்பலை மீட்க எந்த கெப்டனும் முன் வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க என்ற கெப்டனால் கப்பலை கைப்பற்றி பாதுகாப்பாக துறை முகத்துக்கு கொண்டு வர முடிந்தது. மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்.

எனவே அடுத்த ஐந்து வருடங்களுக்கு ரணில் விக்கிரமசிங்கவிடம் நாட்டை ஒப்படைக்கும் பொறுப்பு உங்கள் கரங்களிலே உள்ளது. மாத்தறையில் இன்று தொடங்கிய பேரணியை வெற்றியுடன் நிறைவு செய்வோம் என்றார்.

# நகர்வலம்

## அனுர சி. பெரேராவின் முத்திரை வெளியீடு; 'சரசவி' தலைவர் எச்.டீ. பிரேமசிறிக்கு முதல் பிரதி



அறுபதுகளில் இருந்து நம் நாட்டில் வானியல் மற்றும் விண்வெளி அறிவியலை பிரபலப்படுத்துவதில் ஒரு சகாப்தத்தை உருவாக்கும் பணியை ஆற்றிய மூத்த அறிவியல் எழுத்தாளர் மற்றும் வானியலாளர் அனுர சி. பெரேராவின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான முத்திரைப் பணியகத்தினால் வெளியிடப்பட்ட முத்திரைத் தொடர் 'சரசவி' குழுமத்தின் தலைவர் எச். டி. பிரேமசிறிக்கு வழங்கப்பட்டது.

இந்த விசேட நிகழ்வில் இடமிருந்து வலமாக வானியலாளர் அனுர சி. பெரேரா, 'சரசவி ' தலைவர் எச். டி. பிரேமசிறி, பேராசிரியர் ஜே. பி. திசாநாயக்க. 'சரசவி'யவின் பணிப்பாளர் குமுதினி ஹபுதந்திரி மற்றும் 'ஜெம் சிட்டிஸ் அஸ்ட்ரோ' சங்கத்தின் தலைவர், அறிவியல் எழுத்தாளர் ருசின் சத்சரா ஆகியோர் பங்கேற்றனர். இலக்கிய மற்றும் நூல் வெளியீட்டுத் துறையில் பெரும் பங்காற்றிய கலையுலக மாமனிதர் எச். டி. பிரேமசிறியின் 80வது பிறந்தநாளும் இந்நாளில் கொண்டாடப் பட்டது.

# பேருவளை ஸெய்ன் மாவத்தை காபட் வீதியாக புனரமைப்பு





*(பேருவளை விசேட நிருபர்)*

பேருவளை நகர சபைக்குட்பட்ட என்.எம். ஸெயின் மாவத்தை காபட் முறையில் புனரமைக்கும் பணி அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் முயற்சியால் இந்த வீதி காபட் முறையில் புனரமைக்கப்படுகிறது. இதன் புனரமைப்பு பணிகளை பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரர் அஸாம் பளீல் ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் சமூக சேவையாளர்களான பஹ்மி செயின்,எம்.எஸ்.எம். உவைன் ஹாஜி உட்பட பலரும் பங்குபற்றினர்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் 1500 கி.மி. வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ், இந்த வீதி பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் வேண்டுகோளின் பேரில் உள்வாங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இதற்காக 93,42,834.81 ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

குண்டும் குழியுமாக இருந்த இந்த வீதியை புனரமைக்க முன்வந்த பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலுக்கு பிரதேச வாசிகள் நன்றி தெரிவிக்கின்றனர்.

## ஆழ்கடலில் மிதந்து வந்த போத்தல்

# மதுபானம் என நினைத்து அருந்திய அறுவரில் உயிர் தப்பிய நபர்!

### கடற்படையினரால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டார்

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*



தங்காலை மீன்பிடித் துறை முகத்திலிருந்து ஆழ்கடல் மீன் பிடிக்குச் சென்ற ஆறு பேர் ஆழ் கடலில் போத்தலில் மிதந்துவந்து கொண்டிருந்த ஒருவகை பானத்தினை மதுபானம் என நினைத்து அருந்திய ஆறு பேரில் உயிர் தப்பிய நபர் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான விஜயபாகு கப்பிலினூடாக ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தை வந்தடைந்து சிகிச்சைக்காக மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை பொலிஸார் (01) தெரிவித்தனர்.

இவர்கள் ஆறு பேரும் கடந்த நான்காம் திகதி தங்காலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து டெவொன் 5 ஆழ் கடல் படகினூடாக ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தபோது கடலில் மிதந்துவந்த ஒருபோத்தலை மதுபானம் என நினைத்து அருந்தியதில் நோய் வாய்ப்பட்டிருந்துள்ளனர்.

படகில் இருந்த ஆறு பேரில் நால்வர் சம்பவத்தில் படகினுள்ளே உயிரிழந்துள்ளனர். இவர்கள் கடலில் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ளதாக கடந்த 28 ஆம் திகதி தகவல் கிடைத்ததை தொடர்ந்து இலங்கை கடற்படையினர் அந்தபகுதியில் பயணம் செய்து கொண்டிருந்த சிங்கப்பூர் நாட்டு வியாபாரக் கப்பலொன்றுக்கு விடுத்த வேண்டுகோளினை ஏற்று உயிர்தப்பிய இருவரும் படகிலிருந்து பாதுகாப்பாக மீட்கப் பட்டிருந்ததோடு இதில் ஒருவர் அந்தகப்பலில் உயிரிழந்துள்ளார்.

சிங்கப்பூர் நாட்டு வியாபாரக் கப்பலிருந்த உயிர்தப்பிய நபரையும் ஏனைய நபரின் சடலத்தினையும் இலங்கை கடற்படை கப்பலினூடாக நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன் உயிரிழந்து படகில் உள்ள ஏனைய நால்வரின் சடலங்களையும் படகினையும் நாட்டிற்கு எடுத்து வருவதற்கு இலங்கை கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

# கண்டி – கொழும்பு வீதியில் பஸ் விபத்து; 20 பேர் காயம்

*அக்குறணை குறூப் நிருபர்*




கண்டி கொழும்பு பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற பஸ் விபத்தில் 20 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டியும் தனியார் பஸ் வண்டியும் ஒன்றுடனொன்று மோதி இந்த விபத்து சம்பவித்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கண்டி வீதியில், வெவெல்தெனிய பிரதேசத்திலுள்ள வளைவிலேயே இந்த விபத்து இடம்பெற்றதுடன், பாணந்துறையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த உடஹமுல்ல டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டியும் கலென்பிந்துனுவெவ பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் வண்டியுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளானதாகவும், பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் வட்டுபிட்டிவல மற்றும் வரக்காபொல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடிகானிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

*தலவாக்கலை குறூப் நிருபர்*



தலவாக்கலை ஹட்டன் பிரதான வீதியின் கொட்டகலை, ரொசிட்டா பிரதேசத்தில் வீதிக்கு அருகில் காணப்படும் ஆழமான கொங்கிரீட் வடிகானிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை (2) ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சடலம் தொடர்பாக இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும், சடலத்தை அடையாளம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

இது தொடர்பாக ஹட்டன் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ள பொலிஸார், சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதையல் தோண்டிய மூவர் தெல்தெனியவில் கைது

புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் 3 பேர் கண்டி, தெல்தெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுஹேனவத்த பிரதேசத்தில் சுற்றிவளைப்பு மேற்கொண்ட போது இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் தெல்தெனிய பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேக நபர்கள் பூஜை பொருட்கள் மற்றும் புதையல் தோண்டும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

திகன, கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த இச்சந்தேக நபர்கள் 44, 49, 51 வயதுடையவர்கள் ஆவர்.

இச்சந்தேக நபர்களிடம் தெல்தெனிய பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைதானார்



ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கல்கிஸ்ஸையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக கல்கிஸ்ஸை குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் பத்து கிராம் 300 மில்லிகிராம் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானையை சேர்ந்த 48 வயதுடைய இச்சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக கல்கிஸ்ஸை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# தாக்குதல் நடத்தப்பட்டதால் பேருந்துகள் வேலைநிறுத்தம்; பயணிகள் சிரமம்

*நுவரெலியா தினகரன் நிருபர்*

நுவரெலியா, ஹட்டன் குளிரூட்டப்பட்ட பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் மற்றும் ஹட்டன், தலவாக்கலை பகுதிகளிலிருந்து குறுந்தூர சேவைகளில் ஈடுபடுகின்ற அனைத்து பேருந்துகளும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் சேவையில் ஈடுபடவில்லை. இதன் காரணமாக பொதுமக்கள் தங்களுடைய பயணங்களை மேற்கொள்ள முடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

எந்தவிதமான முன் அறிவித்தலுமின்றி இந்த போக்குவரத்து வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டதால் அன்றாடம் தொழிலுக்கு செல்கின்றவர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக குளிரூட்டப்பட்ட பேருந்து சங்கத்தின் நுவரெலியா மாவட்ட தலைவரிடம் வினவிய போது,

"சாதாரண தனியார் பேருந்து உரிமையாளர்கள் தேவையற்ற ஒரு சிறு பிரச்சினையை முன்வைத்துக் கொண்டு 01.07.2024 முதல் இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். ஆனால் நாங்கள் 01.07.2024 அன்று சேவையில் ஈடுபட்டோம். எங்களுடைய ஒரு சில பேருந்துகளுக்கு தாக்குதல் நடத்தப்பட்டதன் காரணமாகவே நாம் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். ஆனாலும் நாங்கள் நாளை முதல் அதாவது இன்று முதல் (03.07.2024) சேவையில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்றோம்" என குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மத்திய மாகாண போக்குவரத்து அதிகாரி சபையின் அதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில்,

"இந்த போராட்டமானது எங்களுக்கு அறிவிக்கப்படாமலேயே முன்னெடுக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பாக நாம் ஆராய்ந்து பார்த்ததில் குளிருட்டப்பட்ட பேருந்து ஒன்றுக்கும் சாதாரண தனியார் பேருந்து ஒன்றுக்கும் இடையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை மையப்படுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இது உண்மையிலேயே தேவையற்ற ஒரு விடயம்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே போராட்டத்தை நிறைவு செய்து பொதுமக்களுக்கான சேவையை வழங்க முன்வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

விசேடமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு இதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கஜமுத்துகளுடன் கைதான சந்தேக நபர்

தங்காலையில் மூன்று கஜமுத்துகளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தங்காலை குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து தங்காலை பாலத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இச்சந்தேக நபர்கள் கஜமுத்துகளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த கஜமுத்துகளை விற்பனை செய்வதற்கு தயாராகிக் கொண்டிருந்த சந்தேக நபரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர் தங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தை சேர்ந்த 26 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

# கொரிய நாட்டு யுவதியிடம் சேட்டை புரிந்தவருக்கு விளக்கமறியல்

கொரியா நாட்டிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணத்தை மேற்கொண்டு நுவரெலியாவுக்கு வருகை தந்த இளம் யுவதியிடம் தகாத வகையில் சேட்டை செய்த குற்றச்சாட்டில் இயந்திர படகு ஓட்டுனர் ஒருவரை விளக்கமறியலில் வைக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பிரபுதிகா நாணயக்கார நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) பிறப்பித்துள்ளார்.

நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணியாக வருகை தந்திருந்த கொரியா நாட்டு இளம் யுவதி, கிறேகறி தெப்பக்குள பகுதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) மாலை அழகை ரசிக்க சென்று அங்கு குளத்தில் இயந்திர படகில் சவாரி செய்ய முற்பட்டுள்ளார். இந்த சமயத்தில் குளத்தில் படகு சேவையில் ஈடுபட்டிருந்த இளைஞர் குறித்த யுவதியிடம் சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதை அடுத்து இந்த யுவதி நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனக்கு நேர்ந்ததை முறையிட்டுள்ளார். அதேநேரம் யுவதியின் முறைப்பாட்டை ஏற்ற சுற்றுலாத் துறைக்கு பொறுப்பான பொலிஸ் பிரிவினர், கிறேகறி குளத்திற்கு சென்று சேட்டையில் ஈடுபட்ட இளைஞரை கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞரை விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதவான் பிரபுதிகா நாணயக்கார சந்தேக நபரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

(ஆ.ரமேஸ்)

# பனங்காடு பிரதேச வைத்தியசாலைக்கு விருது

**(வாச்சிக்குடா விசேட நிருபர்)**

சுகாதார அமைச்சு உலக வங்கியுடன் இணைந்து 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்திய ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் (PSSP) கீழ் சிறந்த வெளிப்பாடுகளை வெளிப்படுத்தியமைக்காக பனங்காடு பிரதேச வைத்தியசாலை 5ஆவது இடத்தை தேசிய ரீதியில் பெற்றுக்கொண்டது.

இவ்விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

விருது வழங்கும் நிகழ்வில் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியர் சக்கீல் சார்பாக வைத்தியர் குணாளின் சிவராஜ் உள்ளிட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் விருதினை பெற்றுக்கொண்டனர்.

இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள பெரும்பாலான வைத்தியசாலைகள் இத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

குறித்த செயற்றிட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் முன்னாள் பணிப்பாளர் ஏ.எல் அலாவுதீனின் காலத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு பின்னர் இச்செயற்றிட்டம் வைத்தியர். ஜீ சுகுணன் மற்றும் வைத்தியர் ஐ.எல்.எம் ரிபாஸ் ஆகியோரின் தலைமையிலும் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. சமகாலத்தில் அதன் பணிப்பாளர் வைத்தியர் சகிலா இஸ்ஸதீன் தலைமையிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இச்செயற்பாட்டின் ஊடாக பிரதேசத்திலுள்ள 35 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தனிப்பட்ட சுகாதார அறிக்கை புத்தகம் தயாரிக்கப்பட்டது.

இதற்காக உபவாச இரத்த பரிசோதனை மற்றும் கொலஸ்ரோல் நிறை, உயரம் உடற்திணிவு சுட்டி என பல அடிப்படை சோதனைகள் செய்யப்பட்டு நோய் அறிகுறிகளை அல்லது நோய்க்கான தாக்கம் உள்ளவர்களை அடையாளம் கண்டு சிகிச்சை மற்றும் அவர்களுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

அந்த இலக்கினை தரப்பட்ட நேரத்திலும் குறுகிய காலத்தில் செய்து முடித்த வைத்தியசாலைகளை தரப்படுத்தியதில் ஆரம்ப சுகாதார பிரிவு வைத்தியசாலைகளுக்குள் நாடளாவிய ரீதியில் பனங்காடு பிரதேச வைத்தியசாலை 5 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இச்செயற்பாடுகள் யாவும் பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் யு.எல்எம்.சகீல் தலைமையில் வைத்தியர் குணாளினி சிவராஜ் மற்றும் தாதிய உத்தியோகத்தர் மாணிக்கவாசகம் தயாகரன் முழுப்பொறுப்பில் தாதிய உத்தியோகத்தர்கள் குடும்பநல உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகாதார உதவியாளர்களின் உதவியுடன் திறன் பட முடிக்கப்பட்டது.

இத்திட்டத்தினூடாகவே சரியான முறையில் இலக்கை அடைந்தமையின் பயனாக குறித்த வைத்தியசாலைக்கு புதிய மாடிக்கட்டடம், பெறுமதியான மருத்துவ ஆய்வுக் கூட இயந்திரம் பற்சிகிச்சை இயந்திரம் என்பன கிடைக்கப்பெற்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

பாராட்டு கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் பணிமனை உயர் அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் எல்லோரையும் சார்ந்தது. இதேநேரம் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான பொதுமக்கள் மற்றும் தனியாரின் நன்கொடை மற்றும் பங்களிப்பும் இவ்வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Drone கருவி ஊடாக நெற் பயிர்ச் செய்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**

நாட்டில் விவசாயத்துறை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தினால் புதிய தொழில் நுட்பரீயிலான வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஜி. பிர்னாஸ் ஹரீஸ் தெரிவித்தார்

அக்கரைப்பற்று கிழக்கு கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட Drone மற்றும் அதனை இயக்குவதற்கான Drone Pilot ஐ கொண்டு அக்கரைப்பற்று ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட நெற் செய்கை காணியில் பரீட்சாத்த வேலைத்திட்டம் ஞாயிற்றுக்கிழமை (30)மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நெற் பயிர்களுக்கு Drone கருவி ஊடாக இலகுவாகவும், விரைவாகவும் விவசாய இரசாயனங்களை விசிற முடியும் என தெரிவித்தார்.

Drone தொழில்நுட்பம் தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.



இதேவேளை, பரசூட் முறையிலான நெல் விதைப்பு முறையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரசூட் முறையிலான நெல் விதைப்பினை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் பொருட்டு முன்னோடியாக ஆலிம் நகர் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு விவசாய திணைக்களத்தினால் தொழில் நுட்ப ஆலோசனைகள் மற்றும் உரம் என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.



உலகத் தன்மம் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் 'உம் உதிரத்தால் அறம் செய் ஓர் உயிர் பிரியா நிலை காக்க உம் உன்னத உதிரம் தர வாரீர்' எனும் தொனிப்பொருளில் உலக இரத்ததான தினம் அண்மையில் களுவாஞ்சிக்குடியில் அனுஷ்டிக்கப்பட்டது. களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு காலை 9.00 மணி தொடக்கம் 2.30 மணி வரை நடைபெற்றது.

(படம்: மணல்சேனை நிருபர்)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க கோரி கவனயீர்ப்பு போராட்டம்

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறையில் நியமனம் வழங்க கோரி கவனயீர்ப்பு போராட்டமொன்று திருகோணமலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதனை திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள கிழக்கு மாகாண சபை வீதியிலிருந்து கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை நடை பவனியாக பதாகைகளை ஏந்தியவாறு நடந்து சென்றனர்.

'பேச்சு வார்த்தை போதும் இனி நியமனத்தை வழங்கு' உள்ளிட்ட பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் ஆளுநர் செயலகத்தில் மகஜரும் கையளித்தனர். இதில் நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.


## இலங்கை வங்கி

**கட்டட கட்டுமானத்திற்கு கூட்டிணைப்பு ஆலோசனைச் சேவை முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான அழைப்பு**

**BID NO: BOC/PROP/P/2024/213**

**இல 497, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள களஞ்சியக் கட்டடத்தினை முழுமையாகப் புதுப்பிப்பதற்கும் அக்கட்டடத்தின் ஒரு பகுதியை புனரமைத்து இலங்கை வங்கியின் ஹைட் பார்க் கிளையை இடமாற்றம் செய்வதற்கும் ஆலோசகர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

மேற்குறித்த கூட்டு ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவமுடைய ஆலோசகர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ள விபரங்களின் படி அரக்கு முத்திரையிட்டு ஒட்டப்பட்ட முன்மொழிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முக்கிய திகதிகள்**

| | |
|---|---|
| முன்மொழிவுகளுக்கான ஆவணத் தொகுதியை (RFP) விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | 2024.07.25 1500 மணிக்கு |
| முன்மொழிவுகளுக்கான ஆவணங்களை (RFP) விநியோகிக்கும கால எல்லை | வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| ஏல விலைகூறுதலுக்கு முன்னரான கூட்டம் | 2024.07.11 1100 மணிக்கு,இலங்கை வங்கி தலைமைக் காரியாலய கட்டடத்தில் 3 ஆம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் |
| முன்மொழிவுகளுக்கான முடிவடையும், திகதியும் நேரமும் | 2024.07.26 1000 மணிக்கு |
| முன்மொழிவுகளைத் திறத்தல் | ஏல விலைகூறல் முடிவடைந்த உடன் |

**மேலதிக விபரங்களை இலங்கை வங்கியின் www.boc.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசகர்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.**

**எந்தவிதக் காரணங்களையும் கூறாது எந்தவொரு முன்மொழிவுகளையும் நிராகரிக்கும் உரிமையும் முன்மொழிவின் ஏதேனும் பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையும் இலங்கை வங்கிக்கு உண்டு.**

**பிரதம முகாமையாளர்**
**சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு**
14 ஆம் மாடி, தலைமையகம்,
"இலங்கை வங்கிச் சதுக்கம்" இல: 01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 1.
தொலைபேசி: 094 112544310, 094 112204260
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

1975 BOC www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்றதோர் வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.



## கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சுத்திகரிப்புப் பிரிவு**

**ஒருகொடவத்த தாங்கி பண்ணை மற்றும் நீர் உள்ளீர்ப்பு நிலையத்தின் தோட்டப் பராமரிப்பிற்காக தொழிலாளர்களை பணிக்கமர்த்துதல்**

**கேள்விக் குறியீட்டு இல. – PD/SER/01/2024**

ஒரு வருட காலத்திற்கு ஒருகொடவத்த தாங்கி பண்ணை மற்றும் நீர் உள்ளீர்ப்பு நிலையத்தின் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக தொழிலாளர்களை பணிக்கமர்த்துவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2024-07-10ஆம் திகதி மு.ப. 09.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2024-07-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094-11-5455332**
**தொலைநகல்: 0094-11-5455424**






(கல்வி அமைச்சு)

## நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**Procurement of a Benchtop Vector Network Analyzer**

**Benchtop Vector Network Analyzer ஒன்றின் பெறுகைக்காக** தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவன (ACCIMT) இன் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை இத்தால் அழைக்கின்றார்.

1) கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

2) ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக தகவலை **2024 ஜுலை 23 ஆம்** திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் **மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும்** 011-2650838 என்ற இலக்கத்தினூடாக ACCIMT இன் நிருவாகத்திற்காக உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3) 2024 ஜுலை 03 ஆம் திகதியிலிருந்து **2024 ஜுலை 23 ஆம்** திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு கேள்விக்கோரலுக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை தொடர்பு விபரங்கள் (தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் இன்னும் பலவும்) ஆகியனவற்றை ACCIMT இன் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளருக்கு செலுத்திய பின்னர் மீளளிக்கப்படாத கட்டணத்திற்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுக்களை நிருவாகத்திற்கான பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் மூலம் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

4) விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், பெறுகைக் குழு, ACCIMT என்ற முகவரியை **2024 ஜுலை 24 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராககிடைக்கும் வயில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை அதே முகவரியில் மூடும் நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

5) **2024 நவம்பர் 20 ஆம் திகதியன்று** வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் **190,000** ரூபாவிற்கான தொகைக்குமானதும் ACCIMT இன் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலகரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப் பிணையொன்றானது அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6) கேள்விப் பிணையானது பின்வரும் முகவரான்மைகளுள் ஒன்றிலிருந்துவழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவது மானவர்த்தக வங்கியொன்றிலிருந்து.
   - இன்னொரு நாட்டில் செயற்படும் வங்கியிலிருந்து, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் உத்தரவாதமானது ''உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்''.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்,**
**272, பண்டாரநாயக்க மாவத்தை,**
**கட்டுபெத்த, மொறட்டுவ.**
**தொலைபேசி: 011-2650838**
**தொலைநகல்: 011-2650662**

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–07–03

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை **(e-GP)** முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **011 -2635886/071-1525234** எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும். | | | | | | | |
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| 01 | முசலி நீர் வழங்கல் திட்டத்திற்கு வெள்ளிமலையில் $1000m^3$ கொள்ளளவுள்ள உயர்தப்பட்ட நீர்த் தாங்கி கோபுரத்தை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல : **NWSDB/N/CP/A2-31-XI/ GOSL/2024/13** | 35,000/- +VAT | ரூபா 1,700,000/- | கட்டிட நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C3 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 169.5 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 26.07.2024 10.00 hours |
| 02 | மாத்தறை நீர் வழங்கல் திட்டம் - யட்டியன முதல் தன்தெனிய வரையில் விநியோக குழாய்வழி மிகுதி வேலைகள் மற்றும் மாத்தறை IV படிநிலை - பரிமாற்றத்தின் மிகுதி வேலைகள்<br>ஒப்பந்த இல : **NWSDB/S/CP/A3-29/GOSL/2024/26G** | 35,000/- +VAT | ரூபா 1,584,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C3 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 158.36 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328 Fax: 011-2635885 | 24.07.2024 10.00 hours |
| 03 | மாரஸ்ஸன நீர் வழங்கல் திட்டத்தில் கந்தேஹந்திய - அப்பல்லகொட - கிவுல்லிந்த வீதியில் குழாய் வழிகளை பிரதியீடு செய்தல்<br>ஒப்பந்த இல: **RSC-C/CE/LAYING/REH/ MARASSANA/2024/85** | 12,500/- +VAT | ரூபா 252,600/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.5 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17.07.2024 14.00 hours |
| 04 | அம்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தில் தலாத்துஓயா குருதெனிய வீதியில் குழாய் வழிகளை பிரதியீடு செய்தல்<br>ஒப்பந்த இல: **RSC-C/CE/LAYING/REH/ AMPITIYA/2024/123** | 6,000/- +VAT | ரூபா 114,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 7.6 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17.07.2024 14.00 hours |
| 05 | உக்குவளை நீர் வழங்கல் திட்டம் - வருமானமற்ற நீர் குறைப்புக்கான வாடகைச் சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC-C/MA/CIVIL/O&M/ UKUWELA/2024/150** | 6,000/- +VAT | ரூபா 96,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.5 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17.07.2024 14.00 hours |
| 06 | களனி பிராந்தியத்தில் (பியகம) பொறியியலாளர் பிரதேசத்தில் குழாய்வழி நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/LR/KEL(O&M)/ 2024/08** | 12,500/- +VAT | ரூபா 312,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.83 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24.07.2024 10.00 hours |
| 07 | தெல்கொட - பூகொட வீதிக்கு DI/HDPE குழாய்கள், விசேடங்கள், பொருத்தல்கள் மற்றும் DI வால்வுகளை பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(WN)/CIVIL/KEL/NRW/2024/52** | 12,500/- +VAT | ரூபா 300,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.0 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24.07.2024 10.00 hours |
| 08 | அநுராதபுரம் வடக்கு பிரதேச நீர் வழங்கல் திட்டத்திற்கு வால்வு அறையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **NRW/NC/DGM/VAL-CHA/APURA-NORTH/2024/057** | 12,500/- +VAT | ரூபா 220,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.1 மில்லியன் | பிஒநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609 | 24.07.2024 14.00 hours |
| 09 | வவுனியா பிராந்தியம் - வவுனியா நீர் வழங்கல் திட்டத்தில் கல்மடுவிற்கு விநியோக வழிகளை பூர்த்தி செய்வதற்காக HDPE/ DI குழாய்கள், பொருத்தல்கள், வால்வுகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் பதித்தல்.<br>ஒப்பந்த இல: **NWSDB/N/CP/A3-23-XXX/GOSL/ 2024/05** | 12,500/- +VAT | ரூபா 161,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.1 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/<br>024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 17.07.2024 14.00 hours |
| 10 | வக்வெல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு 06, 07, 08ஆம் இலக்க விரைவு மணல் வடிகட்டிக்கு வடிகட்டி ஊடகத்தை வழங்குதல் மற்றும் அமைவிடத்தில் வைத்தல்<br>ஒப்பந்த இல : **RSCS/P&C/WG/RH/3301/2024A** | 4,000/- +VAT | ரூபா 31,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு அத்துடன் ஆவணத்தின் பிரகாரம் மற்றும் தேநீவவசபையில் வழங்குவதற்காக பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் | 3.10 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105 Fax 0412221329 | 24.07.2024<br>14.00 hours |
| 2024-06-05ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. மாத்தறை IV கட்ட திட்டங்களின் கல்கெட்டிய முதல் யட்டியன வரை பரிமாற்றம் / குழாய்வழி விநியோகம், விஸ்தரித்தலின் மிகுதி வேலைகள் ஒப்பந்த இல: **NWSDB/S/CP/A3-29/GOSL/2024/26F** - இந்தக் கேள்வியின் தகுதித் தேவைப்பாடுகள் ''நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்'' எனத் திருத்தப்படல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| 2024-06-05ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. மாத்தறை நீர் வழங்கல் திட்டம் - பரிமாற்ற பிரதான குழாய் வழியில் பாலக் கடவை குழாய் வழியை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **NWSDB/S/CP/A3-29/GOSL/2024/26J 26F** - இந்தக் கேள்வியின் தகுதித் தேவைப்பாடுகள் ''நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ்'' எனத் திருத்தப்படல் வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். | | | | | | | |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| 11 | 300 எண்ணிக்கையான 50mm (2'') Gunmetal Ferrules வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **SUP&MM/GF-05/2023/12R (PART)** | 6,000/- +VAT | ரூபா 89,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 25.07.2024 10.00 hours |
| 12 | ஐனுர் - கொத்தட்டுவ பம்பி முறைமையில் ABB ACQ 810-04 VSD பிரிவிற்கு உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RPC/WP/G/AMB/M&E/O&M/ 2024/22** | 4,000/- +VAT | ரூபா 60,000/- | ABB ACQ 810-04 VSD பிரிவிற்கு உதிரிப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் | | பி.ஒ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532 Fax:0112549199 | 24.07.2024 14.00 hours |
| **M & E கேள்விகள்** | | | | | | | |
| 13 | அரலகன்வில மற்றும் மன்னம்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தில் உள்ள பம்பி இல்லத்திற்கு End Suction Centrifugal பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்.<br>ஒப்பந்த இல: **RH/NC/DGM/SUP/PUMPS/ ARA-MAN/2024/074** | 12,500/- +VAT | ரூபா 317,728/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிஒநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609 | 24.07.2024 14.00 hours |
| 14 | கம்பஹா நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு துணைப்பாகங்கள் சகிதம் Alum Dosing பம்பிகள், Lime Dosing பம்பிகள் மற்றும் Alum & Lime Agitators வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/M&E/GAM(RH)/ 2024/35** | 12,500/- +VAT | ரூபா 200,000/- | Alum and Lime dosing Pumps வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146<br>(யக்கல நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி) வேலைத் தளத்தில் 2024-07-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24.07.2024 10.00 hours |
| 15 | சன்னர் நீர் வழங்கல் திட்டத்தில் 41-2777 இலக்க கிணறுக்கு Borehole type Submersible பம்பி, குழாய்கள், பொருத்தல்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தல்.<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/RH/SUP-DEL-PUMP-SANNAR/2024/039** | 6,000/- + VAT | ரூபா 112,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/<br>024-2225719/<br>024-2227340<br>Fax:024-2225088/<br>024-2227341<br>வவுனியா, யாழ்ப்பாணம் வீதி, தேநீவவச, பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தில் 2024-07-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24.07.2024 14.00 hours |
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 16 | உட/யட்டிநுவர நீர் வழங்கல் திட்டம் - கன்னொருவ, உட பேராதனை, கடுகண்ணாவ மற்றும் ஹந்தான வலயத்திற்கு நீர் மானி வாசித்தல், நீர்க் கட்டண பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு சேவை வழங்குவதற்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல: ප්‍රාසේ/මද/සේවා/කිරිහොන/උඩු/ යටිනුවර**/2024/189** | 6,000/- +VAT | ரூபா 73,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17.07.2024 14.00 hours |
| 17 | IDH - கொத்தட்டுவ புதிய நகரம், ஆதார வைத்தியசாலை வீதியிலுள்ள பிரதேச முகாமையாளர் (கொலன்னாவ) அலுவலகத்திற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல : **WC/M(K)/KOLONNAWA/ JANITORIAL/2023/02-R** | 2,000/- +VAT | ரூபா 28,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்கும் துறையில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைக் கொண்ட வியாபார பதிவு ஒழுங்குவிதி முறையின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் | 1.9 மில்லியன் | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/<br>0112856420-2 | 17.07.2024 10.00 hours |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 18 | வலப்பனை பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/ CE/2024/156** | 4,000/- +VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.1 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17.07.2024 14.00 hours |
| 19 | திருகோணமலை பிராந்தியத்திலுள்ள கிண்ணியா நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E) /DGM/O&M/HIRING-TW-KIN/ TRINCO/2024/36** | 2,000/- +VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 1.12 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028<br>Fax:026-2225225 | 17.07.2024 10.00 hours |
| 20 | திருகோணமலை பிராந்தியத்திலுள்ள நகர நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/HIRING-TW-TOWN/ TRINCO/2024/37** | 2,000/- +VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 1.12 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028<br>Fax:026-2225225 | 17.07.2024 10.00 hours |
| 21 | திருகோணமலை பிராந்தியத்திலுள்ள சேருநுவர நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/HIRING-TW-S'NUWARA/ TRINCO/2024/38** | 2,000/- +VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 1.12 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028 Fax:026-2225225 | 17.07.2024 10.00 hours |
| 22 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள செங்கலடி நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை (பெட்ரோல்) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/HIRING-TW-CHENKALADY/BATTI/2024/43** | 2,000/- +VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 1.44 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/<br>026-2222028 Fax:026-2225225 | 17.07.2024 10.00 hours |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள மண்டூர் நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை (பெட்ரோல்) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/HIRING-TW-MANDOOR/BATTI/2024/44** | 2,000/- +VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 1.44 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 026-2222028 Fax:026-2225225 | 17.07.2024 10.00 hours |
| 24 | மட்டக்களப்பு பிராந்தியத்திலுள்ள கொக்கட்டிச்சோலை நீர் வழங்கல் திட்டத்திற்கு முச்சக்கர வண்டியொன்றை (பெட்ரோல்) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(E)/DGM/O&M/HIRING-TW-KOKKADICHOLAI/BATTI/2024/45** | 2,000/- +VAT | ரூபா 2,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 1.44 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 026-2222028 Fax:026-2225225 | 17.07.2024 10.00 hours |
| 25 | பொலன்னறுவை பிராந்தியத்திற்கு பெக்கோ இயந்திர சேவையை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **O&M(P)/NC/DGM/HIRE-BACKHOE/POL/2024/056** | 4,000/- +VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.42 மில்லியன் | பிஔநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அநுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339 Fax: 0252225609 | 24.07.2024 14.00 hours |
| 26 | பிராந்திய முகாமையாளர் (பாணந்துறை - ஹொரணை) பிரதேசத்திற்கு Dual A/C வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/H(07)/P-H/O&M/2024/29R-01** | 4,000/- +VAT | ரூபா 15,000/- | குறைந்தபட்சம் 04 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.59 மில்லியன் | பி.ஔ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 18.07.2024 10.00 hours |
| 27 | வவுனியா, மேலதிக பொது முகாமையாளருக்கு (N/NC) வாகனத்தை (Double Cab) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M/Hiri-Vehi-Addl(N/NC)/2024/093** | 6,000/- +VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் பதிவு | 5.01 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341 | 17.07.2024 14.00 hours |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# கேள்விக்கான அழைப்பு

## ஹோமாகம வலயக் கல்விப் பணிமனை - 2024

ஹோமாகம வலயக் கல்விப் பணிமனையின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் உருப்படிகளை 2024ம் ஆண்டின் மிகுதிக் காலத்திற்காக கொள்வனவு செய்வதற்காக **2024.07.24 மு.ப.10.00** வரை தகைமையை பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகிறது. (அனுமதிக்கப்பட்ட தொகை - கேட்போர்) கூட கதிரைகள் **ரூ.5,000,000/-** நூலகத்திற்கு தேவையான பொருட்களை ரூ.1,000,000 ஸ்மார்ட் போட் (Smart Board) மற்றும் லெப்பொட் கணனியொன்றை (Laptop Computer) ரூ. 1,000,000/-)

| | உருப்படி | மீளளிக்கப்படாத தொகை (ரூ) | மீளளிக்கப்படும் தொகை (ரூ) | மேலதிக விபரங்களுக்கு தொடர்புகளுக்கு |
|---|---|---|---|---|
| P1 | கேட்போர்கூட கதிரை | 1,000.00 | 25,000.00 | 011 - 2855245 |
| P2 | நூலகத்திற்குத் தேவையான பொருட்கள் (புத்தக ராக்கை, வாசிப்பு மேசை, கதிரை) | 1,000.00 | 5,000.00 | |
| P3 | ஸ்மார்ட் போட் (Smart Board) மற்றும் லெப்டொப் கணனி (Laptop Computer) | 1,000.00 | 5,000.00 | |

- ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், ஒரு உருப்படிக்காக மட்டும் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.
- கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கும் அளவு 2024ம் ஆண்டின் மிகுதி காலத்திற்குள் தேவைப்பாட்டின் அடிப்படையில் மாற்றமடையலாம்.

1. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் பிரகாரம் இடம்பெறும்.
2. விலைமனுக்களை சமர்ப்பிக்கப்படும், சகல பொருட்களுக்கும் குறித்த சாம்பிள்களின் 2024.07.25 மு.ப. 10.00 இற்கு வலயக் கல்விப் பணிமனைக்கு சமர்ப்பித்தல் கட்டாயமாவதுடன், பரிசீலனையின் பின்னர் மீளக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும். இது பற்றி மறு அறிவித்தல் மேற்கொள்ளப்பட மாட்டாது.
3. தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநருக்கு ஓடர் வழங்கிய தினம் முதல் 07 நாட்களுக்குள் மாதிரிகளுக்கு அமைவாக பொருட்கள் வழங்குதல் இடம்பெறுதல் வேண்டும்.
4. மேற்படி கேள்விக்கு ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடைய கேள்விதாரர்கள் 2024.07.04 முதல் 2024.07.23 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப.2.30 வரை அலுவலக நேரங்களில் கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து, ஒவ்வொரு வகுதிகளுக்கும் வேறுவேறாக மீளளிக்கப்படாத கட்டணத்தை வலயக் கல்விப் பணிமனையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. சமர்ப்பிக்கப்படும் சகல கேள்விக்கும் கேள்விப் பிணையுடன் சம்பந்தப்பட்ட செலுத்தப்படும் வைப்புத் தொகையைச் சமர்ப்பித்த பின்னர், அதற்காக விநியோகிக்கப்பட்ட **பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை இணைத்திருத்தல் கட்டாயமாகும்.**
7. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.07.24 மு.ப. 10.00 இற்கு முன்பு வலயக் கல்விப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் அல்லது வலயக் கல்விப் பணிமனைக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
8. இவ் விலைமனுக் கோரலை இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த மாற்றங்கள் சம்பந்தமாகவும் உள்ள அதிகாரம் பெறுகைக் குழுவின் தலைவருக்குரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வலயக் கல்விப் பணிமனை,**
**நீதிமன்ற வீதி,**
**ஹோமாகம,**
**2024 ஜூலை 03ம் திகதி**







# திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி வெற்றி



**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி கோட்ட மட்ட 18 வயதுக்குட்பட்ட கால்ப்பந்தாட்ட போட்டியில் சம்பியன் கிண்ணத்தை திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி வென்றது. கடந்த வெள்ளிக்கிழமை (28) இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய அணியை திகழி முஸ்லிம் மகா வித்தியால அணி தோற்கடித்ததது.

# இலங்கை – இங்கிலாந்து இளையோர் தொடரை தீர்மானிக்க இன்று களத்தில்



இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு எதிரான இரண்டாவது இளையோர் ஒருநாள் போட்டியில் 30 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரை 1–1 என சமநிலைக்கு கொண்டுவந்தது.

ஹோவ் கௌண்டி மைதானத்தில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பில் ஆரம்ப வீரர் பிரட்டி மக்கன் 139 பந்துகளில் 174 ஓட்டங்களை பெற்றார். இதன்மூலம் அந்த அணி 50 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 360 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் துனிர களுபஹன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதிலெடுத்தாடி இலங்கை இளையோர் அணி கடைசி வரை போராடியபோதும் அந்த அணி 49.2 ஓவர்களில் 330 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. ஆரம்ப வீரர் புலிந்து பெரேரா அதிகபட்சமாக 59 பந்துகளில் 64 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் தொடரை தீர்மானிக்கும் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று (03) அதே ஹோவ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# கால்பந்து சம்பியனானது கலாவெள முஸ்லிம் மத்தி



**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

கெகிராவ கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக்கு உட்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் கலாவெள முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு வடமத்திய மாகாணத்திலுள்ள எட்டு கல்வி வலயங்களுக்கு இடையிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டி கெகிராவ பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் கடாண்டுகம ஜாயாஹ் முஸ்லிம் மகா வித்தியாலய அணிக்கும் கலாவெள முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையில் இடம்பெற்றதுடன், கலாவெள முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அணியினர் 2–0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர்.



# மைதானத்தில் கண்ணீர்விட்ட ரொனால்டோ

போர்த்துக்கல் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெனால்டி வாய்ப்பை தவறவிட்டதால் மைதானத்திலேயே கண்ணீர் விட்டு அழுதார்.

யூரோ கிண்ண தொடரில் ஸ்லோவேனியாவுக்கு எதிரான போட்டியின்போது கூடுதல் நேரத்தில் ரொனால்டோ பெனால்டி மூலம் கோல் அடிக்க முயன்றார். ஆனால் ஸ்லோவேனிய கோல்காப்பாளர் அதைத் தடுத்து விட்டார்.

எனினும் இதனால் போர்த்துக்கலின் வெற்றி பாதிக்கப்படவில்லை. ஷூட்அவுட் முறையில் அந்த அணி யூரோ கிண்ணத்தின் காலிறுதிக்கு முன்னேறியது.

இந்தத் தொடரில் முதல் கோலை அடிக்கும் முயற்சியில் ரொனால்டோ தொடர்ந்து ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் பெனால்டி கோலை அவரால் அடிக்க முடியததால் கண்ணீர் மல்க அழ ஆரம்பித்தார். சக வீரர் பல் கின்ஹா அவரை ஆறுதல்படுத்தினார். ரொனால்டோ அழுவதை பெரிய திரையில் கண்ட அவரது ரசிகர்கள் அவரை உற்சாகப்படுத்தும் பாடலைப் பாடினர்.

பெனால்ட்டி ஷூட் அவுட்டில், 3-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வெற்றி பெற்றது. 'முதலில் ஒரு துயரம். பின்னர் மகிழ்ச்சி அதுதான் கால்பந்து உங்களுக்குத் தருவது' என்று வெற்றி பெற்ற பின்னர் ரொனால்டோ கூறினார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஹம்பர்க்கில் நடக்கும் காலிறுதிப் போட்டியில் போர்த்துக்கல் அணி பிரான்ஸை எதிர்கொள்ளவுள்ளது.

இம்முறை யூரோ கிண்ண தொடரின் லீக் சுற்று போட்டிகளில் கோல் அடிக்க தவறியதன் மூலம், ரொனால்டோ இத்தொடரின் லீக் போட்டிகளில் முதல் முறையாக கோலை பதிவு செய்ய தவறியுள்ளார். ரொனால்டோ கடந்த எட்டு யூரோ கிண்ணம் அல்லது உலகக் கிண்ணப் போட்டிகளில் கோல் அடிக்காமல் இருந்ததில்லை.

# டிரம்புக்கு குற்றவியல் வழக்குகளில் விலக்கு



அமெரிக்காவில் டொனல்ட் டிரம்ப் உள்ளிட்ட முன்னாள் ஜனாதிபதிகள் குற்றவியல் வழக்குகளிலிருந்து ஓரளவே விலக்குப் பெற்றிருப்பதாக அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முனையும் டிரம்ப்புக்கு அது சட்டபூர்வமான வெற்றியாகக் கருதப்படுகிறது.

2020ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவை மாற்றியமைக்க டிரம்ப் சதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைத் தீர்ப்பு முழுமையாக நிராகரிக்கவில்லை. இருப்பினும் அவருக்கு எதிரான வழக்கின் முக்கியக் கூறுகளை அது நீக்கியுள்ளது.

அதிகாரபூர்வச் செயல்பாடுகளில் ஜனாதிபதி விலக்குப் பெற வாய்ப்பு உள்ளது. ஆனால், அதிகாரபூர்வமற்ற செயல்பாடுகளில் அதற்கு வாய்ப்பு இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் ஜனநாயகத்துக்கும் மாபெரும் வெற்றி என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் டிரம்ப் தம்முடைய ட்ரூத் சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# பாதசாரிகளின் மீது கார் மோதி ஒன்பது பேர் பலி



தென் கொரிய தலைநகர் சோலில் கார் ஒன்று பாதசாரிகள் மீது மோதிய விபத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உள்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 60 வயதுகளில் இருக்கும் ஓட்டுநர் போக்குவரத்து நிறுத்தத்தில் காத்திருந்த பயணிகள் மீதே காரை மோதவிட்டுள்ளார்.

இதில் காயமடைந்த மேலும் நால்வர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தவறான திசையில் வந்த கார் இரு வாகனங்களில் மோதிய பின்னரே பாதசாரிகள் மீது மோதி இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென் கொரியாவில் நகரப்புற வீதிகளின் பொதுவான வேக வரம்பு மணிக்கு 50 கிலோமீற்றர் என்றும் குடியிருப்பு பகுதிகளில் மணிக்கு 30 கிலோமீற்றர் என்றும் வீதிப் பாதுகாப்பு தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# தெற்கு காசாவில் இஸ்ரேல் மீண்டும் வெளியேற்ற உத்தரவு: தாக்குதலுக்கு மத்தியில் மக்கள் ஓட்டம்



காசாவில் இஸ்ரேலிய இராணுவம் நேற்றைய தினத்திலும் பெரும் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்திய தாக்குதல்களை நடத்தியதோடு பலஸ்தீன போராளிகளுடன் கடும் மோதலில் ஈடுபட்டது. தெற்கு காசாவின் இஸ்ரேல் மற்றும் எகிப்து எல்லைப் பகுதிகளில் இருந்து பலஸ்தீனர்களை மீண்டும் ஒருமுறை வெளியேறுவதற்கு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

தெற்கு காசாவின் பிரதான நகரான கான் யூனிஸை சூழ கடுமையான குண்டு தாக்குதல்கள் மற்றும் செல் வீச்சுகள் இடம்பெற்று வருவதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த நகரில் பல மாதங்கள் இடம்பெற்ற பெரும் அழிவை ஏற்படுத்திய இராணுவ நடவடிக்கையை அடுத்து இஸ்ரேலியப் படை கடந்த ஏப்ரல் ஆரம்பத்தில் இங்கிருந்து வாபஸ் பெற்றிருந்தது.

இங்கு இடம்பெற்ற செல் தாக்குதல்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டு 30க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாக அந்த நகரில் உள்ள மருத்துவ வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது.

காசாவில் இருந்து இஸ்ரேல் மீது சரமாரி ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்தே இஸ்ரேலியப் படை கான் யூனிஸ் நகரை இலக்கு வைத்துள்ளது.

இந்த ரொக்கெட் தாக்குதல்களை அடுத்து அல் கரார மற்றும் பானி சுஹைலா சிறு நகரங்கள் உட்பட கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களின் கிழக்கில் பெரும் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டது.

இஸ்ரேலின் இந்த உத்தரவு குடியிருப்பாளர்கள் இடையே பெரும் அச்சம் மற்றும் தீவிர கவலையை ஏற்படுத்தி இருப்பதாகவும் இங்கு பெரும் எண்ணிக்கையான இடம்பெயர்ந்த மக்கள் வசிப்பதாகவும் பானி சுஹைலாவைச் சேர்ந்த அஹ்மது நஜ்ஜார் குறிப்பிட்டுள்ளார்.

காசா நகரின் சுஜையா பகுதியில் கடந்த வாரம் இவ்வாறான வெளியேற்ற உத்தரவை பிறப்பித்த பின் அங்கு கடந்த ஆறு நாட்களாக கடுமையான தாக்குதல்களை இஸ்ரேலியப் படை நடத்தி வருகிறது.

வடக்கு காசாவில் உள்ள இந்தப் பகுதியில் நேற்றும் துப்பாக்கிச் சண்டைகள் இடம்பெற்றதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

சுஜையா, மத்திய காசா மற்றும் ரபாவில் படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரேலியப் படை தெரிவித்துள்ளது. படையினர் அங்கு வான் தாக்குதல்களை நடத்துவதாகவும் துருப்புகள் ஒரு காரில் 'ஆயுதமேந்திய பயங்கரவாதப் படையை பதுங்கியிருந்து' கொன்றனர் என்றும் இஸ்ரேல் இராணுவம் கூறியது.

மத்திய காசாவில் நுஸைரத் அகதி முகாம் தாக்குதல்களுக்கு இலக்கானதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டிருப்பதோடு அங்கு குழந்தை ஒன்று கொல்லப்பட்டதை பலஸ்தீன செம்பிறை சங்கம் உறுதி செய்துள்ளது.

காசாவின் ஏனைய பகுதிகளிலும் சுமார் ஒன்பது மாதங்களாக இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் தொடர்ந்து நீடிக்கின்றன.

இந்நிலையில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேலியப் படை உத்தரவு பிறப்பித்து சுமார் இரண்டு மாதங்களிலேயே புதிய வெளியேற்ற உத்தரவு வந்துள்ளது. ரபாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய உத்தரவால் இரவு நேரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டதோடு வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட கராரா, அபசான் மற்றும் ஏனைய பகுதிகள் மீது இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் போர் விமானங்கள் தாக்குதலை ஆரம்பித்ததாக குடியிருப்பாளர்கள் மற்றும் ஹமாஸ் ஊடகம் குறிப்பிட்டது.

'நாம் எங்கே போவது?' என்று 55 வயதான வர்த்தகர் தமர் கேள்வி எழுப்பினார். அவர் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் இதுவரை ஆறு தடவைகள் இடம்பெயர்ந்துள்ளார்.

'ஒவ்வாரு முறையும் மக்கள் தமது விடுகளுக்கு திரும்பி இடிபாடுகளுக்கு மத்தியிலும் கூட தமது வாழ்வை கட்டியெழுப்பும்போது ஆக்கிரமிப்பாளர்கள் டாங்கிகளை அனுப்பி எஞ்சியவற்றை அழிக்கின்றனர்' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இந்த வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதியிலேயே ஐரோப்பிய காசா மருத்துவமனை உள்ளது. இங்கு கான் யூனிஸ் மற்றும் ரபா நகரங்களுக்கான மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்நிலையில் மருத்துவமனையில் இருந்து மருத்துவ அதிகாரிகள் நோயாளர்கள் மற்றும் அங்கே அடைக்கலம் பெற்ற குடும்பங்களை வெளியேற்றி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதில் சில குடியிருப்பாளர்கள் மேற்குப் பக்கமான கடற்கரையை ஒட்டிய மவாசி பகுதியை நோக்கிச் செல்கின்றனர். இது மனிதாபிமான பகுதியாக அறிவிக்கப்பட்டபோதும் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகிறது. தற்காலிக முகாம்கள் இல்லாததால் சிலர் வீதிகளில் உறங்கி வருகின்றனர்.

காசாவில் இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்து முதல் மூன்று வாரங்களிலும் வடக்கு காசாவில் அவதானம் செலுத்தியதோடு அங்கிருந்து பலஸ்தீன போராளிகள் அகற்றப்பட்டதாக குறிப்பிட்டிருந்தது. எனினும் அங்கு மீண்டும் ஒருங்கிணைந்திருக்கும் போராளிகள் இஸ்ரேலிய படை மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த மே ஆரம்பம் தொடக்கம் இஸ்ரேல் ரபா மீதே அவதானம் செலுத்தி வருகிறது. இங்குள்ள நான்கு ஹமாஸ் படைப்பிரிவுகளில் மூன்றின் திறன் சிதைக்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் நம்புகிறது.

இங்கு தொடர்ந்து 10,000 மக்கள் வரை இருப்பதாக கணிக்கப்படுகிறது. இஸ்ரேலிய டாங்கிகள் நகரின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளை நோக்கி கடந்த திங்கட்கிழமை முன்னேறி வந்தது.

போரின் தீவிர கட்டத்திற்குப் பின்னர் ஹமாஸ் மீண்டும் ஒருங்கிணைவதை தடுக்கும் வகையில் சிறிய அளவிலான படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸின் படை பலத்தை அழிக்கும் இலக்கை இஸ்ரேல் நெருங்கி இருப்பதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். எனினும் தீவிரம் குறைந்த நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

'ஹமாஸின் பயங்கரவாதப் படையை ஒழிக்கும் இறுதிக் கட்டத்தை நோக்கி நாம் முன்னேறி வருவதோடு அதன் எச்சங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்' என்று நெதன்யாகு குறிப்பிட்டிருந்தார்.

காசாவில் இருக்கு இஸ்ரேலியப் படையினர் மீது ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு அவ்வப்போது இஸ்ரேல் மீதும் ரொக்கெட் குண்டுகளை வீசி வருகின்றனர். இந்தப் போரின் இலக்குகளை எட்டுவதில் நெதன்யாகு தோல்வி அடைந்திருப்பதாகவும் தமது அமைப்பு பல ஆண்டுகளுக்கு போரிடுவதற்கு தயாராக இருப்பதாகவும் கடந்த 2007 ஆம் ஆண்டு தொடக்கம் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா ஆதரவில் அரபு மத்தியஸ்தர்களால் முன்னெடுக்கப்படும் போர் நிறுத்த முயற்சிகளும் ஸ்தம்பித்துள்ளன. எட்டப்படும் எந்த ஓர் உடன்படிக்கையும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது அவசியம் என்று ஹமாஸ் உறுதியாக இருக்கும் அதேநேரம், தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கே விருப்பத்தை வெளியிட்டு வரும் இஸ்ரேல் ஹமாஸை ஒழிக்கப்போவதாக சூளுரைத்து வருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 3ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## வட மத்திய மாகாண சபை

## மாகாண ஆயுர்வேதத் திணைக்களம்

### உலர்ந்த மருந்து வழங்கும் சேவை 2024ம் ஆண்டு

வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் மாகாண மருந்து உற்பத்தியகங்களுக்கு உலர்ந்த மருந்துகளை வழங்கும் சேவைக்கு பொருத்தமான வழங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் சார்பாக வட மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவர்/ அமைச்சு செயலாளரான என்னால் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | தேவைப்படும் சேவை | கேள்வியுடன் சமர்ப்பிக்க வேண்டிய மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து பெற்றுக் கொண்ட 119 நாட்கள் (2024.11.19) செல்லுபடியாகும் நிபந்தனையற்ற கேள்வி பிணை முறியின் பெறுமதி (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|
| 01 | உலர் மருந்துகள் வழங்குதல் வடமத்திய மாகாணத்தின் சகல ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மாகாண மருந்து உற்பத்தியகத்திற்கு உலர் மருந்துகள் வழங்குதல் | 443,000.00 | 4000.00 |

கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்.

03. மேற்படி வழங்கலுடன் சம்பந்தப்பட்ட பெயர் பதிவு மற்றும் உலர் மருந்துகள் வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட 03 வருட அனுபவத்துடன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியானோர் பட்டியல் இடப்படாத விண்ணப்பதாரர்களால் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடமத்திய மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்காளருக்கு செலுத்திய பின்னர் 2024.07.03 முதல் 2024.07.23 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். குறித்த நேரத்தில் கேள்வி ஆவணங்கள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்களை காசு செலுத்தாமலேயே பரீட்சிக்கும் ஆற்றல் இருப்பதுடன், மேலதிக விபரங்கள் தேவைப்படின் 025 - 2225397 தொ.பே.இலக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

04. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள், மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறு உறைகளில் இட்டு அவற்றை மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு 2024.07.24 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு சுகாதார அமைச்சின் பெறுகைக் குழு, "சுகாதார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபை கட்டிடத் தொகுதி, வடமத்திய மாகாணம், அநுராதபுரம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சேவையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். சேவைக்காக பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவை மாகாண ஆயுர்வேத ஆணையாளரால் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் சமர்ப்பிக்கும் விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

05. இது சம்பந்தமான பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.07.17 மு.ப. 11.00 இற்கு சுகாதார அமைச்சு, மூன்றாம் மாடி, மாகாண சபைக் கட்டிடத்தொகுதி, வடமத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024.07.24ம் திகதி மு.ப. 11.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் எந்தக் கேள்விப் பத்திரங்களும் ஏற்கப்படமாட்டாது என்பதுடன், கேள்வி திறக்கப்படும் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07. இப் பெறுகை விடயங்கள் சம்பந்தமாக வட மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர் / தலைவர்,**
**சுகாதார அமைச்சு பெறுகைக் குழு,**
**சுகாதார அமைச்சு,**
**வடமத்திய மாகாணம்**
**2024.07.03**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தளை

### வைத்தியசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக விலைமனு கோரல்

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் திடீர் விபத்து மற்றும் ஆரம்ப சிகிச்சைப் பிரிவை நிர்மாணித்தல் மற்றும் ஒதுக்கப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியசாலையொன்றை நிர்மாணித்தல் எனும் வேலைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளன. அதனால் இதன்பொருட்டு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துகொண்டுள்ள தகைமை மற்றும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து 2024-07-17ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| ஒப்பந்த இல. | ஒப்பந்த வேலை | ஒப்பந்தத்தின் பெறுமதி (வெட் வரி மற்றும் ஏனைய வரிகள் இன்றி) | CIDA வகைப் படுத்தலின் பிரகாரம் தரம் | ஒப்பந்தக் காலம் | விலைக்கோரல் பிணை முறி | | விலை மனுவின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி | செல்லுபடிக் காலம் | |
| MT/ 2024/05 OPD-PCU | Extension of Existing OPD Building (stage-1) | 20.0 மில்லியன் ரூபா | C – 5 & C - 6 | 90 நாட்கள் | ரூபா 250,000.00 | 119 நாட்கள் | 91 நாட்கள் |
| MT/ 2024/04 Condemning Stores | Renovation of New Condemning Stores | 3. 35 மில்லியன் ரூபா | C – 6 & C - 7 | 90 நாட்கள் | ரூபா 40,000.00 | 105 நாட்கள் | 77 நாட்கள் |

02. விலைமனு ஆவணங்களை 2024-07-03ஆம் திகதி முதல் 2024-07-16ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தினுள் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமையை நிரூபிப்பதற்கான சாட்சி மற்றும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா விலைக்கோரல் ஆவணக் கட்டணத்தை (ஒரு வேலைக்கு) மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவிற்குப் பணம் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளப்படும் 172 பொது மாதிரிப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் வைத்தியசாலைக்கு வருகை தந்து குறித்த இடத்தை பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் குறித்த ஒப்பந்தம் தொடர்பில் ஏதேனும் சிக்கல்களை தெளிவுபடுத்திக்கொள்வதற்காக 2024-07-10ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். விலைமனுதாரர்களினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனை மற்றும் திருத்தங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-07-17ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். ஒப்பந்தக்காரர்கள் குறித்த இரண்டு வேலைக்காகவும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதானால் வெவ்வேறான உறைகளில் இட்டு விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "Extension of Existing OPD Building (stage-1)" எனவும் " Construction of New Condemning Stores" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்தவுடன் அதாவது 2024-07-17ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தளை.**
**2024-07-01.**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - நாவலப்பிட்டிய

### SUPPLY, DELIVERY & INSTALLATION OF OFFICE EQUIPMENTS AND HOSPITAL EQUIPMENTS

நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கீழ்க்காணும் "OFFICE EQUIPMENTS AND HOSPITAL EQUIPMENTS" கொள்வனவு செய்வதற்கு தகைமையுடைய வழங்குநர்களிடமிருந்து பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் திறத்தல் 2024.07.25 மு.ப. 11.30 இற்கு இடம்பெறுவதால் அன்றே மு.ப. 11.30 இற்கு முன் கிடைக்குமாறு, கேள்விகளை அனுப்புமாறு அறிவித்துக் கொள்கிறேன். கேள்விப் பத்திரங்கள் தலைவர், பிரதேச பெறுகைக்குழு "மாவட்ட வைத்தியசாலை - நாவலப்பிட்டிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப முடிவதுடன் கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் தலைமையகத்தில் பொறியிடப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்திற்கு முன்பு உள்ளிடலாம். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விகள் திறக்கப்படும் "தினம்" மற்றும் குறித்த "பெக்கேஜின் பெயரை" குறிப்பிட வேண்டும்.

| Package No | Item No. | Brief description of the type of Good | Quantity | Bid Bond 120 Day | Delivery period |
|---|---|---|---|---|---|
| Supply Delivery & Installation Of Office Equipment | 1 | Office Table | 24 | 40000.00 | 30 Days from the date of Agreement signed |
| | 2 | Office Chairs | 54 | | |
| | 3 | Carbon Fiber Chairs | 80 | | |
| | 4 | Laser Printer B/W | 01 | | |
| | 5 | Refrigerator (180L) | 01 | | |
| | 6 | Air Conditioner | 02 | | |
| | 7 | High Back Chair | 01 | | |
| Supply Delivery & Installation Of Hospital Equipment 02 | 1 | 5 Functioning Bed | 01 | 40000.00 | 30 Days from the date of Agreement signed |
| | 2 | Hospital Bedside Table | 16 | | |
| | 3 | Wheelchairs | 16 | | |
| | 4 | Gang Chairs (4-Seater) | 20 | | |
| | 5 | Patient Trolley | 06 | | |
| | 6 | Patient Mattress | 24 | | |
| | 7 | Wooden Bed 6x4 With Mattress | 01 | | |
| | 8 | Wooden Bed 6x3 With Mattress | 07 | | |
| | 9 | Towel Rack | 07 | | |
| | 10 | Wardrobe with Mirror | 06 | | |
| | 11 | Steel Locker Cupboard with 6 Drawers | 04 | | |

01. கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்தந்த பெக்கேஜிற்காக வேறுவேறாக ரூ. 2000.00 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமொன்றை, நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் வியாபார பதிவுத் சான்றிதழின் உறுதிசெய்த பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். 2024.07.04 முதல் 2024.07.24 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் நாவலப்பிட்டிய பொது வைத்தியாசலையின் கணக்குப்பிரிவில் கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். பிரதிநிதியொருவர் வருகை தரும்போது விண்ணப்பதாரியின் அதிகாரம் வழங்கிய கடிதம் மற்றும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

